# அக்னி மலர்கள்

Rs. 25 ■ Agni Malarkal ■ Vol: 10 ■ Issue : 6 ■ February - 2023 ■ Monthly Magazine ■ Tamil





ஈரோடு இடைத்தேர்தல்
அதிமுக - காங்கிரஸ் நேரடி மோதல்



## வெற்றி யாருக்கு..?
## முதற் கட்ட பதிவு






## Methra are the Leaders in Innovation Construction Technology

CELL O CON Autoclaved Aerated Concrete Blocks and our new range of products are made with internationally proven state of the art technology.



*Managing Director*
**Dr. P. Venkatesan**
*M.E (Structures), MBA, Ph.D*

### Our Product Range

- AAC BLOCKS
- REINFORCED AAC PANELS
- AERATED LIGHT WEIGHT SOLID WALL SYSTEM
- FLY ASH BRICKS
- PAVER BLOCKS
- DESIGNER PAVER TILES
- COVER BLOCKS
- HEAT PROOF TILES
- DRY MIX MORTAR AND PLASTER
- GYPSUM LIME PLASTER
- TILE ADHESIVE
- WATER PROOFING MEMBRANE
- PRE CAST FENCING
- HYDROPHOBIC WALL PUTTY
- HIGH DENSITY CONCRETE BLOCKS
- CONSTRUCTION CHEMICALS
- THERMAL PROOF TILES

## METHRA INDUSTRIES INDIA PVT. LTD.

791,Poonamallee High Road, Arumbakkam, Chennai - 600 106
+91 44 2363 8652, +91 94444 44002, +91 94450 11001, +91 +91 94450 11004, +91 94450 11005
methra.sale@gmail.com - methraindustries@rediffmail.com - marketing@methras.in
methrascellocon methrascellocon

**CHENNAI - COIMBATORE - BANGALORE** www.methrascellocon.com

# வலைப்பக்கத்தில் கவர்ந்தவை!




வெற்றிகளை சந்தித்தவன்
இதயம்
பூவை போல் மென்மையானது
தோல்வி மட்டுமே சந்தித்தவன்
இதயம்
இரும்பை விட வலிமையானது
-விவேகானந்தர்



நீ பட்ட துன்பத்தை விட
அதில் நீ பெற்ற அனுபவமே
சிறந்தது
-விவேகானந்தர்

வாழ்வது எப்படி
எனப் புலம்பாதே?
காலையில் கூட்டிலிருந்து
புறப்படும் பறவைக்கு
இரை இருக்கும் இடம்
தெரிந்தா பறக்கிறது?

சுமக்கத் தெரிந்து கொண்டால்
சுமைகளும் சுலபம்தான்...
சாதிக்க பழகிவிட்டால்
தடைகளும் சவால்தான்...

எத்தனை நாள் பழகினோம்
என்பது முக்கியமில்லை,
எத்தனை நாள்
உண்மையாக பழகினோம்
என்பதே முக்கியம்...

நாம் நேசிக்கும் ஒருவர் நம்
அன்பை புரிந்து கொள்ளாமல்
நம்மை விட்டு பிரிந்தால்!
முதல் நாள் அழுதிடுங்க..
இரண்டாம் நாள்
கவலைபடுங்க...
மூன்றாம் நாள் சிந்தியுங்கள்...
நம் பாசத்திற்கு சிறிதுகூட
அருகதை இல்லாத
ஒருவருக்காக நாம்
கவலை கொள்வதில்
என்ன இருக்கிறது?


உரிமை இல்லாத உறவும்
உண்மை இல்லாத அன்பும்
நேர்மை இல்லாத நட்பும்
நம்பிக்கை இல்லாத வாழ்க்கையும்
என்றும் நிரந்தரமில்லை...

கீழே விழுந்தவனைக்
கண்டு சிரிக்காதே...
நீ செல்லும்
பாதையிலே
பாசியும் உண்டு...!
பள்ளமும் உண்டு..!!

சிரிப்பவர்கள் எல்லோரும்
கவலையின்றி வாழ்பவர்கள்
இல்லை
கவலையை மறக்க
கற்று கொண்டவர்கள்

வெற்றியை விட
தோல்விக்கு பலம் அதிகம்
வெற்றி
சிரித்து மகிழ வைக்கும்
தோல்வி
சிந்தித்து வாழ வைக்கும்

தோல்விக்கு இரண்டு
காரணம்
ஒன்று
யோசிக்காமல் செய்வது
இரண்டு
யோசித்த பின்னும்
செய்யாமல் இருப்பது
-ஸ்ரீ கிருஷ்ணர்



பெண்கள் இல்லை என்றால்
ஆண்களுக்கு ஆறுதல் சொல்ல
ஆள் இல்லை
பெண்களே இல்லை என்றால்
ஆறுதலே தேவை இல்லை
-சார்லி சாப்ளின்

உன்னை குறை கூறும்
பலருக்கு
உத்தமனாக வாழ்வதைவிட
உன்னை நம்பும் சிலருக்கு
நல்லவனாய் இரு

## ஈரோடு இடைத்தேர்தல்
## அதிமுக - காங்கிரஸ் நேரடி மோதல்

# வெற்றி யாருக்கு..? முதற் கட்ட பதிவு



**ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தல் பிப்-27 ஆம் தேதி நடைபெறுகிறது. இந்த தேர்தலில் திமுக கூட்டணி சார்பில் கடந்த முறை போட்டியிட்ட காங்கிரஸ் கட்சி சார்பில் ஈவிகேஎஸ் இளங்கோவன் பேசியிருப்பதாவது.**

அதிமுக சார்பில் கடந்த முறை தேர்தலில் போட்டியிட்டு தோற்ற தமிழ் மாநில காங்கிரஸ் கட்சி ஆதரவுடன் அதிமுக வேட்பாளர் முன்னாள் அமைச்சர், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கே.வி.ராமலிங்கம் போட்டியிடுவார் என்பது உறுதியாகிறது. இந்த தொகுதியில் மொத்த வாக்காளர்கள் 2,28,402 இது கடந்த தேர்தலை விட சுமார் 15000 வாக்காளர்கள் அதிகம் இடம் பெறுகிறார்கள். கடந்த 2016 தேர்தல் முடிவு அதிமுக வேட்பாளர் கே.எஸ்.தென்னரசு 64879 வாக்குகள் பெற்று வெற்றிப்பெற்றார். திமுக சார்பில் போட்டியிட சந்திரகுமார் 57085 வாக்குகள் பெற்று தோல்வியடைந்தார். 2016-ல் மொத்த வாக்காளர்கள் 212703 அப்போது பதிவான வாக்குகள் 1,047,425. தற்போது வாக்காளர்களின் எண்ணிக்கை உயர்ந்து உள்ளதால் வரும் தேர்தலில் வாக்கு பதிவின் சதவிகிதம் கூடுதலாக பதிவாக வாய்ப்பு உள்ளது. சுமாராக கடந்த தேர்தலில் 60 சதவிகிதத்திற்கு மேல் வாக்குகள் பதிவான நிலையில் தற்பொழுது நடைபெறும் தேர்தலில் சுமாராக 1,80,000 வாக்குகள் பதிவாவதற்கு வாய்ப்பு உள்ளது. இதன்படி சுமார் 40,000 வாக்குகள் கூடுதலாக

பதிவாகலாம். இந்த இடைத்தேர்தல் அதிமுகவுக்கும், திமுகவுக்கும் சுயபரிசோதனையை தோற்றுவிக்கும் ஒரு தேர்தலாகும். ஒருவேளை இந்த தேர்தல் முடிவு அதிமுகவுக்கு சாதகமாக அமையுமானால் இடைக்கால பொதுச்செயலாளராக இருக்கும் எடப்பாடி பழனிசாமியை நிரந்தர பொதுச்செயலாளராகும் வாய்ப்பு உருவாகும். அதே நேரம், ஆளுங்கட்சியான திமுகவுக்கு இது மிகப் பெரிய சவாலாக உருவெடுக்கும். அது மட்டுமல்ல அடுத்த ஆண்டு நடைபெறவிருக்கும் (2024) நாடாளுமன்ற தேர்தலில் இதன் தாக்கம் எதிரொலிக்கும். ஒருவேளை தோல்வி அடைந்தது காங்கிரஸ் வேட்பாளர் என்று சொல்லி திமுக தன்னை ஆறுதல்படுத்திக் கொண்டாலும் இந்த ஒன்றரை ஆண்டு திமுக ஆட்சிக்கு ஏற்பட்ட சரிவாக தான் இந்த தேர்தல் முடிவு எடுத்துக்கொள்ளப்படும். ஒருவேளை அதிமுக தோல்வியை சந்தித்தால் எடப்பாடி பழனிசாமிக்கும் அதிமுகவிற்கும் எந்த விதமான பாதிப்பும் ஏற்படபோவதில்லை. காரணம் ஏற்கனவே அதிமுகவில் உட்கட்சி பிரச்சனை இருப்பதால் கூட்டணி கட்சிக்குள் ஒற்றுமையின்மை இரட்டை இலை சின்னம் இல்லாமல் போனால் சுயேட்சை சின்னத்தில் போட்டி யிட்டது இப்படி பல்வேறு காரணங்களால் அதிமுக தனது செல்வாக்கை இழந்ததாக கருத முடியாது. இதனால் இந்த இடைத்தேர்தல் என்பது திமுகவிற்கும், அதிமுகவிற்கும் நேரடி போட்டியாகவும் எடப்பாடி பழனிசாமிக்கும் அவரை எதிர்த்து அதிமுகவில் பிளவை ஏற்படுத்துகிற ஓ.பன்னீர்செல்வம் மற்றும் சசிகலா, தினகரன் போன்றவர்களுக்கும் சரியான பதிலடியை தரக்கூடிய ஒரு தேர்தலாக இது அமையும். அதே நேரம் ஆளுங்கட்சியான திமுகவிற்கும் முதல்வர் ஸ்டாலினுக்கும் மிகப் பெரிய அளவில் சவாலாக அமையும். எப்படி இருந்தாலும் இந்த தேர்தலில் வெற்றிப்பெறுவதற்கான அனைத்து வழிகளையும் அதிமுக தரப்பினரும் திமுக தரப்பினரும் தேர்தல் களத்தில் தங்களை முன்னிறுத்தி கொள்வார்கள். காங்கிரஸ் வேட்பாளர் தோல்வியுற்றால் நாடாளுமன்ற தேர்தலில் காங்கிரஸ் கட்சிக்கு கொடுக்க வேண்டிய இடஒதுக்கீட்டை குறைத்துக் கொள்ளலாம் என்ற அளவில் உடன் பிறப்புகள் இடைத்தேர்தலில் ஒதுங்கி கொள்ளும் வாய்ப்பும் ஏற்படலாம். களம் எப்படி இருக்கிறது என்பதை பொறுத்திருந்து பார்ப்போம்.

மத்திய அரசின் பார்வையும் அதிமுகவிற்கு எந்த அளவிற்கு இந்த தேர்தலில் உதவியாக இருக்கும் என்பதும் இந்த இடைத்தேர்தல் தமிழ்நாட்டு மக்களுக்கு ஒரு தகவலையும் ஒரு புரிந்துணர்வை ஏற்படுத்தும் அளவிற்கு இந்த இடைத்தேர்தல் ஒரு வாய்ப்பாக அமையும்.

–டெல்லிகுருஜி


# அக்னி மலர்கள்

Editor / Publisher
**R.Panneerselvam**

Executive Editor
**Dr.R.Kannan**
**Delhi Guruji**
**Kavingar Anbudeepan MA., (Dharmapuri)**

Special Reporter
**Peyrumthazmilan**

Sub-Editor
**Agri.Dr.R.Venugopal M.Sc.,(Ag)**
**P.Shanmugam B.Sc.,(Ag.,)**
**N.Vijayarani B.Sc.,**
**R.Govindharaj**

Cheif Reporter
**Dinesh B.E.,**

Reporter
**K.Kannan BE.,**
**V.A.K.Kumarasamy B.Com., L.L.B.,**

Legal Advisors
**Judge K.Ramasamy BA.,BL.,**
**V.Gopinathan BA.,BL.,**
**V.Mohan BA.,BL.,**
**G.Sukumaran,**
**Associates & Consultants**
**Advocate, Editor-in-Chief, Bangalore**
**Ph: 97400 66322, (080)22213049**


**Advocate, Editor-in-Chief, Bangalore**
**Ph: 97400 66322, (080)22213049**


Layout
**V.Iyamperumal**

D.T.P.
**K.Vidhya**

Administrative Office
**Agnimalarkal**
**No.5, Muthukrishnan Street,**
**Pondy Bazar, T.Nagar**
**Chennai - 600 017**
**Ph : 044-28153055, 044-28154055**

email:
**agnimalarkalmonthly@gmail.com**


www. agnimalarkal.com

மருத்துவத்துறையின் சாதனை!

# மூலத்திற்கு நவீன லேசர் சிகிச்சை வழிகாட்டுகிறார் டாக்டர் கண்ணன்!

**இந்தியாவில் ஒவ்வொரு ஆண்டும் ஒரு கோடி பேருக்கும் மேற்பட்டவர்கள் மூலத்தால் பாதிக்கப்படுகின்றனர். பொதுவாக மூலம் 45 முதல் 65 வயது உள்ளவர்களுக்கு அதிகளவில் காணப்படும்.**

கிராமங்ளைவிட நகரங்களில் உள்ளவர்களுக்கு மூலநோய் அதிகளவில் வருகிறது. ஆசனவாயில் வலியற்ற ரத்தப்போக்கு, அரிப்பு, எரிச்சல், வீக்கம் மற்றும் வலி போன்றவை மூலநோய்க்கான அறிகுறிகள். இதற்கு நவீன லேசர் சிகிச்சை மூலம் சிகிச்சையளிக்கப்படுகிறது என்கிறார் டாக்டர் கண்ணன். நிரந்தர தீர்வு உண்டா என்ற கேள்விக்கு பதிலளிக்கிறார் டாக்டர்.



## மூலம் ஏற்பட காரணம்?

ஆசனவாயில் உள்ள ரத்த நாளத்தில் அழுத்தம் ஏற்படுவதால் மூலம் ஏற்படுகிறது இதற்கு அடிப்படைக் காரணங்களாவன. மலச்சிக்கல், நீண்ட நேரம் கழிவறையில் உட்கார்ந்து இருத்தல், குறைந்த நார்ச்சத்து உள்ள உணவு உண்ணுதல், உடல்பருமன், நீண்ட நாள் வயிற்றுப்போக்கு, கர்ப்ப காலம், கல்லீரல் அழற்சி நோய் மற்றும் மலக்குடல் புற்றுநோய் போன்ற காரணங்களால் மூலநோய் ஏற்படலாம். மேலும் பரம்பரைக் காரணங்களாலும் மூலம் ஏற்படலாம்.

## மூலத்தின் நிலைகள்

மூலத்தை நான்கு பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

1.முதல் நிலையில் ரத்தப்போக்கு இருக்கும். சதை வெளித்தள்ளாது. வலி இருக்காது.

2.இரண்டாம் நிலையில் மூலம் வெளியே வந்து தானாகவே சென்று விடும்.

3.மூன்றாம் நிலையில் வெளியே வரும் மூலத்தை கையால் உள்ளே தள்ள முடியும்.

4.நான்காம் நிலையில் மூலம் ஆசனவாய்க்கு கீழே தள்ளிய நிலையிலேயே இருக்கும். (Prolapsed Piles)-.

## பரிசோதனை முறைகள்

மருத்துவரின் ஆலோசனையின் பேரில் ரத்தப் பரிசோதனை ப்ராக்டோஸ்கோப்பி (Proctoscopy) சிக்மாய் டா ஸ்கோப்பி (Sigmoidoscopy) மற்றும் கொலனாஸ்கோப்பி போன்று பரிசோதனைகளில் உங்களுக்குரிய பரிசோதனையை நீங்கள் மேற்கொள்ள வேண்டி இருக்கலாம்.

## மூலத்தின் நிலைகளுக்கேற்ப சிகிச்சைகள்

முதல் நிலை மற்றும் இரண்டாம் நிலை மூலம் உள்ளவர்கள் மலச்சிக்கலை





தவிர்க்க வேண்டும். அதிக நார்ச்சத்து உள்ள உணவுகளை (காற்கறிகள், பழங்கள் மற்றும் கோதுமை) அதிகமாகவும், மாவுச்சத்து உள்ள உணவுகளை குறைவாகவும் எடுத்துக்கொள்ள வேண்டும். மேலும் அதிகளவு தண்ணீர் உட்கொள்வதன் மூலம் மலச்சிக்கலை தவிர்க்கலாம். மலமிளக்கிகளை (Laxatives) எடுத்துக்கொள்வதன் மூலம் மலச்சிக்கலை தடுக்கலாம்.

வீங்கி முடிச்சு போல் உள்ள ரத்தக் குழாய்களை ஸக்லெரோதெரபி அல்லது லேசர் சிகிச்சை மூலம் சுருங்கச் செய்யலாம். மூன்றாம் மற்றும் நான்காம் நிலை மூலத்தை மருந்தால் குணப்படுத்த முடியாது. அறுவை சிகிச்சை மூலமாகவும், லேசர் மூலமாகவும் மற்றும் அதிநவீன ஸ்டேப்ளர் சிகிச்சை மூலமாகவும் மட்டுமே குணப்படுத்த முடியும்.

## லேசர் சிகிச்சையின் சிறப்பு

லேசர் மூலமாக எல்லா நிலை மூலத்தையும் குணப்படுத்த முடியும். ஆரம்ப நிலை மூலத்திற்கு (முதல் மற்றும் இரண்டாம் நிலை) லேசர் கதிரை மூலத்தின் மேல் செலுத்தி உள்ளிருக்கும் ரத்தத்தை உறையச் செய்வதே சிறந்த சிகிச்சை முறையாகும். முற்றிய நிலை மூலத்தை (மூன்றாம் மற்றும் நான்காம் நிலை, லேசர் மூலம் சிகிச்சை செய்வதால், ரத்த இழப்பு இருக்காது. வலி மிகக் குறைவாகவே இருக்கும். மருத்துவமனையில் ஒரு நாள் மட்டும் இருந்தால் போதுமானது. விரைவில் பழைய நிலைக்கு திரும்பி நாம் அன்றாட வேலைகளை கவனிக்கலாம்.

## ஸ்டேப்ளர் (Stapler) சிகிச்சையின் சிறப்பம்சங்கள்.

மற்ற அறுவை சிகிச்சைகளுக்கு பயன் படுத்தப்படும் ஸ்டேப்ளர் போன்று அல்லாமல் மூலத்திற்காகவே பிரத்தியேகமாக வடிவமைக்கப்பட்ட நவீன கருவிதான் PPHO3 எனப்படும் ஹெமராய்டல் ஸ்டேப்ளர்

ஆகும். இந்த கருவியைக் கொண்டு ஆசனவாயின் உட்பகுதியில் மூலத்துடன் கூடிய சதையை எடுத்த பிறகு அந்த இடத்தை 'ஸ்டேப்ளர் பின்'னால் இணைப்பது தான் இந்த சிகிச்சையின் சிறப்பம்சமாகும். இந்த சிகிச்சையின் போது ஆசனவாய்க்கு மேலுள்ள தசைகளை அதிகம் கிழிக்காமல் வேண்டிய அளவு மட்டுமே கிழிப்பதால் மலம் வெளியேறுவதைக் கட்டுப்படுத்தும் சக்தி ஆசனவாய்க்கு அப்படியே இருக்கும்.

## ஸ்டேப்ளர் சிகிச்சையின் சாதகங்கள்

1. ரத்த இழப்பு இருக்காது. வலியோ மிக மிகக்குறைவு.
2. ஒரு நாள் மட்டுமே மருத்துவமனையில் இருந்தால் போதும்.
3. உடனடியாக பழைய நிலைக்கு திரும்பி அன்றாட வேலைகளைச் செய்யலாம்.
4. சிகிச்சைக்கு பிறகு Dressing SITS Bath மற்றும் நீண்ட நாட்களுக்கு மருந்து மாத்திரைகள் தேவையில்லை.


எனவே இதனை மூலநோய்க்கான மிக நவீன சிகிச்சை முறை என்றே சொல்லலாம்.

## 20 ஆயிரம்+ பேருக்கு சிகிச்சையளித்த மருத்துவர்

இரைப்பை, குடல், கல்லீரல், புற்று நோய், உடல் பருமன் இவற்றிற்கான லேப்ரோஸ்கோப்பி, மற்றும் லேசர் அறுவை சிகிச்சை நிபுணர்.

சென்னையில் பிரபலமான வயிறு மற்றும் குடலியல் அறுவை சிகிச்சை நிபுணர் டாக்டர் ஆர்.கண்ணன் அவர்கள் குடல் இறக்கம், கல்லீரல் மற்றும் கணைய அறுவை சிகிச்சை (FALS, HPS) இரைப்பை, உணவுக்குழாய் சம்பந்தமான அறுவை சிகிச்சை (FALS UGI) பெருங்குடல், சம்பந்தமான அறுவை சிகிச்சை (FALS, COLORECTAL) மற்றும் உணவுப்பாதையில் ஏற்படும் புற்று நோய்க்கான அறுவை சிகிச்சை (FALS, ONCOLOGY) போன்ற அனைத்து துறைகளிலும் இந்தியாவிலேயே முதன் முதலாக அனைத்து பட்டங்களையும் (Fellowship in Advanced Laparoscoic Surgery) பெற்றவர்.

மூலம், பவுத்திரம் போன்ற ஆசனவாய் சம்பந்தமான பிரச்சனைகளுக்கு லேசர் மூலமாக (20000 மேல்) சிகிச்சை அளித்து




வருபவர்களில் இந்திய அளவில் மிகவும் முக்கியமானவர்.

## எண்டோஸ்கோப்பி, பெருங்குடல் உள்நோக்கு பிரிவுகளில் (FIAGES, E-FIAGES) பட்டங்களை பெற்றவர்.

கிராமம் மற்றும் நகரந்தோறும் பல இலவச மருத்துவ முகாம்களை நடத்தி மருத்துவ சேவையை தொடர்ந்து அளித்து வருகிறார். மக்களுடன் மருத்துவம் என்னும் நிகழ்ச்சி மூலம் மருத்துவம் சம்பந்தமான சந்தேகங்களை தெளிவுப்படுத்தி வருகிறார். தொண்டு நிறுவனங்களிடமிருந்து மருத்துவ சேவைக்காக பல விருதுகளை பெற்றுள்ளார். இதுமட்டுமல்லாமல் இளம்வயதிலேயே சேவை மனப்பான்மையுடன் மருத்துவ துறையில் அறுவை சிகிச்சை செய்து சாதனை படைத்து வருகிறார்.


Prime Indian Hospitals
Changing Lives...

1051, Poonamallee High Road,
Arumbakkam, Chennai-600 106
Ph : 91-44-2363 9999, 91 98844 93140
Email: primeindianhospital@gmail.com

# நாடாளுமன்றத் தேர்தலில் கைசின்னத்தில் கமலஹாசன் போட்டி...!

**ராகுல்காந்தியின் பாரத் ஒற்றுமை யாத்திரை, தொடர் பயணத்தில் டெல்லியில் நடைபெற்ற பொழுது அதில் நடிகர் கமலஹாசன் தன் ஆதரவாளர்களுடன் பங்கேற்றார்.**



அதன் பின் இரண்டு நாட்கள் டெல்லியில் தங்கியிருந்து ராகுல்காந்தி அவர்களுடன் அரசியல் ஆலோசனை நடத்திய பொழுது மக்கள் நீதி மையத்தை காங்கிரஸ் கட்சியில் இணைத்து விடுங்கள் அல்லது காங்கிரஸ் கூட்டணியில் சேர்ந்து கொள்ளுங்கள் என்ற அளவில் ராகுல்காந்தி கமலஹாசன் ஆலோசனை நடைபெற்றது. இந்த ஆலோசனையை ஏற்றுக் கொண்ட நடிகர் கமல் காங்கிரஸ் கட்சி சார்பில் எதிர்வரும் 2024 நாடாளுமன்ற தேர்தலில் போட்டியிடுவதற்கு சம்மதம் தெரிவித்ததோடு கிருஷ்ணகிரி நாடாளுமன்ற தொகுதியில் போட்டியிட விரும்புவதாகவும் தனது விருப்பத்தினை ராகுல்காந்தியோடு தெரி வித்ததோடு திமுக கூட்டணியில் அதிக இடங்களை காங்கிரஸ் கேட்டு பெறவேண்டும் என்றும் தனது கருத்தினை எடுத்துக் கூறினார் நடிகர் கமல்.

ஒருவேளை கூடுதல் இடங்கள் தருவதற்கு திமுக யோசிக்கும் பொழுது என்ன செய்யப்போகிறீர்கள் என்ற கேள்வியும் முன் வைத்தாராம் நடிகர் கமல். இதற்கு ராகுல்காந்தியின் பதில் எப்படி இருந்தாலும் நீங்கள் எங்களோடு இருங்கள். நீங்கள் மக்கள் நீதிமையத்தை காங்கிரஸ் கட்சியோடு இணைத்து விட்டால் தமிழ்நாட்டு காங்கிரஸ் கட்சி பதவியை கூட உங்களுக்கு தருவதாக இருக்கிறேன். அதே நேரம் எந்த காரணம் கொண்டும் திமுக கூட்டணியில் இருந்து காங்கிரஸ் வரும் நாடாளுமன்ற தேர்தலில் வெளியேறும் எண்ணம் தற்பொழுது வரை இல்லை. அப்படி ஒரு சூழல் ஏற்பட்டால் காங்கிரஸ் கட்சியின் தலைமையில் ஒரு அணியை உருவாக்குவது குறித்து நாம் ஆலோசிக்கலாம். அதுவரை பொறுத்திருங்கள் என்று கூறிய ராகுல்காந்தி ஒற்றுமை யாத்திரை நிறைவுபெற்றப் பிறகு மீண்டும் டெல்லிக்கு வாருங்கள் அப்பொழுதும் நாம் நாடாளுமன்ற தேர்தல் குறித்தும் தமிழக அரசியல் நிலவரங்கள் குறித்தும் ஆலோசனை நடத்தலாம். அதன் மூலம் ஒரு தீர்க்கமான முடிவுக்கு வரலாம் என்று கூறியுள்ளார். இதனை ஏற்றுக் கொண்ட நடிகர் கமலஹாசன் தனது மக்கள் நீதி மய்யம் கட்சி நிர்வாகி களுடன் ராகுல்காந்தியின் கருத்துக்களை கலந்து ஆலோசித்தவுடன் பாஜக கட்சியின் எதிர் முகாமில் நின்று அரசியல் செய்வதற்கு முடிவு செய்துவிட்டாராம். இதனால் வரும் நாடாளுமன்ற தேர்தலில் நடிகர் கமலஹாசன் காங்கிரஸ் கை சின்னத்தில் போட்டியிடுவார் என்பது உறுதியாய் தெரிகிறது.

**- டெல்லிகுருஜி**

வீரப்பன் பிறந்தநாள்

# காட்டுவாசியின் கண்ணீர் கடிதம்..!

**வீரப்பன் வாழ்ந்த காலங்களில் மேற்கு தொடர்ச்சி மலைகளில் காடுகளும் மரங்களும் வனவிலங்குகளும் பாதுகாப்பாக இருந்தன என்று செய்தியாளருக்கு பேட்டி அளிக்கும் பொழுது வீரப்பனே ஒப்புதல் வாக்குமூலம் அளித்திருக்கிறார்.**

ஆனால் அவன் மறைவிற்குப் பின் இன்று சந்தன கட்டைகள் காட்டு மரங்கள் கடத்துவது நின்றபாடில்லை. இதற்கு பொறுப்பானவர்கள் யார் என்று இதுவரை காவல்துறையால் அடையாளம் காணப்படவில்லை. ஆனால் அங்கொன்றும் இங்கொன்றுமாக மரங்கள் கடத்தப்பட்டதாகவும் யானை தந்தங்கள் பிடிப்பட்டதாகவும், தகவல்கள் அவ்வவ்பொழுது செய்திதாள்களிலும், தொலைக்காட்சிகளிலும் அறிவிப்புகள் வெளிவந்துக் கொண்டிருக்கின்றன. வீரப்பன் மீது எண்ணற்ற வழக்குகள். வீரப்பன் சுட்டுக்கொல்லப்பட்ட விதமே இன்றும் புரியாத புதிராக உள்ள நிலையில் வீரப்பன் ஒரு சகாப்தம் என்று சிலர் கூறுகின்றார்கள். காட்டில் மறைந்து வாழ்ந்த பொழுதும் அவன் பலருக்கு பணம் காய்க்கும் மரமாகவே தென்பட்டான். அவன் காவல்துறையால் கொல்லப்பட்டப் பிறகும் பணம் காய்க்கும் மரமாகவே வாழ்ந்துக் கொண்டிருக்கிறார். யானை இருந்தாலும் ஆயிரம் பொன், இறந்தாலும் ஆயிரம் பொன் என்பார்கள். அதுபோல் வீரப்பன் உயிருடன் வாழ்ந்த காலத்தில் பல கடத்தல்காரர்கள் பணம் சம்பாதிப்பதற்கு துணையாக இருந்தான்.

அக்னிமலர்கள் வாசகர்களுக்காக வெளியிடப் படுகிறது... !



வீரப்பன் காவல்துறையால் சுட்டுக் கொல்லப்பட்டப் பிறகு திரைப்படம், தொலைக் காட்சி கதைகளில் அவர் கதாநாயகனாக வலம் வந்து பல தயாரிப்பாளர்களுக்கு கோடிக் கணக்கில் பணம் சம்பாதிப்பதற்கு காரணமாக அமைந்தார். ஆனால் வீரப்பன் கொலை கொள்ளை, ஆட்கடத்தல் போன்ற செயல்களில் ஏன் ஈடு பட்டான் என்கின்ற கேள்விக்கும் யாருக்காக இந்த செயல்களில் அவன் ஈடுபட்டிருந்தான் என்பதற்கும் வீரப்பன் பெயரை சொல்லி கோடிக்கணக்கான பணத்தை சம்பாதித்தவர்கள் யார் என்ற கேள்விக்கும் இன்றுவரை தெளிவான பதில் இல்லை. பிறகு ஏன் அவன் இதுபோன்ற செயல்களில் ஈடுபட வேண்டும் என்ற கேள்வி எழும்மானால் கூடா நட்பும், சந்தர்ப்பம் சூழ்நிலையும் போதிய கல்வி அறிவும், இல்லாமலே அவன் வாழ்க்கைக்கு கேடாய் அமைந்துள்ளது. மூன்று மாநில காவல்துறையும், அதிரடிப் படையும் பலமுறை அவனை தேடுதல் வேட்டை என்ற பெயரில் சுட்டு வீழ்த்துவதற்கு முயற்சி செய்தாலும் அவைகளை எல்லாம் வென்று மலைகளிலும் காடுகளிலும் மிக சமார்த்தியமாக மறைத்து வாழ்ந்த வீரப்பன் மாய வலையில் சிக்கியது போல் காவல்துறையின் பட்டுக்கூடு வலையில் சிக்கிக் கொண்டான். இதுவே வீரப்பன் கொலையாவதற்கு வலையாக மாறியது. காவல்துறைக்கு உளவு சொன்னவர்கள் பல வீரப்பனுக்கு தகவல்



தந்தவர்கள் சிலர், ஆனால் இதற்கு நடுவில் சில அப் பாவி பெண்களும், ஒரு பாவமும் அறியாத ஆண்களும் எத்தனை முறை பாதிக்கப் பட்டார்கள், எதற்காக பாதிக்கப்பட்டார்கள் ஏன் துன்புறுத்தப்பட்டார்கள், சில நேரங்களில் பெண்களும், ஆண்களும் ஆடையின்றி அடைத்து வைக்கப்பட்டார்கள். இதுபோன்ற கேள்விகளுக்கெல்லாம் வீரப்பன் ஒருவனே அனைத்து குற்றங்களுக்கும் ஆளாகினான் என்பது தான் கதை. ஆனால் எத்தனை வீரப்பன்கள், எத்தனை கடத்தல்காரர்கள் வீரப் பனுக்காக அழுதார்கள், குரல் கொடுத்தார்கள், என்பது போன்ற கேள்விகளுக்கெல்லாம் இதுவரை பதில் இல்லை. செத்தும்கொடுத்தான் சீத காதி என்பது போல் வீரப்பன் இறந்த பிறகும் காவல்துறையில் பணியாற்றிய பலருக்கு பதவி உயர்வும், பட்டா நிலமும், கொடுப்பதற்கு காரணமாக இருந்தான் என்பது வரலாறு. இவ்வளவுக்கு பிறகும் இன்றும் மேற்கு தொடர்ச்சி மலைகளில் காடுகளில் விலங்குகளும் மரம் செடி கொடிகளும், வீரப்பன் பெயரை உச்சரித்து கொண்டிருப்பதாக மலைவாழ் மக்கள் கட்டியம் கூறுகிறார்கள். ஆனால் எங்கள் குலசாமி வீரப்பனுக்கு மணிமண்டபமும் அமைப்பதற்கு காவல்துறை சார்பில் தடைகள் விதித்தாலும் அதை மீறி நினைவிடம் அமைப்பதற்கு ஒருவர் கூட முன்வரவில்லையே என்பது மலைவாழ் மக்களின் ஏக்கமாகவும் கேள்வியாகவும் இருந்துவருகிறது. வன்னியர் இனத்தை சேர்ந்தவன் என்பதால் வீரப்பனுக்கு வன்னியர்களும் குரல் எழுப்ப தயங்குகிறார்கள்.

காட்டுவாசிகளின் குலத்தெய்வமாக இன்றும் இருந்து வரும் வீரப்பனுக்கு பிறந்த ஜனவரி 18 ஆம் தேதி.

# பாமக - விசிக : திமுக கூட்டணியில் நாடாளுமன்ற தேர்தலை சந்திக்குமா...?



**திமுக கூட்டணியில் இடம் பெறுவதற்காக பாமக கட்சி முயற்சித்து வருவதாகவும் அதன் மூலம் வரும் நாடாளுமன்ற தேர்தலில் திமுகவிடம் சீட்டு பேரம் பேசாமல் கொடுப்பதை பெற்றுக் கொண்டு கூட்டணியில் இடம் பெற்று 10.5 சதவிகிதம் தனி உள்ஒதுக்கீட்டை எப்படியும் பெற்றுவிட வேண்டும் என்று பாமக கணக்கு போடுவதாக ஊடகங்கள் பிரச்சனையை ஊதி பெரிதாக்கி வருகிறது.**

இதனால் ஏற்கனவே திமுக கூட்டணியில் இடம் பெற்று சட்டமன்ற உறுப்பினராகவும் நாடாளுமன்ற உறுப்பினராகவும் இருந்து வரும் விடுதலை சிறுத்தைகள் கட்சியும் தொல்.திருமாவளவனும் திமுக கூட்டணியில் இருந்து வெளியேறுவதற்கு யோசித்து வருவதாகவும் ஊடகங்களும், பத்திரிகைகளும் செய்திகளை வெளியிடுகின்றன. பாமக கட்சிக்கும், விடுதலை சிறுத்தைகள் கட்சிக்கும் எப்பொழுதும் மோதல்போக்கு இருந்ததில்லை.

அதே நேரம் பட்டியலினத்தவர்களும் பாமக மக்களும் பெரும்பாலான கிராமங்களில் அருகருகே வசித்து வருபவர்கள் தான். எங்கோ ஒரு தவறு நடந்துவிட்டால் இரண்டு சமுதாயத்தையும் இணைத்து செய்திகள் வெளியிட்டு ஊடகங்களும், பத்திரிகைகளும் மிக பெரிய அளவில் மோதல் போக்கு இருப்பதாக சித்தரிப்பதும், இரு கட்சிகளும் மோதிக் கொள்கின்ற அளவிற்கு செய்திகளை வெளியிடுவதும் ஊடகங்கள், தொலைக்காட்சிகள், பத்திரிகைகள் தானே தவிர திருமாவளவனும், டாக்டர் அன்புமணி ராமதாசும் நேருக்கு நேர் ஒருவரும் மோதிக் கொண்டதில்லை. ஒருவரை ஒருவர் தரம் தாழ்த்தி பேசிக்கொள்வதும் இல்லை. நிலைமை இப்படி இருக்க திமுகவில் இருக்கும் ஒருசிலர் திருமாவளனையும் முழு மனதோடு ஏற்றுக்கொள்ள விரும்பவில்லை. அதே போல் டாக்டர் அன்புமணி ராதாசையும் முழு மனதோடு ஏற்றுக்கொள்ள சிலருக்கு விருப்பம் இல்லை. இந்த நிலையில் திமுக கூட்டணி வலுப்பெற்று அந்த கூட்டணியில் பாமகவும் இடம் பெற்றால் வட தமிழகம், தென் தமிழகம் மொத்தம் உள்ள 39 நாடாளுமன்ற தொகுதிகளிலும் திமுக கூட்டணியே வெற்றிப்பெறும் என்பதை பொறுத்துக்கொள்ள முடியாத சிலர் முன்னெச்சரிக்கையாகவே பாமக, திமுக கூட்டணியில் இடம்பெற கூடாது என்பதையும் பாமக இடம் பெற்றால்





விடுதலை சிறுத்தைகள் வெளியேறிவிடும் என்பதை போலவும் செய்திகளை பரப்பி விடுகிறார்கள். இதுபோன்ற செய்திகளையும், வதந்திகளையும் நம்பி திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஏமாறுவதற்கு தயாராக மாட்டார் என்பதே பலரது கருத்தாக உள்ளது. ஒருவேளை கூட்டணியில் பாமக இடம் பெற்றால் 10.5 சதவிகிதம் உள் இடஒதுக்கீட்டை வலியுறுத்தக் கூடும் என்பதால் திமுகவில் உள்ள சிலர் அவர்கள் வரவேண்டாம் என்று நினைத்தால் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நாடாளுமன்ற தேர்தலில் 39 தொகுதிகளையும் சுலபமாக வெற்றிப்பெற முடியாது என்பதை உணர்ந்து செயல்படுவார் என்பதை திமுகவில் உள்ள மூத்த நிர்வாகிகள் சிலரும் பொதுச்செயலாளர் துரை முருகனும் உணர்ந்துள்ளார்.

பொதுச்செயலாளர் என்ற முறையில் அமைச்சர் துரைமுருகன் பாமக கட்சி திமுக கூட்டணியில் இடம் பெற்றால் 39 நாடாளுமன்ற தொகுதிகளிலும் திமுக தலைமையிலான கூட்டணி வெற்றிப் பெறும் என்று கணக்கு போடலாம். ஆனால் டாக்டர் ராமதாஸ் அவர்கள் தொடர்ந்து திமுக அரசையும், பாராட்டியே வருகிறார்.

முதல்வர் அவர்களையும் பாராட்ட தவறுவதில்லை. இவற்றையெல்லாம் கணக்கிட்டு பார்த்தால் பாமக கட்சி திமுக கூட்டணியில் இடம் பெறுவதை போல் தோன்றினாலும் இறுதி முடிவை கட்சியின் தலைவர் அன்புமணி ராமதாஸ் அவர்களே எடுப்பார் என்பதில் உறுதியாக நம்பலாம். தற்பொழுது 12 நாடாளுமன்ற தொகுதிகளில் பாமக கட்சி முழு கவனம் செலுத்தி புதிய உறுப்பினர்கள் சேர்த்து புது நிர்வாகிகளையும் ஆங்காங்கே நியமித்து வருவதுடன் மக்கள் பிரச்சனையை கையில் எடுத்து டாக்டர் அன்புமணி ராமதாஸ் தொகுதிவாரியாக தனது சுற்றுப்பயணத்தை நடத்தி வருகிறார்.

எனவே தற்பொழுது திமுக கூட்டணியில் இடம் பெற்றுள்ள தோழமை கட்சிகள் தொடர்ந்து நாடாளுமன்ற தேர்தலை சந்திப் பதற்கு தயாராகி கொண்டு வருகிறார்கள். பாமக கூட்டணியில் வருவதால் திருமாவளவன் திமுக கூட்டணியை விட்டு எக்காரணம் கொண்டு வெளியேறமாட்டார்

# தமிழக காங்கிரஸ் தலைவர் மாற்றம்!



தமிழக காங்கிரஸ் தலைவராக கே.எஸ்.அழகிரி நியமிக்கப்பட்டு நான்கு ஆண்டுகள் ஆகின்ற நிலையில் வெகு விரைவில் தமிழகத்திற்கு புதிய தலைவரை நியமிக்க டெல்லி காங்கிரஸ் மேலிடம் முடிவு செய்துள்ளது. காங்கிரஸ் தலைவர் தேர்வில் தற்பொழுது லிஸ்டில் இடம் பெற்றிருப்பவர்கள் டாக்டர் விஷ்ணுபிரசாத் முதலிடத்திலும், டாக்டர் செல்வகுமார் இரண்டாவது இடத்திலும் கரூர் நாடாளுமன்ற தொகுதி உறுப்பினர் ஜோதிமணி மூன்றாம் இடத்திலும் இருக்கிறார்கள். அகில இந்திய அளவில் காங்கிரஸ் கட்சியின் தலைவராக மல்லிகார்ஜுனா கார்கே தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு சில மாநிலங்களுக்கு புதிய நிர்வாகிகளை நியமித்து வருகின்றார். அந்த வகையில் தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி மாநில பொறுப்பாளராக கர்நாடக மாநிலத்தை சேர்ந்த தினேஷ்குண்டுராவ் மீண்டும் நியமிக்கப்பட்டுள்ளார். இவரது பரிந் துரையை ஏற்று தமிழ்நாட்டுக்கு புதிய தலைவர் விரைவில் நியமிக்கப்படுவார். இதற்கு ஏற்றார்போல் தினேஷ்குண்டுராவ் மற்றும் வேணுகோபால் இருவரும் கலந்து ஆலோசித்து புதிய தலைவரை தேர்வு செய்து ராகுல்காந்திக்கு பரிந்துரை செய்வார்கள். பின்னர் சோனியாகாந்தி, பிரியங்காகாந்தியின் ஆலோசனைக்குப் பிறகு தமிழ்நாடு காங்கிரஸ் கட்சிக்கு புதிய தலைவர் நியமனம் அறிவிப்பு வெளியாகும்.

–டெல்லிகுருஜி

# சட்டமன்ற பேரவையில் ஓபிஎஸ் இடம் மாற்றப்படுமா?



அதிமுகவின் உட்கட்சிப் பிரச்சனை உயர்நீதிமன்றத்தில் தொடங்கி உச்சநீதி மன்றம்வரை சென்றுள்ள நிலையில் உச்சநீதி மன்றத்தின் ஓ.பன்னீர்செல்வம் தரப்பு வாதம் எடுத்துவைக்கப்பட்டுள்ளது. அந்த வாதத்தில் இணைஒருங்கிணைப்பாளர் என்ற பதவியை தேர்தல் மூலம் தேர்ந்தெடுத்ததாக கூறப்பட்டது. அதனால் ஒருங்கிணைப்பாளர் பதவியில் தொடர்வதாக ஓ.பன்னீர்செல்வம் கூறினாலும் எடப்பாடி பழனிசாமி இடைக்கால பொதுச்செயலாளர் தேர்வு செய்யப்பட்டு இன்றுவரை அந்த பதவியில் அவர் தொடர்கிறார். பொதுக்குழு செயற்குழு முடிவின் படி இந்த தேர்வு செல்லுமா, செல்லாதா என்பதை எடப்பாடி தரப்பில் இருந்து உச்சநீதிமன்றத்தில் எடுத்து வைக்கப்படுகிறது. அந்த வாதத்தின்படி ஓ.பன்னீர்செல்வத்தை தேர்வு செய்தது செல்லும் என்றால் எடப்பாடி பழனிசாமியை தேர்வு செய்ததும் செல்லும் என்பது உறுதியாகி விடும். அதன்படி எடப்பாடி பழனிசாமி இடைக்கால பொதுச்செயலாளராக என்பது உறுதிசெய்யப்படும் என்ற தீர்ப்பை உச்சநீதிமன்றம் வழங்குவதற்கான வாய்ப்பு உள்ளது ஓ.பன்னீர்செல்வம் அவர்கள் ஒருங்கிணைப்பாளர் என்பது காலவாதி ஆகி விடும்.

– டெல்லிகுருஜி

## ஓ.பி.எஸ்-ஐ சந்தித்த ஜெ. தீபா:



எதிர்காலத்தில் அரசியலுக்கு வருவது கடவுளின் கையில்தான் இருக்கிறது என்று ஜெ. தீபா தெரிவித்துள்ளார்.

அதிமுகவில் தற்போது இரட்டை தலைமை பிரச்சனை தொடர்ந்து கொண்டிருக்கிறது. அதிமுக முழுவதுமாக ஒன்றிணைந்து செயல்பட வேண்டும் என்று சசிகலா கூறியிருந்தார். மேலும் அதற்கான வேலைகளும் செய்து வருவதாக அவர் கூறினார். ஈரோடு கிழக்கு தொகுதியில் நடைபெறும் தேர்தலில் எடப்பாடி பழனிசாமி அணியினர் அவர்களது வேட்பாளரை நேற்று அறிவித்தனர்.

இந்நிலையில் ஓ. பன்னீர் செல்வம் சார்ப்பில் இதுவரை வேட்பாளர் அறிவிக்கப்படவில்லை. மேலும் அதிமுக இரட்டை இலை சின்னம் தொடர்பான சர்ச்சை தொடர்ந்து கொண்டு இருக்கிறது. இந்நிலையில் ஓ. பன்னீர் செல்வத்தை ஜெ. தீபா சந்தித்தார். அப்போது அவர் பேசியதாவது " குடும்ப நிகழ்ச்சிக்காக அவரை அழைக்க வந்துள்ளேன். அரசியலைத்தாண்டி அவரை எனக்கு தெரியும் என்பதால் அவரை அழைக்க வந்திருக்கிறேன். இனி நான் அரசியலுக்கு வருவது கடவுளின் கையில்தான் இருக்கிறது." என்று அவர் கூறினார்.

## அதானி குழுமம் பங்கு சந்தையில் படு வீழ்ச்சி...! ஆராய்ச்சி தகவல்கள்


இந்தியாவின் பிரபல முன்னணி தொழிலபதிரான அதானி குழுமம் கம்பெனியின் வர்த்தகத்தில் ஏற்பட்டுள்ள சரிவு, பங்கு சந்தையில் மிகப் பெரிய வீழ்ச்சியை கண்டுள்ளது என்பதை Hindenburg Burg Reserch Report வெளிச்சம் போட்டு காட்டியுள்ளது. இதனால் அதானி குழுமத்தில் நிறுவனங்களின் பங்குகள் கடந்த வாரத்தில் பல மடங்கு சரிந்து லட்சக்கணக்கான கோடிகள் வீழ்ச்சியடைந்து சரிவை கண்டுள்ளது. மேலும் இந்த சரிவு என்பது தொடர்ந்தால் சத்தியம் கம்யூட்டர் சந்தித்த அதே நிலைக்கு அதானி குழுமம் செல்லும் வாய்ப்பு ஏற்படலாம் என்கிறது வர்த்தக பரிவர்த்தனை மைய தகவல்கள். இந்தியாவில் மிகப் பெரிய அளவில் தனியார் வர்த்தகத்தை நடத்திவரும் அதானி குழுமம் இவ்வளவு பெரிய வீழ்ச்சியை கண்டிருப்பது இது பல நெருக்கடிகளை அதானி நிறுவனங்களுக்கு உண்டாக்கும் வாய்ப்பு உள்ளது. அதே போல் புதிய தொழில் தொடங்குவதற்கும் இந்த சரிவு ஒரு முட்டுக்கட்டையை ஏற்படுத்தும் என்பதில் ஆச்சரியமில்லை

## உதயநிதிக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவுரை

தொடர்ந்து கடைப்பிடித்துவருகிறார். அமைச்சர் உதயநிதி, விளையாட்டுத்துறை அமைச்சராக பொறுப்பேற்றிருந்தாலும் விளையாட்டாக எதையும் பேசி விடக் கூடாது என்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தன் மகனுக்கு அறிவுரை கூறியுள்ளாராம். (நிகழ்ச்சி ஒன்றில் பேசும் போது ஆளுநரை முதலமைச்சர் சட்டமன்றத்தில் இன்று ஓடவிட்டார்" உதயநிதி பேசியிருந்தார் அதன் பிறகு இந்த ஆலோசனையை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உதயநிதிக்கு வழங்கியுள்ளார்.) அரசியலில் கொஞ்சம் கொஞ்சமாக கற்றுக் கொள்ளும் வரை பதவியில் இருப்பவர்கள் பணிவோடு நடந்துக்கொள்வது வளர்ச்சிக்கு வழிவகுக்கும். என்பதே முதல்வரின் அறிவுரையாகும்.



# பிரதமர் பதவிக்கு முட்டி மோதும் தலைவர்கள்!



**2024 ஆம் ஆண்டு மக்களவைக்கு தேர்தல் வர இருக்கும் நிலையில் இப்போதே அனைத்து கட்சிகளும் வரிந்து கட்டத் தொடங்கிவிட்டன. பாஜக கட்சியின் பிரதமர் வேட்பாளர் நரேந்திர மோடி தான் என அந்தக் கட்சி அறிவித்துவிட்டது.**

இரண்டு முறை பிரதமர் பதவியை ருசித்த மோடியும், மூன்றாம் முறை பிரதமர் நாற்காலியில் அமர்வதற்கும் ஆயுத்தமாகி விட்டார். ஆனால் எதிர்க்கட்சிகள் ஒருங்கிணைந்து பிரதமர் வேட்பாளரை அறிவிக்கவில்லை, அறிவிக்கவும் முடியாது காரணம். எதிர்க்கட்சிகளிடையே ஒற்றுமை இல்லை.

பாரதிய ஜனதா வேண்டாம், காங்கிரசும் வேண்டாம் என்ற நிலையில் பிராந்திய கட்சிகள் பலரும் உறுதியாக உள்ளனர்.

மேற்கு வங்காள முதல்வரும், திரினாமுல் காங்கிரஸ் தலைவருமான மம்தா பானர்ஜி, ஒடிசா முதல்வரும் பிஜு ஜனதா தள தலைவருமான நவீன் பட்நாயக், ஆந்திர முதல்வரும் ஒய்.எஸ்.ஆர்.காங்கிரஸ் தலைவருமான ஜெகன்மோகன் ரெட்டி, தெலுங்கானா முதல்வரும் பி.ஆர்.எஸ். தலைவருமான கே.சந்திரசேகர்ராவ், ஆம் ஆத்மி தலைவரும் டெல்லி முதல்வருமான அரவிந்த் கெஜ்ரிவால், சமாஜ்வாதி கட்சி தலைவர் அகிலேஷ்யாதவ், ஆகிய பெரும் தலைவர்கள் இந்தப் பட்டியலில் அடக்கம்.

இவர்கள் தேர்தலுக்கு முன்பாக ஒரு போதும் பாஜகவுடனோ அல்லது காங்கிரஸ் கட்சியுடனோ கூட்டணி வைத்துக் கொள்ள மாட்டார்கள். தேர்தலுக்கு பிந்தைய நிலைமை அவர்களுக்கே தெரியாது. காங்கிரஸ் கட்சியின் தலைவர் மன்மோகன்சிங், சோனியா, ராகுல் என யாராக இருந்தாலும் சரி பிரதமர் வேட்பாளராக கீழ்க்கண்ட கட்சிகள் தேர்தலுக்கு முன்பாக ஏற்றுக் கொள்ளும்.

1.திமுக, 2.முஸ்லிம் லீக், 3.சிவசேனா 4.ஐக்கிய ஜனதாதளம் 5.ஆர்.ஜே.டி (தேஜஸ்வி) 6.தேசிய மாநாடு (பரூக்அப்துல்லா) 7.மக்கள் ஜனநாயக கட்சி

தேர்தலுக்கு பின்னர், காங்கிரஸ் கட்சி ஆட்சி அமைக்கும் சூழ்நிலை ஏற்பட்டால் இரு கம்யூனிஸ்ட் கட்சிகள், மதச்சார்பற்ற ஜனதாதளம், தெலுங்கு தேசம் போன்ற கட்சிகள் காங்கிரஸ் வேட்பாளரை பிரதமராக ஏற்றுக் கொள்ளும். கடந்த தேர்தலிலேயே ராகுல்காந்தியை பிரதமர் வேட்பாளராக அறிவித்தார் மு.க.ஸ்டாலின் இந்த முறையும், அப்படி அறிவிக்க ஸ்டாலின் தயார். தமிழகத்தில் உள்ள திமுக கூட்டணி கட்சிகளான மதிமுக விடுதலை சிறுத்தைகள் போன்ற கட்சிகளும் ராகுலை பிரதமராக ஏற்றுக் கொள்ளும்.

ஆனால் தாங்களே எதிர்க்கட்சிகளின் பிரதமர் வேட்பாளர் என பல எதிர்க்கட்சி தலைவர்கள் இப்போதே மனக்கோட்டை கட்டிக் கொண்டு, அதற்கான பணிகளையும் தொடங்கிவிட்டனர். அவர்களில்



முதன்மையானவர் தெலுங்கானா முதல்வர் சந்திரசேகர் ராவ். தனித் தெலுங்கானா மாநிலம் கேட்டு போராடிய அவர் அந்த சமயத்தில் தான் உருவாக்கிய கட்சிக்கு தெலுங்கானா ராஷ்டிரிய சமிதி என பெயர் வைத்தார். இரண்டு முறை முதல்வர் பதவி வகித்ததால் சந்திர சேகர்ரவுக்கு பிரதமர் ஆசை துளிர்விட்டுள்ளது. இதனால் தனது கட்சியின் பெயரை பாரதிய ராஷ்டிரிய சமிதி என அண்மையில் மாற்றம் செய்தார்.

சில தினங்களுக்கு முன்பு கம்மம் நகரில் மாநாடு நடத்தினார். கேரள முதல்வர் பினராய் விஜயன், டெல்லி முதல்வர் அரவிந்த் கெஜ்ரிவால் உள்ளிட்டோர் இந்த மாநாட்டில் பங்கேற்றனர். அவர்கள் சந்திரசேகர்ராவை பிரதமர் வேட்பாளராக ஏற்றுக் கொள்வார்களா என்பது சந்தேகம் தான். ஏனென்றால் அரவிந்த் கெஜ்ரிவாலுக்கும் பிரதமர் பதவி மீது நாட்டம் உண்டு.

பினராய் விஜயன், தனது விருப்பப்படி முடிவு எடுக்க இயலாது. மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் தலைமை தான் முடிவு எடுக்கும். டெல்லியை பிடித்த கையோடு பஞ்சாபையும் பிடித்து விட்டார் கெஜ்ரிவால். குஜராத், கோவா மாநிலங்களில் கணிசமாக ஓட்டு வாங்கி, அவரது ஆம் ஆத்மி கட்சி தேசிய கட்சி அந்தஸ்தை பெற்றுவிட்டது. எனவே கெஜ்ரிவாலின் பிரதமர் ஆசையை பேராசை என புறந்தள்ளிவிட முடியாது.

சந்திசேகரராவ், கெஜ்ரிவாலுக்கு அடுத்தப் படியாக பிரதமர் ரேஸில் இருப்பவர் மம்தா பானர்ஜி. வரும் தேர்தலில் காங்கிரசும், பாஜகவும் அறுதி பெரும்பான்மை பெறா விட்டால் திமுக, சமாஜ்வாதி, தெலுங்கு தேசம் உள்ளிட்ட கட்சிகள் தன்னை ஆதரிக்கும் என நம்புகிறார். இந்த மாத (பிப்) இறுதியில் திரிபுரா, நாகலாந்து, மேகாலயா ஆகிய மூன்று வட கிழக்கு மாநிலங்களில் சட்டசபை தேர்தல் நடக்க உள்ளது. இதன் முடிவுகள் வெளியான பிறகு தேர்தல்களம் சூடு பிடிக்கும். பொறுத்திருந்து பார்க்கலாம்.

**–பாப்பாங்குளம் பாரதி**

## ‘மாஜி’க்களுக்கு வாய்ப்பு இல்லை!



**முன்னாள் பிரதமர்கள் இரண்டு பேர், இன்றும் அரசியலில் இருக்கிறார்கள். ஒருவர் மன்மோகன்சிங், இன்னொருவர் தேவகவுடா, காங்கிரஸ் கட்சியின் மன்மோகன் சிங்குக்கு வயதாகி விட்டது. மதச்சார்பற்ற ஜனதா தளம் தலைவர் தேவகவுடாவுக்கு வயது அதிகம், தவிர அவரது கட்சி கட்டெறும்பாக தேய்ந்து விட்டது. எனவே இந்த இரண்டு மாஜிக்களும் பிரதமர் ரேஸில் இல்லை.**

# ஆளுநரின் பிடிவாதம் முதல்வரின் உறுதி!

## நட்பு மலர்கிறது, பிடிவாதம் தளர்கிறது

**தமிழக ஆளுநராக ஆர்.என்.ரவி அவர்கள் பொறுப்பேற்றதிலிருந்து தமிழக அரசியல் களம் சூடுப்பிடிக்க தொடங்கியது. இன்று வரை அந்த சூடு தணியாமல் பார்த்துக் கொள்கிறார் ஆளுநர்.**

பதவியேற்ற நாளிலிருந்து தமிழ் மீதும் தமிழ்நாட்டின் மீதும் பற்று வைத்து தமிழை கற்றுவருவதோடு தமிழின் தொன்மையையும், அரசியலின் அடையாளத்தையும் வெளிப்படுத்தும் அதே நேரத்தில் திராவிடத்திற்கும் திராவிட மாடலுக்கும் அவர் எதிராகவே செயல்படுகிறார் என்ற ஒரு தோற்றம் தமிழ்நாட்டு மக்கள் மத்தியில் உருவகப்படுத்தப்பட்டுள்ளது. சில நேரங்களில் ஆளுநரின் செயல்பாடுகள் சட்டத்திற்கு உட்பட்டு இருந்தாலும் அது தமிழ்நாட்டு மக்களை தாக்குவதாகவே பார்க்கப்படுகிறது. தமிழக அரசியல் களம் என்பது திராவிட என்ற சித்தாந்தத்திற்குள் சிக்கிக் கொண்டது என்று கூறும் பொழுது ஆட்சி அதிகாரத்தில் இருப்பவர்களுக்கு வெறுப்புணர்வை தோற்றுவிக்கிறது. அதே நேரம் மத்திய அரசை ஒன்றிய அரசு என ஆளும் கட்சியும் ஆளும் கட்சியின் தோழமை கட்சிகளும் தொடர்ந்து அழைத்து வருவதை பார்த்து அதற்கு மாற்று ஏற்படாக என்ன செய்யவேண்டும் என்பதற்காக ஆளுநரும் அரசியல்வாதியாக மாறிவிடுகிறார். தமிழ்நாடு என்பதை தமிழகம் என்று அழைக்கலாம் என்று கூறிவிட்டார். இது தமிழ்நாட்டை ஆட்சிகள் செய்யும் அரசியல் கட்சிகளுக்கு வேப்பங்காயாக கசக்கிறது காரணம் தமிழ்நாட்டை ஆண்ட கட்சிகள், ஆளுகிற கட்சிகள் அனைத்துமே திராவிடத்தை முன்னிலைப்படுத்தி தங்கள் செல்வாக்கை தமிழகத்தில் நிலைநிறுத்தி விட்டார்கள்.



அப்படியென்றால் தமிழகத்தில் தமிழர்கள் இல்லையா என்ற கேள்வி இயற்கையாகவே எழுகின்றது. திராவிட சித்தாந்தத்தை மக்கள் மனதில் திணித்த திராவிட கட்சிகள் திராவிடவும் தமிழும் ஒன்று தான் என்று அரைக்கூவல்விடுக்கின்றன.வெளிப்படையாக திராவிடர்களுக்கும், தமிழர்களுக்கும் உள்ள வேறுபாட்டையும் பூர்வீக தமிழர்கள் யார் என்கின்ற அடையாளத்தையும் திராவிட கட்சிகள் அடையாளப்படுத்துவதில் ஆரம்பித்து இருக்கிறார்களா? அல்லது அதை வெளிப்படுத்த மறுக்கிறார்களா என்பது தெரியவில்லை. இருந்தாலும் திராவிடத்திற்குள் தமிழா? தமிழுக்குள் திராவிடமா? என்ற தேடல் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே செல்கிறது இளைஞர்களிடம். ஆனால் தமிழகத்தில் எப்படியும் ஆட்சியை கைப்பற்றிவிட வேண்டும் என்ற நோக்கத்தில் பாஜகவும் அதன் தலைவர் அண்ணாமலையும் அவருக்கு ஏற்றாற்போல் ஆளுநர் ஆர்.என். ரவியும் செயல்படுகிறார்கள் என்பதை

அனைத்துக் கட்சிகளும் அவ்வப்பொழுது நினைவுப்படுத்தி வருகின்றன. கூடவே ஆர்.எஸ்.எஸ்.தமது சித்தாந்தத்தை புகுத்துவதன் மூலம் தமிழ்நாட்டில் தாமரையை மலரச் செய்வதாக செய்திகளை வெளியிடுகிறார்கள் திராவிட கட்சிகள். இதற்கு நேரடியாக மறுப்பு தெரிவிக்காத மத்திய அரசும் ஆளுநரும் தமிழக சட்டமன்றம் அனுப்புகின்ற கோப்புகளை கையெழுத்து இடாமல் காலதாமதம் செய்வதும் சிலர் குறிப்பிட்ட கோப்புகளில் கையெழுத்து இடுவதும் தொடர்வதினால் அவ்வப்பொழுது ஆளுநரும் திமுக ஆட்சிக்கு எதிராக சில கருத்துக்களை வெளிப்படுத்துவதுடன் திராவிடத்திற்கே எதிராக செயல்படுவதாக எண்ணி ஆளுநரை மாற்ற வேண்டும் என்பதை ஆளுநர் பதவியே தேவையில்லை என்பதும் திமுகவும், திமுகவின் தோழமை கட்சிகளும் மக்கள் மன்றத்தின் முன் எடுத்துவைக்கின்ற கோரிக்கையாகும். இந்த நிலையில் தான் ஆண்டின் தொடக்க நிகழ்வான ஆளுநர் உரையுடன் தொடங்கிய சட்டப்பேரவையில் நடந்த நிகழ்ச்சி. ஆளுநர் பேரவையை அவமதித்தார் என்றும் அமைச்சரவை அனுப்பிய செய்திகளை வாசிக்க மறுத்தார் என்றும் திட்டமிட்டே உள்நோக்கத்துடன் சில பெயர்களை குறிப்பிட மறுத்தார் என்றும் தேசிய கீதத்தை அவமதித்தார் என்றும் ஆளுநர் மீது குற்றச்சாட்டுகள் சுமத்தப்படுகின்றது. அதே நேரம் சட்டமன்றத்தில் ஆளுங்கட்சியை சேர்ந்தஉறுப்பினர்கள் அதன் தோழமை கட்சியின் உறுப்பினர்கள் ஆளுநரை முற்றுகையிட்டு அவமதித்தார்கள் என்றும் அது குறித்து விசாரணை நடத்த வேண்டும் என்றும் பாஜக கட்சி சார்பில் புகார் கூறப்பட்டுள்ளது. ஆளுநர் பிடிவாதமாக இருப்பதும் முதல்வர் தங்கள் கருத்தை உறுதியாக நின்று வலியுறுத்துவதும், தொடர்ந்து நடைபெறுவது தொடருமானால் தமிழ்நாட்டின் வளர்ச்சியும், முன்னேற்றமும் எந்த திசையில் செல்லும் என்பதை நினைத்து பார்க்கும் பொழுது ஆளுநரும் அரசியல் பேசுகிறார் அமைச்சர்களும் அரசியல் பேசுகிறார்கள். இதனால் பாதிக்கப்பட போவது தமிழ்நாடும், தமிழ்நாட்டு மக்களும் தான். அவர்களுக்கு பரிகாரம் தேட வேண்டுமே தவிர, அவர்களை



சுட்டிக்காட்டுவதற்காக போராட்டம் நடத்துவது என்பது ஏற்புடையதா என்ற கேள்வி எழுகிறது. இடையில் ஆளுநரும் முதல்வரும் மௌனமாகவே இருக்கிறார்கள். தமிழ் மீதும் அக்கறை உள்ளவர்கள் இருப்பது போல் வீதிக்கு வந்து போராடுகிறார்கள் ஆளுநருக்கு எதிராக நடைபெறும். இந்த போராட்டம் ஆளும்கட்சியை பாதுகாக்க உதவுமா? அல்லது மத்திய அரசின் கோபத்திற்கு ஆளாகுமா என்பதை பொருத்திருந்து தான் பார்க்க வேண்டும்.

**– பெ.த.**






# செய்தியாளர்களின் கனிவான பார்வைக்கு..! அரசியல் தலைவர்களுக்கு கவன ஈர்ப்பு....!

**செய்தியாளர்கள், ஊடகத்துறை சார்ந்தவர்கள், தொலைக்காட்சியில் பணியாற்றுபவர்கள், வார இதழ், மாத இதழ் என்று இதழ்களில் பணியாற்றுபவர்கள், சோசியல் மீடியாக்களில் பணியாற்றுபவர்கள், பேஸ் புக், வாட்ஸ் அப், ட்விட்டர் இவைகள் மூலம் செய்திகளை வெளியீடுபவர்கள் அனை வரும் பத்திரிகை சுதந்திரத்தை முறையாக பயன்படுத்தவும்! செய்தியாகக் கூடாது.**

அதன் மூலம் தங்கள் கடமையை நிறைவேற்றவும் மக்களுக்கு உரிய நேரத்தில் தகவல்களையும், செய்திகளையும் கொண்டு சேர்ப்பதில் கடமை உடையவர்கள். எந்த ஒரு அரசியல் கட்சிக்கோ எந்த ஒரு அரசியல் தலைவருக்கோ அல்லது ஒரு தனி மனிதருக்கோ இழுக்கு ஏற்படுகின்ற வகையில் செய்தியாளர்கள் செயல்பட கூடாது. அதுமட்டும் அல்ல. ஒருவரின் அனுமதியின்றி அவரை புகைப்படம் எடுப்பதோ, அல்லது ரகசியமாக அவரது பேச்சை பதிவு செய்வதோ, எந்த வகையிலும் ஏற்புடையது அல்ல. அனுமதி பெற்ற பிறகு தான் தங்கள் கடமையை நிறைவேற்ற வேண்டுமே தவிர, ஒற்றாய்வு முறையில் தகவல்களை சேகரிப்பு என்பது புலனாய்வு இதழ்களில் பணியாக எடுத்துக் கொண்டாலும் அதற்கும் ஒரு வரைமுறையை நாம் கடைப்பிடிக்க வேண்டும். தவறினால் விபரீத விளைவை ஏற்படுத்தும். பல நேரங்களில் குறிப்பாக போர்முனை நிகழ்ச்சிகளில் பங்கேற்கும் போதோ அல்லது முக்கிய பிரமுகர்கள் பங்கேற்கும் நிகழ்ச்சியில் கலந்து கொள்வதில் சில தடங்கல்களும், தடைகளும் வரலாம்.

ஆனால் இவைகளை கடந்து நம் கடமையை நிறைவேற்றுவதற்கு முயற்சிக்க வேண்டுமே தவிர, சட்டத்தை மீறி தங்கள்

அதிகாரத்தை பயன்படுத்தி தவறான பாதையில் சென்று தங்களுக்கு அவமானத்தை தாங்களே தேடிக் கொள்வதும் அதன் பிறகு அதற்கு பரிகாரம் தேடி பத்திரிகையாளர்களை ஒன்றிணைத்து போராட்டத்தில் ஈடுபடுவதும் குறிப்பாக முன்னணி பத்திரிகை நிறுவனங்களில் ஏற்படுகின்ற பாதிப்புகளுக்கு செய்தியாளர்கள் ஒன்றிணைந்து குரல் கொடுப்பதும் போராட்டம் நடத்துவதும் தொடர்ந்து நடைப்பெற்றால் சிறு, குறு பத்திரிகையாளர்கள் பாதிக்கப்படும் பொழுது அவர்கள் மீது தாக்குதல் நடைபெறும் போதும் அவர்களுக்கு ஏற்படுகின்ற இழப்புகளை கண்டும் காணாமல் விலகிச் செல்வதும் ஏற்புடையது அல்ல என்பதை உணர்ந்து செயல்படும் எந்த ஒரு நிறுவனமும் எந்த ஒரு நிறுவனத்தின் பணியாளர்களும் தங்கள் கடமையை தவறாமல் செய்பவர்களாக கருதப்பட வேண்டியவர்கள்.

மாறாக ஒரு குறிப்பிட்ட அரசியல் கட்சியின் ஊடகங்களுக்காகவும் அல்லது பல கட்சிகள் நடத்தும் ஊடகங்களுக்காகவும் மட்டுமே நாங்கள் குரல் எழுப்புவோம் என்று கூறுவது எத்தகைய ஜனநாயக கடமை என்பதை ஒவ்வொரு பத்திரிகையாளர்களும்




உணர்ந்து செயல்பட வேண்டியது மிக மிக அவசியம் ஆகும். பல முன்னணி பத்திரிகைகள் ஒரு பத்திரிகையாளரை எந்த நேரத்தில் வேண்டுமானாலும் அந்த நிறுவனத்தில் இருந்து பணியில் இருந்து நீக்குகின்ற அல்லது விடுவிக்கின்ற அதிகாரம் அந்த நிறுவனத்திற்கு முழுமையாக உண்டு. ஆனால் திடீரென்று ஒருவர் பணியில் இருந்து நீக்கப்பட்டால் அவரது குடும்பம் என்ன ஆகும் என்பது குறித்து எந்த ஒரு பத்திரிகையாளரும் நினைத்துப் பார்ப்பது இல்லை. பாதிக்கப்பட்டவர்களுக்காக எந்த வகையிலும் குரல் எழுப்புவதில்லை. இப்படிப்பட்ட நிலையில் தான் பத்திரிகையாளர்களின் வாழ்வாதாரம் நிலையற்றதாகவும் நிரந்தரம் இல்லாததாகவும் போய்க் கொண்டிருக்கிறது.

இவற்றையெல்லாம் உணர்ந்துக் கொண்டு எந்த ஒரு பத்திரிகை நிறுவனமும் எந்த ஒரு செய்தியாளர்களையும் பணியில் அமர்த்துவதில்லை. பணியில் இருந்து வேலையை விட்டு நீக்குவதும் இல்லை. விரும்புகிறவரை வேலை தருவார்கள் விருப்பமில்லையென்றால் வேலையை விட்டு நீக்குவார்கள் இதுதான் எதார்த்த நிலை. நிலைமை இப்படி இருக்க ஒரு பத்திரிகையாளர் ஒரு அரசியல் கட்சி தலைவரிடம் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்றும் இப்படியெல்லாம் நடந்துக்கொள்ள கூடாது என்றும் யாரும் பயிற்சி அளிப்பதில்லை. ஆனால் பிரச்சனை என்று வந்துவிட்டால் அந்த பிரச்சனைக்குரியவரின் வாழ்க்கையே பிரச்சனையாகி விடுகிறது. அன்றாடம் உணவுக்கும் அன்றாடம் குடும்பத்திற்கு தேவையான வசதி வாய்ப்புக்கும் திண்டாடும் நிலையே ஏற்படுகிறது. சில நேரம் உயிருக்கே உத்திரவாதம் இல்லாத பணியாகவே பத்திரிகையாளர்களின் பணியும், வாழ்வும் நிரந்தரமற்ற தன்மையோடு அன்றாடம் ஊசல் ஆடிக் கொண்டிருப்பது தான் பத்திரிகையாளர்களின் பணியாகும்.

பல வழிகளில் செய்திகளை சேகரிப்பதில் தவறில்லை. ஆனால் ஒரு செய்திளார் ஒரு அரசியல் கட்சியின் தலைவர் மனவருந்தும் படி ஒரு செய்தியாளரால் சூழல் ஏற்படும் பொழுது அல்லது அத்தகைய சூழல் உருவாகும் பொழுது பாஜக கட்சி தமிழ் மாநில தலைவர் அண்ணாமலை போன்றவர் சற்றும் எதிர்பாராதவிதமாக கோபப்படுகின்ற அளவிற்கு தள்ளப்பட்டுவிடுகின்றார்கள். பிறகு செய்திளார்களே செய்தியாகும் நிலை ஏற்பட்டு விடுகிறது. இதுபோன்ற சம்பவங்களையும் அரசியல்கட்சி தலைவர்களும் ஊடகவியலாளர்களும், ஊடக விமர்சகர்களும், பத்திரிகையாளர்களும், செய்தியாளர்களும் தவிர்ப்பது நன்மை தரும். செய்தியாளர் கேள்விகளுக்கு கட்டாயம் பதிலளிக்க வேண்டிய அவசியம் இல்லை. அதே போல் விரும்பாத ஒரு கேள்வியை திரும்ப திரும்ப ஒரு கட்சியின் தலைவரிடம் விடாப் பிடியாக கேட்பதும் நியாயம் இல்லை. இது பத்திரிகை தர்மமும் அல்ல.

# கரும்பில் நாற்று நடவு

## முன்பட்டத்தில் விரும்பு





*கரும்பின் பிறப்பிடம் இந்தியா, தமிழகத்தில் கோவையில் கரும்பு இனபெருக்க நிலையமும், கடலூர், சிறுகமணி, மேலாலாத்தூர் (குடியாத்தம்) ஆகிய இடங்களில் தமிழகத்தில் கரும்பு ஆராய்ச்சி நிலையங்கள் இருந்து கரும்பில் ஆராய்ச்சிகள் நடந்து கொண்டிருந்தாலும் கரும்பு சாகுபடியில் செலவை குறைத்து உற்பத்தியை பெருக்கும் தொழில்நுட்பங்கள் தேவையான நிலையில் தான் இருந்து வருகிறோம். நெல்சாகுபடியில் ஏக்கருக்கு 25 கிலோ விதை விதைத்து 2500 கிலோ நெல் மகசூல் அறுவடை செய்வது சாத்தியமாக இருந்து வருகிறது. இன்றைய நிலையில் எஸ்.ஆர்.ஐ என்னும் செம்மை நெல்சாகுபடி முறையில் 2 1/2கிலோ (இரண்டரை கிலோ நெல்) விதையில் ஒரு ஏக்கர் நடவு செய்வது நிரூபிக்கப்பட்டு மிக அதிக அளவில் எஸ்.ஆர்.ஐ முறை நெல் நடவு பழக்கப்பட்டு வழக்கத்தில் உள்ளது. ஆனால் கரும்பு சாகுபடியில் ஏக்கருக்கு 4 மெ.டன் விதைக்கரணை பயன்படுத்தி 40 மெ.ட கரும்பு மகசூல் அறுவடை செய்வது வழக்கமாக உள்ளது. அதாவது விதை மகசூல் விகித சாரம் 1:10 கரும்பில், நெல்லில் 1:100. இந்த சூழ்நிலையில் உழைக்கும் உழவர் பெருமக்களும், விவசாய விஞ்ஞானிகளும் சிந்தித்து செலவை குறைக்க மாற்று வழியும் பணத்திற்கு ஊற்று வழியாகவும் இருக்கும். தொழில்நுட்பத்தை கண்டுப்பிடித்து பயன்படுத்த வேண்டியது இன்றைய காலத்தின் கட்டாயம்.*



**இரா.வேணுகோபால்**
**விவசாய நிபுணர்**
செல்: 8754087278







கரும்பு சாகுபடியில் ஒரு பரு கரணை, இரு பரு கரணை, மூன்று பரு கரணைகளை கரும்பு விதையாக பயன்படுத்தி வருவது யாவரும் அறிந்ததே. கரும்பில் கரணை நடவுக்கு மாற்றாக கரும்பு நாற்று நடவு என்பது பல ஆண்டுகட்கு முன்பே சில இடங்களிலும், நன்செய் நிலங்களில் (Wet land) பல ஏரியாக்களில் முயற்சி செய்து சரியான தொழில்நுட்பமும், நாற்று நடவுக்கு ஏற்ற பட்டமும் தெரிந்து, புரிந்து சாகுபடி செய்யாததால், இந்த நாற்று நடவுமுறை கைவிடப்பட்ட தொழில்நுட்பமாக இருந்தது.

'Winners are not doing differtthings
They are doing things differently'
-Shiv khera

என்ற வெற்றியின் வார்த்தையைப் போல, நாம் புதியதாக செய்யாவிட்டாலும் இருக்கும் தொழில் நுட்பத்தை வித்தியாசமாக அப்பியாசப்படுத்தி செய்தால் நிச்சயம் பலன்கிடைக்கும் என்பதில் சிறிதளவும் ஐயம் இல்லை. விதைக் கரும்பில் பருவின் இருபக்கமும், அங்குல இடைவெளி இருக்குமாறு கூர்மையான கத்தி கொண்டு ஒரு பருகரணைக்களை தயார் செய்து கொண்டு, ஒரு மீட்டர் அகலம் கொண்ட மேட்டுபாத்தியை (ஸிஷீஜீமீபீ தீமீபீ) தயார் செய்து அதில் தொழுஉரம், வேப்பம் பிண்ணாக்கு, டிரைகோடெர்மா பூசனுமும், சூடோமோனாஸ் பாக்டீரியா நுண்ணுயிர்களும் கலந்து, சமப்படுத்தி மேலும் பாத்தியின் மேல்பரப்பில் மண்புழு உரத்தை மெல்லிய அளவில் பரப்பு, பஞ் சகவ்யா கரைசலில் ஊறவைத்த ஒரு பரு கரணைகள் மேட்டுப் பாத்தியில் வரிசையாக பருக்கள் பக்கவாட்டில் உள்ளவாறு அடுக்கி அதன்மேல் 1 செ.மீ அளவு அங்கக உரம் கலந்த மண்ணைத் தூவி அதன்மேல் கரும்பு சோகையை பரப்பி நீர்கொடுக்க வேண்டும். மண்ணின் ஈரத் தன்மை அறிந்து தினமும் நீர் தெளித்து வரவேண்டும். மேலும் 5தாவது நாள் மேட்டுப் பாத்தியில் பரப்பிய சோகைகளை அப்புறப்படுத்த வேண்டும். 8வது நாளில் கரும்பு முளைத்து வருவது தெரியும்.

நிலத்தில் பயிர்சத்துக்கள் குறைவாக இருப்பின் DAP 5gm + Urea 5gm ஒரு சதுர மீட்டருக்கு என்ற அளவில் மேட்டுப் பாத்தியில் இட்டு தேவையான அளவு நீர் கொடுக்க வேண்டும். கரணை நட்ட ஒரு மாதத்திற்குள் 4-5 இலைகளுடன் கரும்பு நாற்று வளர்ந்து நடவுக்கு தயாராகி விடும்.

இந்த கரும்பு நாற்றுக்களை மேட்டுப்பாத்தியி லிருந்து வேர்கள் அறுபடாமல் எடுத்து மண்புழுஉர கரைசலில் (1 கிலோ மண்புழு உரம் + 10 லிட்டர் நீர்) ஊறவைத்து எடுத்த நாற்றுக்களை, நடவு வயலில் வரிசைக்கு வரிசை 1 மீட்டர் இடைவெளியில் அமைத்த பாரின் பள்ளப்பகுதியில் 40 செ.மீ இடைவெளியில் வரிசையாக நட்டு, உரமிட்டு, நீர்பாசனம் செய்து, களையெடுத்து, பயிர் பாதுகாப்பு

## கரும்பில் கரணை நடவு / நாற்று நடவு & ஒரு கண்ணோட்டம் (ஏக்கருக்கு)

| வ.எண். | விபரங்கள் | கரணை | நாற்று |
|---|---|---|---|
| 1. | கரும்பு விதை அளவு | 4 மெ.டன் (அ) 30,000 இருபரு அதாவது 60,000 ஒரு பருக்கள் | 1 மெ.டன் (அ) 15000 ஒரு பருக்கள் 10,000 நாற்றுக்கள் |
| 2. | முளைப்பு | 68% (அல்லது) 40000 பயிர்கள் | 90% தழைப்பது அல்லது 9000 பயிர்கள் |
| 3. | கிளைப்பு | 100000 | 45000 |
| 4. | கிளைப்பு விகிதம் | 2.5 | 5.0 |
| 5. | அறவைக்கேற்ற கரும்புகள் | 50,000 | 40000 |
| 6. | கரும்பாகாத கிளைப்புகள் (Unproductive Shoots) | 50,000 | 5000 |
| 7. | ஒரு கரும்பின எடை | 1 (கிலோ) | 1.4 (கிலோ) |
| 8. | ஏக்கருக்கு மகசூல் | 50 (மெ.டன்) | 56 (மெ.டன்) |



முறைகளை கடைப்பிடித்து சீர்மிகு சாகுபடி முறைகளை செவ்வனே கடைபிடித்தால் 4 டன் விதைக்கரணை நடவு செய்த வயலை விட முன்பட்டத்தில் கரும்பு நாற்று நடவு செய்த வயலில் (1டன் விதை உபயோகப்படுத்தி) அதிக மகசூல் பெற்றது ஒரு வித்தியாசமான முன்னேற்றமான கரும்பு நடவு முறையாகும்.


### கவனிக்க வேண்டியவைகள்

1. விதைக் கரும்பில் பருவின் இருபக்கமும் 1 அங்குல இடைவெளி விட்டு கரணை அடிபடாமல் (No Splits) கூர்மையான கத்தி கொண்டு கரணை வெட்டுவது அல்லது Seed Cane Mechanical Cutter பயன்படுத்தி ஒரு பரு கரணை தயார் செய்வது.
2. அதிக அங்கக உரமும், நுண்ணுயிர் கலவையும் போட்டு மேட்டுப் பாத்தியில் கரும்பு நாற்று வளர்ப்பது.
3. மேட்டுப் பாத்தியிலிருந்து வேர் அறுபடாமல் கரும்பு நாற்றுக்களை எடுப்பது.
4. கரும்பு நாற்றின் வேர்பகுதியை மண்புழு உரக்கரைசலில் ஊற வைத்து நடுவது.
5. வரிசையில் நாற்று நடும் இடத்தை நன்கு கொத்தி புழுதியாக்கி அங்கக உரத்துடன் 10gm DAP + 10gm மண்புழு உரம் இட்டு நாற்று நட்டு நீர் கொடுப்பது.
6. கோ.86032 போன்ற அதிக கிளைப்பு திறன் கொண்ட கரும்பு ரகங்களை தேர்வு செய்வது.
7. வேர்கள் மறையும் ஆழத்தில் மட்டும் நடவு செய்வது. (அதிக ஆழத்தில் நாட்டில் அதிக கிளைப்பு கிடைக்காது.)
8. வேர் மண்டலத்தில் (Rhizosphere) உரமிட்டு, நீர்கொடுப்பது.
9. நாற்று எடுத்த அன்றே மாலையில் நடவு செய்வது.
10. முள்பட்டத்தில் மட்டும் இந்த முறையை செய்வது.

### நன்மைகள் :

1. ஒரு டன் விதைக்கரும்பு போதுமானது அதாவது 75 சதவீதம் விதை சேமிப்பு ஏற்படுகிறது.
2. கிளைப்பு விகிதம் கூடுகிறது.
3. தனிக்கரும்பின் எடை கூடுகிறது.
4. அறவைக்கேற்ற கரும்பு விகிதம் அதிகமாக உள்ளது.
5. 6 டன் கரும்பு மகசூல் முன்பட்டத்தில் அதிகமாக கிடைக்கிறது.

ஆதலால் முன்பட்டத்தில் (டிசம்பர்-ஜனவரி) கரும்பு சாகுபடி செய்யும் விவசாயிகள் தங்கள் நிலத்திற்கு தகுந்தவாறு கரும்பு நாற்று நடவு முறையில் பயிரிட்டு 3 டன் விதை சேமிப்பும், 6 டன் அதிக மகசூலும் பெற்று "கரும்பு சாகுபடி கனமான வரும்படியாக மாற்றி வாழ வேண்டுகிறோம்.




# நட்புக் கட்சிகளால் ஏமாற்றம் அடைந்த காங்கிரஸ்

**பாரத் ஜோடோ யாத்திரையில் 8 எதிர்கட்சிகள் மட்டுமே பங்கேற்றுள்ளன. இது காங்கிரஸ் கட்சிக்கு ஏமாற்றத்தை ஏற்படுத்தி உள்ளதாக கூறப்படுகிறது.**

கடந்த ஆண்டு செப்டம்பர் 7ம் ஆம் தேதி தொடங்கிய காங்கிரஸ் கட்சியின் ஒற்றுமைப் பயணம் 150 நாட்களுக்கு பிறகு ஜம்மு காஷ்மிரில் நிறைவடைந்தது.

இந்த யாத்திரை தொடங்கும்போது, பல விமர்சனங்கள் எழுந்தது. மேலும் இந்த யாத்திரையை முழுவதும் நிறைவு செய்ய இயலாது என்று கூறப்பட்டது. ஆனால் எல்லா விமர்சனங்களுக்கு, முற்றுப்புள்ளி வைக்கும் அளவில் ராகுல் காந்தி இந்த யாத்திரையை நிறைவு செய்துள்ளார். வழியெங்கும் அவருக்கு மக்களின் ஆதரவு கிடைத்தது.

ஆனால் அரசியல் வெற்றிக்கு எதிர்கட்சியின் ஆதரவும் தேவை என்பதால், யாத்திரையின் இறுதி நிகழ்வில் பங்கேற்குமாறு 23 எதிர்கட்சிகளுக்கு காங்கிரஸ் கட்சியின் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே கடிதம் எழுதினார்.

ஆனால் இதில் 8 எதிர்கட்சிகள் மட்டுமே கலந்துகொண்டன. மேலும் காங்கிரஸ் கட்சி எதிர்பார்த்த ஜே.டி. யு மற்றும் ஆர்.ஜே.டி இரு கட்சிகளுமே யாத்திரையில் பங்கேற்கவில்லை. மேலும் ஸ்ரீநகரில் நடந்த இறுதி நிகழ்விலும் பங்கேற்கவில்லை.

ஆனால் என்.சி.பி, சிவசேனா, ஜே.எம்.எம் மற்றும் திமுக உள்ளிட்ட கட்சிகள் பல்வேறு இடங்களில் இந்த யாத்திரையில் பங்கேற்றனர். ஆதித்யா தாக்கரே, சுப்ரியா சுலே ஆகிய இருவரும், மகாராஷ்டிராவில் யாத்திரை வந்தபோது அங்கே கலந்துகொண்டனர். சஞ்சய் ராவத் ஜம்முவில் இணைந்தார்.

ஸ்ரீநகரில் கடும் பனிப் பொழிவு காணப்பட்ட போதும், திமுக திருச்சி சிவா, சிபிஐ சார்பாக டி ராஜா, உமர் அப்துல்லா, மெகபூபா முப்தி, என். கே பிரேமச்சந்திரன் மற்றும் விசிகவை சேர்ந்த பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

இதில் கலந்துகொண்ட எதிர்கட்சிகள், ராகுல்காந்தியை மக்கள் ஒரு நம்பிக்கையாக பார்க்கிறார்கள் என்றும் பிரித்தாழும் சக்தியிலிருந்து அவர் இந்தியாவை காப்பாற்றுவார் என்று நம்புவதாக பேசினர்.

# அதானி, குழும நிறுவன பங்குகள் வீழ்ச்சி நாடாளுமன்றத்தில் எதிரொளிக்குமா?

## தயார் நிலையில் மத்திய அரசு

**2023-24 நிதியாண்டிற்கான நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத்தொடர் ஜனவரி 31 ஆம் தேதி தொடங்கியது. திரௌபதி முர்மு நாடாளுமன்றத்தில் முதல் முறையாக உரையாற்றினார். நாளை (பிப்ரவரி 1) நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் பட்ஜெட் தாக்கல் செய்கிறார்.**

முன்னதாக நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத் தொடரையொட்டி மத்திய அரசு அனைத்துக் கட்சிக் கூட்டத்தை கூட்டியது. அப்போது, அதானி நிறுவனத்தின் மீதான ஹிண்டன்பர்க் ஆய்வு அறிக்கை, குற்றச்சாட்டு மற்றும் பிரதமர் நரேந்திர மோடி பற்றிய பி.பி.சி ஆவணப்படம் ஆகியவற்றை குறித்து விவாதிக்கப்பட வேண்டும் என்று எதிர்க்கட்சிகள் கோரிக்கை வைத்தனர்.

பாதுகாப்பு துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் தலைமையில் கூட்டம் நடைபெற்றது. அப்போது அவர், அரசு விதிகளின்படி ஒவ்வொரு பிரச்சினையையும் விவாதிக்க தயாராக இருப்பதாக கட்சிகளுக்கு உறுதியளித்தார். மேலும், கூட்டத் தொடர் சுமூகமாக நடைபெற எதிர்க்கட்சிகள் ஒத்துழைக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

பெண்களுக்கான இடஒதுக்கீடு மசோதா, வேலையில்லாத் திண்டாட்டம், விலைவாசி உயர்வு ஆகியவை பற்றி விவாதிக்க வேண்டும் என்றும் எதிர்க்கட்சிகள் கூறின. அனைத்துக் கட்சி கூட்டத் தொடரில் காங்கிரஸில் யாரும் பங்கேற்கவில்லை. ராகுலின் பாரத் ஜோடோ யாத்திரையின் நிறைவு விழாவில் பங்கேற்க காங்கிரஸ் தலைவர்கள் ஸ்ரீநகர் சென்றுவிட்டனர். ராஜ்நாத் சிங் தவிர, அரசு தரப்பில் நாடாளுமன்ற விவகாரத்துறை அமைச்சர் பிரகலாத் ஜோஷி,

பியூஷ் கோயல், நாடாளுமன்ற விவகாரங்களுக்கான இணை அமைச்சர்கள் அர்ஜுன் ராம் மேக்வால் மற்றும் வி. முரளீ தரன் ஆகியோர் கலந்து கொண்டனர். கூட்டத்தில் 27 கட்சிகளைச் சேர்ந்த 37 தலைவர்கள் கலந்து கொண்டதாக ஜோஷி கூறினார்.

காங்கிரஸுக்கு அடுத்தபடியாக நாடாளுமன்றத்தில் இரண்டாவது பெரிய எதிர்க்கட்சியான திரிணாமுல் காங்கிரஸ், அதானி விவகாரத்தில் விவாதிக்கக் கோரி மற்றவர்களுடன் சேர்ந்து கூறவில்லை. தி.மு.கவின் டி.ஆர் பாலு, ஆம் ஆத்மி கட்சி (சஞ்சய் சிங்), ஆர்ஜேடி (மனோஜ் குமார் ஜா), சிபிஎம் (எளமரம் கரீம்) மற்றும் சிபிஐ (பி சந்தோஷ் குமார்) ஆகியோர் அதானி மீதான குற்றச்சாட்டை விவாதிக்க வேண்டும் என்று கோரினர்.

அமெரிக்க முதலீட்டாளர் நிறுவனமான ஹிண்டன்பர்க் ரிசர்ச் அறிக்கைக்கு பதிலளிக் கையில் அதானி இந்தியாவின் பெயரையும் கொடியையும் பயன்படுத்து குறித்து ஜா கேள்வி எழுப்பினார்.

கொல்கத்தாவில் கூடிய சிபிஎம் மத்தியக் குழு, குற்றச்சாட்டுகள் குறித்து உச்ச நீதிமன்றத்தில் தினசரி கண்காணிக்கப்படும்

உயர்மட்ட விசாரணையைக் கோரியது. இப்பிரச்சனையை நாடாளுமன்றத்தில் எழுப்ப மற்ற கட்சிகளுடன் ஒருங்கிணைந்து செயல்படுவோம் என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி தெரிவித்துள்ளது.

வேலையில்லாத்திண்டாட்டம், மகளிர் இடஒதுக்கீடு மசோதா நிறைவேற்றம், விலைவாசி உயர்வு, குறிப்பாக எரிபொருளின் விலை உயர்வு ஆகியவை குறித்தும் விவாதிக்க வேண்டும் என்று டிஎம்சி கோருகிறது என்று அக்கட்சி எம்.பி பந்தோபாத்யாய் கூறினார். நாடாளுமன்றத்தின் தளத்தை மசோதாக்களை நிறைவேற்ற மட்டும் பயன்படுத்தக் கூடாது என்று நான் அரசிடம் கூறினேன். எதிர்க்கட்சிகளுக்கும் இடம் கொடுக்க வேண்டும். சபை எதிர்க்கட்சிக்கு சொந்தமானது என்பது பழமொழி, ஆனால் அது இந்த அவையில் பிரதிபலிக்கவில்லை "என்று அவர் கூறினார்.

2002 கலவரத்தை மோடி தலைமையிலான குஜராத் அரசு கையாண்டது பற்றி பேசிய பிபிசி ஆவணப்படம் குறித்த கட்சியின் நிலைப்பாடு குறித்து கேட்டதற்கு, அங்கிருந்த பலர் அதன் மீதான தடைகள் குறித்து விவாதிக்கப்பட வேண்டும் என்று கூறியதாக டிஎம்சி தலைவர் கூறினார்.

ஹிண்டன்பர்க் அதானி குழுமத்திடம் 88 கேள்விகளை முன்வைத்தது. அதற்கு அதானி குழுமம் 413 பக்கங்களில் பதிலளித்தது. 'என் மீதான தாக்குதல் இந்தியா மீதான தாக்குதல்' என்று தேசியவாதத்தின் போர்வையில் ஒளிந்து கொள்வது ஏன்? இதற்கிடையில், எல்ஐசி மற்றும் எஸ்பிஐ குழும நிறுவனங்களுக்கு தொடர்ந்து அழுத்தம் கொடுக்கப்படுகிறது. செபி/ஆர்பிஐ மௌனம் காக்கிறது" என்று காங்கிரஸ் தகவல் தொடர்புத் துறைத் தலைவர் ஜெய்ராம் ரமேஷ் ட்விட்டர் பதிவில் தெரிவித்துள்ளார்.

ஹிண்டன்பர்க் ரிசர்ச் வைத்த குற்றச்சாட்டுகள் குறித்து தீவிர விசாரணை நடத்த வேண்டும் என்று காங்கிரஸ் கோரியுள்ளது. விதிகளின்படி அனைத்து விஷயங்களிலும் விவாதம் நடத்த அரசு



தயாராக உள்ளது. கூட்டத்தொடர் சுமூகமாக செயல்பட அனைத்து அரசியல் கட்சிகளும் ஒத்துழைக்க வேண்டும் என்று அவர் கேட்டுக் கொண்டார்.

இந்த பட்ஜெட் கூட்டத்தொடரில் நிலுவையில் உள்ள பல மசோதாக்களுக்கு ஒப்புதல் அளிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதில் உயிரியல் பன்முகத்தன்மை திருத்த மசோதா, பெற்றோர் மற்றும் மூத்த குடிமக்களின் பராமரிப்பு - நலன் திருத்த மசோதா, குழந்தை திருமண தடை திருத்த மசோதா, மின்சார திருத்த மசோதா, மாநில கூட்டுறவு சங்கங்கள் திருத்த மசோதா, ஜன் விஸ்வாஸ் விதிமுறைகள் திருத்த மசோதா. இவை தவிர 17 மசோதாக்கள் நிலுவையில் உள்ளன.

நிலுவையில் உள்ள இந்த சட்டத்திருத்ததில் கூட்டத்தொடரின் போது எவை நிறைவேற்றப்படுகிறது என்பது குறித்து அரசு தெளிவுபடுத்தவில்லை.



# டெல்லி முகலாய தோட்டம், 'அம்ரித் உத்யன்' எனப் பெயர் மாற்றம்..

**முந்தைய ராஜபாதையைப் போலவே, முகலாய தோட்டங்களும் 1917 இல் எட்வின் லுட்யென்ஸால் வடிவமைக்கப்பட்டன.**

இவைகள், ராஷ்டிரபதி பவன் கட்டிடத்தைப் போலவே, இந்திய மற்றும் மேற்கத்திய கட்டிடக்கலையின் இரண்டு வெவ்வேறு பாணிகளைக் கொண்டுள்ளது.

முகலாய பாணி மற்றும் ஆங்கில மலர் தோட்டம் என இரண்டு வெவ்வேறு தோட்டக்கலை மரபுகளை லுட்யென்ஸ் ஒன்றாகக் கொண்டு வந்தார்.

இந்தத் தோட்டத்தில், முகலாய கால்வாய்கள், மொட்டை மாடிகள், பூக்கும் புதர் செடிகள் ஆகியவை உள்ளன. அத்துடன், ஐரோப்பிய பூச்செடிகள், புல்வெளிகள் மற்றும் தோட்டங்களில் உள்ள தனியார் ஹெட்ஜ்களுடன் அமைக்கப்பட்டுள்ளன.

அவை முதலில் கிழக்கு புல்வெளி, மத்திய புல்வெளி, நீண்ட தோட்டம் மற்றும் வட்டத் தோட்டம் எனப் பிரிக்கப்பட்டன, முன்னாள் குடியரசுத் தலைவர்களான ஏபிஜே அப்துல் கலாம் மற்றும் ராம் நாத் கோவிந்த் ஆகியோர் தங்கள் ஆட்சிக்காலத்தில் இங்கு செடிகள் நட்டுள்ளனர்.

இந்த நிலையில், வரலாற்று சிறப்புமிக்க முகலாய தோட்டம் சீசனுக்காக பொதுமக்களுக்கு திறக்கப்படுவதற்கு ஒரு நாள் முன்னதாக, ராஷ்டிரபதி பவன் அதற்கு 'அம்ரித் உத்யன்' என்ற "பொதுப் பெயரை" வழங்குவதாக அறிவித்தது.

ஜனவரி 31 முதல் மார்ச் 26 வரை இந்த தோட்டங்களை பொதுமக்கள் பார்வையிடலாம் என குடியரசுத் தலைவரின் துணை செய்தித் தொடர்பாளர் நவிகா குப்தா அறிவித்துள்ளார்.

சுதந்திரத்தின் 75வது ஆண்டு விழாவை ஆசாதி கா அம்ரித் மஹோத்சவ் என்று கொண்டாடுவதை முன்னிட்டு, இந்திய குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு, ராஷ்டிரபதி பவன் தோட்டங்களுக்கு அம்ரித் உத்யன் என்று ஒரு பொதுவான பெயரை வைத்துள்ளார்.

நாளின் முடிவில், 'முகல் கார்டன்ஸ்' என்ற பெயர் கொண்ட பழைய பலகைகள் இல்லாமல், 'அம்ரித் உத்யன்' என்று புதிய பலகைகள் வைக்கப்பட்டுள்ளன. இந்த அறிவிப்புக்கு எதிர்க்கட்சிகள் கண்டனம் தெரிவித்துள்ளன.

# DNC Chits Pvt. Ltd.

Trust is our Tradition. Since 1965.

நம்பிக்கையே எங்கள் பாரம்பரியம்

50 Years of Trust

## சென்னை தி.நகரில் புதிய தலைமை அலுவலகம்

**DNC** சிட்ஸ் வழங்கும் சீட்டு குரூப்புகள் உங்கள் எதிர்கால கட்டாய பணத்தேவைகளை பூர்த்தி செய்யும் விதத்தில் உங்கள் வசதிக்கேற்ற சீட்டுத் தொகை மற்றும் கால அளவு கொண்டதாக உள்ளது. இதில் நீங்கள் உங்கள் விருப்பத்திற்கேற்றார் போல ரூ.1.00,000 முதல் ரூ.50,00,000 வரையிலான சீட்டில் சேர்ந்து உங்கள் எதிர்கால பணத்தேவையை பூர்த்தி செய்யலாம்




14/49, நரசிம்மன் ரோடு, வடக்கு போக் ரோடு,
தி.நகர், சென்னை-600 017

போன் : 044-4241 4444



தமிழகமெங்கும் 30 கிளைகளுடன்

“ சிட்டுன்னு DNC
சட்டுனு பணம் வரும் ”


பதிவு அலுவலகம், எண் 11, நாச்சியப்ப கவுண்டர் தெரு, தருமபுரி - 636701. போன் : 04342 262040

எமது கிளைகள் : **கே.கே.நகர்** 044 45022040 | **கிருஷ்ணகிரி** 04343-233040 | **சேலம்** 0427-2446040 | **தஞ்சாவூர்** 04362-2366040 **நாமக்கல்** 04286-275040 | **வேலூர்** 04162-221040 | **ஆத்தூர்** 04282-251020 | **ஈரோடு** 04242-262040 | **எடப்பாடி** 04283-222050 **பேரூர்** 044-48614060 | **திருப்பத்தூர்** 04179-223040 | **கரூர்** 04324-241040 | **கோவை** 0422-4983422 | **திண்டுக்கல்** 0451-2422040 **தாம்பரம்** 044-48574030 | **கடலூர்** 04142-222020 | **பாலக்கோடு** 04348-222040 | **பொம்மிடி** 04346-245060 | **ஓமலூர்** 04290-222040 **ஓசூர்** 04344-223040 | **அம்பத்தூர்** 044-48502040 | **புரசைவாக்கம்** 044-4852230 | **மடிப்பாக்கம்** 044-48684050 | **காவேரிபட்டினம்** 04343-252240 | **போச்சம்பள்ளி** 04341-252040 | **ராசிபுரம்** 04287-222050 | **திருச்செங்கோடு** 04288-252040 | **செங்கல்பட்டு** 04427-423030

2

www.dncchits.com

# கேரளாவில் கண்டறியப்பட்ட நோரோவைரஸ் பாதிப்பு!



**கேரள சுகாதாரத் துறை எர்ணாகுளம் மாவட்டத்தில் 1 ஆம் வகுப்பு மாணவர்களுக்கு நோரோவைரஸின் இரண்டு பாதிப்புகளை உறுதிப்படுத்தியது. வயிற்றுப்போக்கு, வயிற்று வலி, வாந்தி, குமட்டல், காய்ச்சல், தலைவலி மற்றும் உடல்வலி போன்ற அறிகுறிகளுடன் மாணவர்கள் மற்றும் அவர்களது பெற்றோர்கள் என 62 நபர்களின் மாதிரிகளை பரிசோதனை செய்த பிறகு இருவருக்கு பாதிப்பு இருப்பது கண்டறியப்பட்டது.**

நோரோவைரஸ் புதியதல்ல; இது 50 ஆண்டுகளுக்கும் மேலாக மனிதர்களிடையே பரவி வருகிறது. மற்றும் இரைப்பை குடல் அழற்சியின் முதன்மை காரணங்களில் ஒன்றாக கருதப்படுகிறது. இந்த வைரஸ் உலகளவில் ஒவ்வொரு ஆண்டும் 200,000 நபர்களைக் கொல்வதாக மதிப்பிடப்பட்டுள்ளது, பெரும்பாலான இறப்புகள் ஐந்து வயதுக்குட்பட்ட மற்றும் 65 வயதுக்கு மேற்பட்டவர்களிடையே நிகழ்கின்றன.

வைரஸ் குறைந்த வெப்பநிலையில் உயிர்வாழும் திறன் கொண்டது, மேலும் குளிர்காலம் மற்றும் குளிர் நாடுகளில் அதிகமாக பரவும். அதனால்தான் இது சில நேரங்களில் “குளிர்கால வாந்தி நோய்” என்று

குறிப்பிடப்படுகிறது.

இங்கிலாந்தில் தொற்றுநோய்களின் போது, நோரோவைரஸ் பாதிப்புகள் சரிவைக் கண்டன, ஆனால் பின்னர் எண்ணிக்கை அதிகரித்தது. 2022 இல் ஹிரி ஹெல்த் செக்யூரிட்டி ஏஜென்சி (UKHSA) அறிக்கையின் படி, எதிர்பார்க்கப்பட்டதை விட 48% அதிகமான பாதிப்புகள் பதிவாகியுள்ளன.

நோரோவைரஸ் நோய்த்தொற்றுகள் அதிக வருமானம் உள்ள நாடுகளில் அடிக்கடி கண்டறியப்படுவதாக, சக மதிப்பாய்வு செய்யப்பட்ட வைரஸ்கள் இதழில் வெளியிடப்பட்ட 2022 ஆய்வு கூறுகிறது. இதற்கு நேர்மாறாக, இந்தியாவில் பாதிப்புகள் பெரும்பாலும் பள்ளிகள் மற்றும் விடுதிகள் போன்ற அமைப்புகளில் கண்டறியப்பட்டுள்ளன, அங்கு மக்கள் உணவைப் பகிர்ந்து கொள்கிறார்கள்.

## இந்தியாவில் தொற்று பாதிப்பு

நோரோவைரஸின் பாதிப்புகள் மற்ற பல இடங்களைப் போல இந்தியாவில் பொதுவானவை அல்ல . அதே நேரத்தில், கேரளாவில் ஏற்கெனவே இந்த வைரஸ் பாதிப்புகள் பதிவாகியுள்ளது. இந்த தொற்று முந்தைய ஆண்டுகளிலும், முக்கியமாக தென்னிந்தியாவிலிருந்து, குறிப்பாக கேரளாவில் இருந்து பதிவாகியுள்ளது.

2016 ஆம் ஆண்டு வேலூர் கிறிஸ்டியன் மெடிக்கல் காலேஜ் நடத்திய ஆய்வில், 273 பிறந்த குழந்தைகளில் முதல் மூன்று ஆண்டுகளில், 1,856 வயிற்றுப்போக்கு மற்றும் 147 வயிற்றுப்போக்கு பாதிப்பு கண்டறியப்பட்டது. இதில் 11.2% வயிற்றுப்போக்கு, 20.4% வாந்தி நிகழ்வுகளிலும் நோரோவைரஸ் கண்டறியப்பட்டதாக ஆய்வு கூறியது.

ஹைதராபாத்தில் இருந்து 2021 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட ஆய்வில், கடுமையான இரைப்பை குடல் அழற்சியுடன் வந்த 10.3% குழந்தைகளின் மாதிரிகளில் நோரோவைரஸ் கண்டறியப்பட்டது.

இதுகுறித்து அட்வான்ஸ்டு வைராலஜி கேரளா நிறுவனத்தின் இயக்குனர் டாக்டர் ஸ்ரீகுமார் கூறுகையில், சமீபத்திய ஆண்டுகளில் நோரோவைரஸ் பாதிப்புகள் அதிகரித்து வருகின்றன. இப்போது இந்த வைரஸை மட்டுமல்ல, இன்னும் பலவற்றையும் கண்டறியும் அமைப்புகள் எங்களிடம் உள்ளன. அதுதான் தொற்றை கண்டறிய முதன்மை காரணம்.

சிகிச்சை அளிக்கும் மருத்துவர் சந்தேகிக்கக்கூடிய ஒரு வைரஸ் தொற்றுக்கான பரிசோதனையை விட, நோயாளியின் அறிகுறிகளின் அடிப்படையில் மருத்துவ முடிவுகளை எடுப்பதில் □ நோயாளியின் மாதிரிகளை பரிசோதிப்பதில் ஒரு syndromic approach- ஐ தனது நிறுவனம் பின்பற்றுகிறது என்று டாக்டர் ஸ்ரீகுமார் கூறினார்.

எங்களிடம் 83 வெவ்வேறு வைரஸ்களைக் கண்டறியும் குழு உள்ளது. கோவிட்19 அல்லது காய்ச்சலைப் பரிசோதிப்பதற்குப் பதிலாக, சுவாச அறிகுறிகளை ஏற்படுத்தக்கூடிய 12 வைரஸ் தொற்றுகளை நாங்கள் பரிசோதிப்போம். அல்லது, ஒரு நபருக்கு இரைப்பை குடல் அறிகுறிகள் இருப்பதாக மருத்துவர் கூறினால், ஆறு அல்லது ஏழு வைரஸ்களுக்கான குழுவை இயக்குவோம். அதனால்தான் நோரோவைரஸ் முடிவுகளை நாங்கள் கண்டறிகிறோம், என்று டாக்டர் ஸ்ரீகுமார் கூறினார்.

நிறுவனங்கள் மாதிரிகளின் மரபணு வரிசைமுறையைச் செய்யத் தொடங்கினால், அதிகமான வைரஸ்கள் கண்டறியப்பட வாய்ப்புள்ளது, என்றார்.

## குறிப்பாக கேரளாவில் இந்த தொற்று ஏன் மிகவும் பொதுவானது?

எந்த பலவீனத்தையும் விட இது கேரளாவின் பலத்துடன் தொடர்புடையது. டாக்டர் ஸ்ரீகுமார் கூறுகையில், மாநிலத்தில் வலுவான பொது சுகாதார அமைப்பு உள்ளது, இது தொற்றுநோய்களின் போது அவற்றை விரைவாக பரிசோதிக்கும் திறன் கொண்டது.

## நோரோவைரஸ் தொற்று பெரிய அளவிலான பரவலை ஏற்படுத்துமா?

இல்லை. நோரோவைரஸின் அதிகமான பாதிப்புகள் கண்டறியப்பட்டாலும், இது பெரிய அளவிலான பரவலுக்கு வழிவகுக்க வாய்ப்பில்லை என்று நிபுணர்கள் கூறுகின்றனர்.

**ஈரோடு இடைத்தேர்தல்**

# முதல்வர் மு.க.ஸ்டாலின் அதிரடி திட்டம்...!

**ஈரோடு கிழக்கு தொகுதி இடைத் தேர்தலில் காங்கிரஸ் வேட்பாளர் ஈ.வி.கே.எஸ். இளங்கோவனை வெற்றிப்பெற செய்தால் மட்டும் போதாது.**

அதே நேரம் அதிக வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றிப்பெற செய்ய வேண்டும். மேலும் எதிர்த்து போட்டியிடும் கட்சிகள் டெபாசிட் தொகையை இழக்க வேண்டும் என்ற அளவில் தேர்தல் பணியை கடுமையாக மேற்கொள்ள வேண்டும் என்று திமுக தலைவரும் முதல் அமைச்சருமான மு.க.ஸ்டாலின் அதிரடி உத்தரவுகளை பிறப்பித்துள்ளார். எந்த வழிகளிலும் தேர்தல் பணியில் தொய்வு ஏற்பட்டு விடக் கூடாது என்றும் உடன்பிறப்புகளை உற்சாக நிலை யிலேயே வைத்துக் கொண்டு தேர்தல் முடியும் வரை தேவையான வசதிகளை செய்து தருவதோடு கடுமையாக தினசரி தங்களுக்கு கொடுக்கப்பட்ட பகுதிகளில் நின்று பணியாற்ற



வேண்டும் என்றும் திமுக கட்சி யினருக்கு உத்தரவிட்டுள்ளார் முதல்வர் மு.க.ஸ்டாலின். தேர்தல் பிரச்சாரத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின், அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் முதல்வர் இருவரும் பங்கேற்பதோடு முக்கிய அமைச்சர்களும் பங்கேற்று பிரச்சாரத்தில் ஈடுபடுவதுடன் ஈவிகேஎஸ் இளங்கோவன் வெற்றியை உறுதி செய்ய உள்ளனர்

**–டெல்லிகுருஜி**

இந்த நிகழ்வுகளின் தொற்றுநோயியல் தொடர்புகளை நாங்கள் ஆய்வு செய்யவில்லை என்றாலும், மக்கள் ஒரே மாதிரியான உணவுகளை உட்கொள்ளும் பள்ளிகள் அல்லது விடுதிகளில், நோரோவைரஸ் பாதிப்புகள் ஆங்காங்கே காணப்படுகின்றன. நோய்த்தொற்றின் பரவலும் தன்னைத்தானே கட்டுப்படுத்துகிறது. இது ஒரு தனிப்பட்ட பிரச்சனை, பொது சுகாதார பிரச்சனை அல்ல என்று டாக்டர் ஸ்ரீகுமார் கூறினார்.

## அறிகுறிகள் என்ன மற்றும் அதன் பரவலை எவ்வாறு தடுப்பது?

நோரோவைரஸ் வயிற்றுப்போக்கு, வாந்தி, குமட்டல் மற்றும் வயிற்று வலிக்கு வழிவகுக்கிறது. வயிற்றுப்போக்கு நோயாக இருப்பதால், இது நீரிழப்புக்கு வழிவகுக்கும், எனவே ஏராளமான திரவங்களை குடிக்க பரிந்துரைக்கப்படுகிறது.

அசுத்தமான உணவுகள், வைரஸால் பாதிக்கப்பட்ட மேற்பரப்புகளைத் தொட்டு, பின்னர் வாயைத் தொடுதல், தொற்று உள்ள ஒருவரைக் கவனித்துக்கொள்வது, உணவுகள் மற்றும் பாத்திரங்களை அவர்களுடன் பகிர்ந்துகொள்வது போன்ற நேரடித் தொடர்பில் இருப்பது போன்றவற்றின் மூலம் வைரஸ் தொற்று பரவுகிறது.

நல்ல சுகாதாரமே தொற்றுநோயைத் தடுக்க சிறந்த வழியாகும். 20 விநாடிகளுக்கு சோப்பு மற்றும் தண்ணீருடன் உங்கள் கைகளை கழுவவும். ஹேண்ட் சானிடைசர் நோரோவைரஸுக்கு எதிராக நன்றாக வேலை செய்யாது என்று கருதப்படுகிறது.

நோய்த்தொற்று உணவுகள் மூலம் பரவக்கூடும் என்பதால், நோய்வாய்ப்பட்ட ஒருவர் மற்றவர்களுக்கு உணவைத் தயாரிக்க வேண்டாம் என்று பரிந்துரைக்கப்படுகிறது. அனைத்து உணவுப் பொருட்களையும் கவனமாகக் கழுவி அதிக வெப்பநிலையில் சமைக்க வேண்டும். நோரோவைரஸ் 60 டிகிரி செல்சியஸ் வரை வெப்பநிலையைத் தாங்கும்.

நோய்வாய்ப்பட்ட ஒருவர் வாந்தி எடுத்த பகுதிகளை அல்லது கழிப்பறைகளை கிருமிநாசினிகள் அல்லது ப்ளீச் பயன்படுத்தி சுத்தம் செய்ய வேண்டும்.

# இடியாப்ப சிக்கலில் எடப்பாடி பழனிசாமி..!



**ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலில் வேட்பாளரை அறிவிப்பதில் ஏன் எடப்பாடி பழனிசாமி முடிவெடுக்காமல் திண்டாடி வருகிறார். ஆலோசனை என்ற பெயரில் ஏழுமணி நேரம் எட்டுமணி நேரம் கலந்து ஆலோசனை நடத்துவதும் தொடர்ந்து ஆலோசித்து வருவதும் அதிமுகவினர் இடத்தில் குழப்பத்தையும், ஏமாற்றத்தையும் ஏற்படுத்துகிறது.**

தோழமை கட்சியான பாஜக கட்சியின் நெருக்கடி ஒருபுறம், வேட்பாளரை நிறுத்துவதற்கான ஏற்பாடுகள் நடப்பதாக தகவல்கள் வெளியிடுவது, மேலும் பல சங்கடத்தை எடப்பாடி பழனிசாமிக்கு ஏற்படுத்துகிறது. இதனால் சில தோழமை கட்சிகளும் பாஜக கட்சியை காரணம் காட்டி நேரடியாக அதிமுகவை ஆதரிக்க மனமில்லாமல் கூட்டணியில் தொடர்கிறோம். அதே நேரம் பாஜக கட்சி எடுக்கும் முடிவின் படி எங்கள் முடிவு இருக்கும் என்று புதிய நீதிக் கட்சி தலைவர் ஏ.சி.சண்முகம் தமிழக மக்கள் முன்னேற்ற கட்சி தலைவர் ஜான்பாண்டியன் போன்றவர்கள் அறிவித்திருப்பதும் அதிமுக ஒருங்கிணைப்பாளர் நான் தான் என கூறிக்கொள்ளும் ஓ.பன்னீர்செல்வம் பாஜக கட்சி போட்டியிட்டால் அவர்களுக்கு எங்கள் ஆதரவு என்று கூறுவதும் பொதுவேட்பாளரை நிறுத்தினால் பாஜக வை ஆதரிப்பதற்கு அமமுக தயார் என்று டிடிவி தினகரன் கூறுவதும் எடப்பாடி பழனிசாமிக்கு ஒரு பெருத்த பின்னடைவை தோற்றுவித்துள்ளது. இதனால் தேர்தல் பொறுப்பாளர்களை நியமித்தாரே தவிர வேட்பாளரை அறிவிப்பதில் காலதாமதம் ஏற்படுகிறது. யாரை நிறுத்துவது என்ற குழப்பமான சூழ்நிலையில் எடப்பாடியாரின் ஆதரவாளர்கள் முகம் சோகத்தில் ஆழ்ந்துள்ளது என்றே கூறலாம்.

திமுக, காங்கிரஸ் வேட்பாளரை அறிவிப்பதற்கும் முன்பாகவே தனது தேர்தல் பிரச்சாரத்தை முன்கூட்டியே தொடங்கியதோடு முக்கிய அமைச்சர்களுக்கு தேர்தல் பணி பொறுப்பை வழங்கியதோடு தேவையான அனைத்து ஏற்பாடுகளையும் வேகமாக செய்து வருவது எடப்பாடி அணியை அச்சத்தில் ஆழ்த்தியுள்ளது. இதனால் அதிமுக இரட்டை இலை சின்னம் கிடைக்குமா? அல்லது சுயேட்சை சின்னத்தில் போட்டியிட வேண்டுமா என்ற தெளிவற்ற நிலையில் இடைக்கால பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி ஒரு நெருக்கடியான கட்டத்தில் சூழ்ந்து இருக்கிறார். நீதிமன்றமும் தேர்தல் ஆணையமும் முடிவை அறிவித்தால் அன்றி எடப்பாடியின் முகத்தில் தெளிவு பிறக்காது. அதே நேரம் தேர்தலில் வெற்றி கிடைக்குமா? அல்லது வெற்றி வாய்ப்பை இழக்க வேண்டி வருமா? என்ற ஊசலாட்டத்தில் எடப்பாடி பழனிசாமி உள்ளார்.




# அமெரிக்காவில் ஐ.டி. பணியாளர்கள் வேலை இழப்பு..

## மற்ற துறைகளுக்கு பரவுமா?

**அமெரிக்காவில் தொழில்நுட்ப நிறுவனங்களில் முதலில் சிறு துளியாக வேலை இழப்பு தொடங்கியது. இன்று மிகப்பெரிய அளவில் பிரச்னையாக அது திரும்பியுள்ளது.**

கடந்த காலங்களில் தொற்றுநோய் பரவல் உச்சத்தில் இருந்தபோது தொழில்நுட்ப பணியாளர்களின் தேவை அதிகரித்து காணப் பட்டது.

இந்த தேவை அதிகரிப்பு காரணமாக டெக் நிறுவனங்களில் பணிபுரிபவர்களின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து காணப்பட்டது. மறுபுறம் பணவீக்கமும் அதிகரித்து காணப்பட்டதால், வேறு வழியின்றி சிலிக்கான் பள்ளத்தாக்கு பகுதியில் பலரும் வேலை இழந்துவருகின்றனர்.

அந்த வகையில், கடந்த 12 மாதங்களில் தொழில்நுட்ப நிறுவனங்கள் கூட்டாக 330,000 பணிகளை குறைத்துள்ளன. இதற்கிடையில், TrueUp இன் கணக்கின்படி, இந்த ஆண்டு தொடக்கத்தில் இருந்து கிட்டத்தட்ட 90,000 பணிகள் குறைக்கப்பட்டுள்ளன.

இதற்கிடையில் இந்தப் பிரச்னை விரைவில் மற்ற துறைகளுக்கும் பரவும் என ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்.

### தொழில்நுட்பத் துறை 'ஓவர்ஹைறிட்'

தொழில்நுட்பத் துறையில் வேலைவாய்ப்பு, தொற்றுநோய்க்கு முந்தைய நிலைகளில் இருந்து சுமார் 8% அதிகரித்துள்ளது. அதே நேரத்தில் மொத்த வேலைவாய்ப்பு என்பது தொற்றுநோய்க்கு முந்தைய நிலைகளை விட அதிகமாக உள்ளது" என்று ஃபிட்ச் மதிப்பீடுகளில் அமெரிக்க பிராந்திய பொருளாதாரத்தின் தலைவர் ஒலு சோனோலா கூறினார்.

அதில், "இது 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் சுமார் 200,000 முதல் 300,000 வேலைகள் வரை பணியமர்த்தப்பட்டனர்" எனக் கூறப்பட்டுள்ளது.

ட்விட்டர், ஸ்பாடிஃபை மற்றும் டெஸ்லா போன்ற உயர்மட்ட பெயர்கள் அமெரிக்கப் பொருளாதாரத்தின் எதிர்காலப் பாதையைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றன,

இவர்களும் தற்போது இந்தப் பிரச்னையால் பாதிக்கப்பட்டுள்ளனர். ஆனால் உலகின் மிகவும் நெகிழ்வான தொழிலாளர் சந்தைகளில் ஒன்றாக அமெரிக்கா இருப்பதால், அனைத்துத் துறைகளிலும் உள்ள ஏராளமான தொழிலாளர்கள் ஒவ்வொரு நாளும் வேலைகளை மாற்றுகிறார்கள்.

ஒவ்வொரு மாதமும் [அமெரிக்க பொருளா

தாரம் முழுவதும்] பணிநீக்கங்களின் எண்ணிக்கை சுமார் 1.5 மில்லியன் ஆகும்," என்று பீட்டர்சன் இன்ஸ்டிடியூட் ஃபார் இன்டர்நேஷனல் மூத்த சக ஊழியர் கரேன் டைனன் கூறினார்.

அதேநேரத்தில், தொழில்நுட்பத் துறையில் மாதத்திற்கு 30,000 பணி இழப்பு உள்ளது.

## பல தொழில்நுட்ப நிறுவனங்கள் இன்னும் பணியமர்த்துகின்றன


சில தொழில்நுட்ப நிறுவனங்கள் பதவிகளை குறைத்தாலும், இன்னும் பலர் அதிகமாக ஆட்சேர்ப்பு செய்கின்றனர், இதனால் பல துறைகளில் உள்ள முதலாளிகள் காலியிடங்களை நிரப்புவதற்கு சிரமப்படுகிறார்கள் மற்றும் தொழிலாளர்கள் அதிக ஊதியம் கோருகின்றனர்.

வெள்ளியன்று TrueUp ஆல் வேலைத் தளங்களை ஸ்கேன் செய்ததில், பெரிய தொழில்நுட்பம், ஸ்டார்ட்அப்கள் மற்றும் யூனிகார்ன்கள் என அழைக்கப்படுபவற்றில் 179,000க்கும் மேற்பட்ட திறந்த நிலைகள் உள்ளன.

குறைந்தபட்சம் $1 பில்லியன் (€0.92 H™L ò¡) மதிப்புள்ள புதிய தனியார் நிறுவனங்கள். கடந்த மாதம் ZipRecruit நடத்திய ஆய்வில், பணிநீக்கம் செய்யப்பட்ட ஐந்தில் நான்கு அமெரிக்க தொழில்நுட்ப ஊழியர் களுக்கு மூன்று மாதங்களுக்குள் புதிய வேலை கிடைத்துள்ளது எனத் தெரிவித்துள்ளது.

Indeed.com இன் தரவரிசைப்படி, அமெரிக்காவில் உள்ள 10 சிறந்த ரேங்க் வேலைகளில் எட்டு வேலைகள் இன்னும் தொழில்நுட்பப் பாத்திரங்களாகவே உள்ளன.

மேலும், அறிவிக்கப்பட்ட பல வேலை இழப்புகள் அமெரிக்காவிற்கு வெளியே உள்ள ஊழியர்களையும் பாதிக்கிறது எனத் தெரிவித்துள்ளது.



## பணவீக்கம் இருந்தபோதிலும், அமெரிக்க செலவினம் தொடர்கிறது

அமெரிக்க பொருளாதார நடவடிக்கைகளில் மூன்றில் இரண்டு பங்குக்கு அதிகமான நுகர்வோர் செலவினங்கள் வலுவாக இருப்பதால், இந்த ஆண்டு அமெரிக்கா மந்தநிலைக்குள் நுழையுமா என்பதில் பொருளாதார வல்லுநர்கள் பிளவுபட்டுள்ளனர்.

நவம்பர் மற்றும் டிசம்பர் மாதங்களில் நுகர்வு சிறிதளவு குறைந்துள்ளதாக அமெரிக்க வர்த்தகத் துறை தெரிவித்துள்ளது. கிரெடிட்

கார்டு கடனும் அதிகரித்து வருகிறது.

அமெரிக்கர்கள் தங்களுடைய செலவின அளவைத் தக்கவைக்க அதிகக் கடன் வாங்க வேண்டியிருக்கிறது என்பதற்கான சான்று, இது தாங்க முடியாதது.

மந்தநிலையின் தெளிவான அறிகுறி ஒட்டுமொத்த வேலையின்மை அதிகரிப்பதாக இருக்கும், ஆனால் வேலையின்மை எண்ணிக்கை டிசம்பரில் 0.2% முதல் 3.5% வரை சரிந்தது. முதன்முறையாக வேலையின்மை நலன் கோரும் நபர்களின் எண்ணிக்கை கடந்த வாரம் 190,000 என்ற சரித்திரத்தில் மிகக் குறைந்த அளவை எட்டியது.

## வேலை இழப்புகள்

"தொழிலாளர் சந்தையில் அழுத்தங்கள் குறைவதற்கான சில அறிகுறிகளை நாங்கள் காண்கிறோம். ஊதிய வளர்ச்சி மென்மையாகிறது, தற்காலிக தொழிலாளர்களின் பயன்பாடு குறைந்து வருகிறது,.

வேலை வாய்ப்புகள் குறையத் தொடங்குகின்றன. எனவே பொதுவாக தொழிலாளர் சந்தையில் பணிநீக்கங்கள் அதிகரிப்பதை நாம் பார்க்கலாம்," என்று டைனன் கூறினார்.

ஃபிட்சின் சோனோலா 2023 ஆம் ஆண்டில் தொழிலாளர் சந்தை "குறிப்பிடத்தக்க வகையில் சாதகமாகும் என்று நினைக்கிறார், ஆனால் தொழில்நுட்பத் துறையில் பணிநீக்கங்கள் பரந்த வேலை சந்தைக்கு நீட்டிக்கப்படும் என்று எதிர்பார்க்கவில்லை.

2007/8 நிதி நெருக்கடியின் போது அமெரிக்க வேலையின்மை எண்ணிக்கை 7.5% ஐ எட்டிய போது, அதே வேலையின்மை அதிகரிப்பை சில ஆய்வாளர்கள் எதிர்பார்க்கின்றனர்.

அதிகபட்சம், வேலையின்மை அமெரிக்காவில் தற்போதைய வரலாற்றுக் குறைந்த 3.5% இலிருந்து 5% வரை அதிகரித்து வருவதை நான் காண்கிறேன்" என்று LinkedIn இன் தலைமைப் பொருளாதார நிபுணர் கரின் கிம்ப்ரோ அமெரிக்க தொலைக்காட்சி ஒளிபரப்பாளரான CNBC இடம் கூறினார்.

கல்வி சுகாதாரம் மற்றும் சில்லறை விற்பனை உட்பட பல துறைகளில் உள்ள பல நிறுவனங்கள் இன்னும் புதிய தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்துவதில் சிரமப்படுகின்றன. அவர்களை கவர்ந்திழுக்க, மளிகை நிறுவனமான வால்மார்ட் இந்த மாதம் அதன் ஊதியத்தை ஒரு மணி நேரத்திற்கு $ 17.50 க்கும் அதிகமாக உயர்த்துவதாகக் கூறியது – தொற்றுநோய்களின் போது ஏற்கனவே பல முறை ஊதியத்தை அதிகரித்துள்ளது. 2021 இல், சில்லறை விற்பனையாளரின் ஆரம்ப ஊதியம் $12 ஆக இருந்தது.

## தொழிலாளர் சந்தை இன்னும் இறுக்கமாக உள்ளது

போட்டிச் சங்கிலிகளான டார்கெட் மற்றும் காஸ்ட்கோ ஒரே மாதிரியான நகர்வுகளை மேற்கொண்டுள்ளன, மேலும் தேவை வலுவாக இருக்கும்போது வேலைகளை குறைக்க வாய்ப்பில்லை.

தொழிலாளர்களை பணியமர்த்துவதில் நிறுவனங்கள் மிகவும் போராடியதால், தொழிலாளர்களை விடுவிப்பதில் நிறுவனங்கள் மிகவும் தயக்கம் காட்டுகின்றன" என்று உயர் அதிர்வெண் பொருளாதாரத்தின் ரூபீலா ஃபரூக்கி ஏஜென்ஸ் பிரான்ஸ் பிரஸ்ஸிடம் (AFP) தெரிவித்தார்.

சமீபத்திய பணிநீக்கங்கள் அனைத்திலும் கூட, பெரும்பாலான தொழில்நுட்ப நிறுவனங்கள் தொற்றுநோய்க்கு முன்பு இருந்ததை விட இன்னும் பெரிய அளவில் உள்ளன.

கடந்த வாரம் 12,000 வேலை இழப்புகளை அறிவித்த போதிலும், கூகுள் உரிமையாளர் ஆல்பாபெட் 2018 முதல் 100,000 ஊழியர்களுக்கு மேல் பணியமர்த்தியுள்ளார்.

அதேசமயம், 18,000 பேரை பணிநீக்கம் செய்ய Amazon இன் முடிவு, அதன் 1.5 மில்லியன் உலகளாவிய பணியாளர்களில் ஒரு பகுதியே ஆகும்.

டெஸ்லாவின் கோடீஸ்வர தலைமை நிர்வாக அதிகாரியான எலோன் மஸ்க் கையகப்படுத்தியபிறகு,சமூகஊடகத்தளத்தின் 7,500 ஊழியர்களில் பாதி பேரை ட்விட்டர் நீக்கியது. இந்த குறைப்பு விமர்சனத்தையும் பாராட்டையும் பெற்றுள்ளது. நஷ்டமடையும் தளத்தின் எதிர்காலத்தை உறுதிப்படுத்த வேலை இழப்புகள் அவசியம் என்றார்.

(எழுதியது நிக் மார்ட்டின், தொகுத்தவர்: உவே ஹெஸ்லர்)

# கடன் உச்ச வரம்பை தொடும் அமெரிக்கா.. அடுத்து என்ன?

**அமெரிக்கா வியாழக்கிழமை தனது கடன் உச்சவரம்பான $31.4 டிரில்லியன்களைத் தொட்டது. அந்நாட்டின் மத்திய அரசாங்கம் உறுதியான நடவடிக்கைகளை எடுக்க கருவூல அதிகாரிகளை கட்டாயப்படுத்துகிறது.**

இதற்கிடையில், தி நியூயார்க் டைம்ஸ் ஜனநாயகக் கட்சியினருக்கும் குடியரசுக் கட்சியினருக்கும் இடையிலான உறவுகள் பதட்டமாக இருப்பதால் பிடன் கடன் வரம்பை அதிகரிப்பார்” என கணித்துள்ளது.

### கடன் உச்சவரம்பு என்ன?

முதலாம் உலகப் போரின் போது 1917 இல் கடன் உச்ச வரம்பு அறிமுகப்படுத்தப்பட்டது. இது, அமெரிக்க கூட்டாட்சி அரசாங்கம் தனது நிதிக் கடமைகளை நிறைவேற்ற கடன் வாங்கக்கூடிய அதிகபட்ச தொகையாகும்.

தி நியூயார்க் டைம்ஸின் கூற்றுப்படி, அரசாங்கம் வரிகள் மற்றும் பிற வருவாய்கள் மூலம் ஈட்டுவதை விட அதிகமாக செலவழிப்பதால், சமூகப் பாதுகாப்பு மற்றும் மருத்துவப் பலன்கள் மற்றும் அமெரிக்க இராணுவ சேவை உறுப்பினர்களின் சம்பளம் போன்ற செலவினங்களுக்காக பணம் கடன் வாங்க வேண்டும்.

2021 இல், இந்த கடன் வரம்பு $31.4 டிரில்லியனாக உயர்த்தப்பட்டது.

### இப்போது என்ன நடக்கிறது?

கருவூல செயலர் ஜேனட் யெலன் பிரதி நிதிகள் சபையின் சபாநாயகர் கெவின் மெக்கார்த்திக்கு எழுதிய கடிதத்தில், “சிறப்பு நடவடிக்கைகளை எடுத்து வருவதாக” கூறியுள்ளார்.

இந்நிலையில், பிபிசியின் ஒரு அறிக்கையில், இத்தகைய நடவடிக்கைகள் கடந்த காலத்தில் அரசாங்கம் ஓய்வூதியம் மற்றும் மத்திய அரசு ஊழியர்களுக்கான சுகாதார நலன்களுக்கான



நிதிகளில் முதலீடுகளை தற்காலிகமாக நிறுத்தி வைப்பது மற்றும் “பின்னர் அந்த நிதியை மீண்டும் முதலிடம் பெறுவது” போன்ற நடவடிக்கைகளை உள்ளடக்கியது என்பதை நினைவுபடுத்துகிறது.

சிவில் சர்வீஸ் ஓய்வு மற்றும் ஊன முற்றோர் நிதி, தபால் சேவை ஓய்வூதியர் உடல்நலப் பலன்கள் நிதி மற்றும் ஃபெடரல் பணியாளர்கள் ஓய்வூதிய அமைப்பு சிக்கன சேமிப்புத் திட்டம் ஆகியவற்றை உள்ளடக்கிய சில கணக்கியல் திட்டங்களை யெலன் ஏற்கனவே அறிவித்துள்ளார்.

### கடன் உச்சவரம்பு மீறப்பட்டால் என்ன நடக்கும்?

சட்டமியற்றுபவர்கள் தங்கள் நிலைப் பாட்டை விரைவாக முடிவுக்குக் கொண்டு வருமாறு வலியுறுத்தும் அதே வேளையில்,

ஜூன் மாதத்திற்குள் கடன் வரம்பை உயர்த்தத் தவறினால், அரசாங்கம் அதன் கடனைத் திருப்பிச் செலுத்தத் தவறிவிடும், இது ஒரு பொருளாதார பேரழிவைத் தூண்டும் என்று கருவூலச் செயலாளர் எச்சரித்தார்.

மேலும், “அரசாங்கத்தின் கடமைகளை நிறைவேற்றத் தவறினால், அமெரிக்கப் பொருளாதாரம், அனைத்து அமெரிக்கர்களின் வாழ்வாதாரம் மற்றும் உலகளாவிய நிதி ஸ்திரத்தன்மைக்கு ஈடுசெய்ய முடியாத தீங்கு ஏற்படும்” என்று யெலன் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

கடன் திருப்பிச் செலுத்தாமல் போனால், டாலர் பலவீனமடையும், பங்குச் சந்தைகள் சரிந்துவிடும், ஆயிரக்கணக்கான மக்கள் வேலை இழக்க நேரிடும் என்று ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

**கடன் திருப்பிச் செலுத்தாமல் போனால், டாலர் பலவீனமடையும், பங்குச் சந்தைகள் சரிந்துவிடும், ஆயிரக்கணக்கான மக்கள் வேலை இழக்க நேரிடும் என்று ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.**

இது முதலீட்டாளர்களை “எதிர்காலத்தில் அரசாங்கத்திற்கு கடன் வாங்குவதற்கு அதிக வட்டி விகிதங்களைக் கோரும்” என்று தி NYT இன் அறிக்கை கூறுகிறது.

## அமெரிக்கா முன்பு கடன் உச்சவரம்பை மீறிவிட்டதா?

இல்லை, அமெரிக்கா இதுவரை கடன் உச்சவரம்பை மீறவில்லை. எவ்வாறாயினும், கடனைத் திருப்பிச் செலுத்துவதை அணுகுவது கூட நீண்ட காலத்திற்கு பொருளாதாரத்தை கடுமையாக பாதிக்கும் என்று நிபுணர்கள் தெரிவிக்கின்றனர்.

2011 ஆம் ஆண்டில், காங்கிரஸின் குடியரசுக் கட்சியினரும், அப்போதைய ஜனாதிபதி பராக் ஒபாமாவும் கடன் உச்சவரம்பு தொடர்பாக நீடித்த, சிராய்ப்புள்ள போரில் ஈடுபட்டனர், இது நடவடிக்கைக்கான காலக்கெடு முடிவடைவதற்கு சற்று முன்பு வரை தொடர்ந்தது.

அப்படியிருந்தும், ரேட்டிங் ஏஜென்சியான Standard&Poors நாட்டின் கடன் மதிப்பீட்டை முதன்முறையாகக் குறைத்துவிட்டது,

இதனால் அமெரிக்க மத்திய அரசு அதன்பின் கடன் வாங்குவதற்கு அதிக செலவு செய்ததாக தி கார்டியனில் ஒரு அறிக்கை நினைவுபடுத்தியது.

## தற்போதைய நெருக்கடியில் பாரபட்சத்தின் பங்கு என்ன?

கடன் உச்சவரம்பு மீதான சண்டைகள் அல்லது கடன் உச்சவரம்பை மாற்றுவது அமெரிக்காவில் புதிதல்ல. பிபிசி அறிக்கையின்படி, 1960 முதல், காங்கிரஸ் கடன் வரம்பின் வரையறையை 78 முறை உயர்த்தியது,

ஆனால் சமீப ஆண்டுகளில், அமெரிக்க அரசியலில் துருவமுனைப்பு விரிவடைந்து ஆழமடைந்து, அரசியல் பிளவு கடினமாகவும் தீவிரமாகவும் இருப்பதால், கடன் உச்சவரம்பு மீதான சண்டைகள் தீவிரமடைந்துள்ளன

கடந்த தசாப்தத்தில், குடியரசுக் கட்சியினர், செலவினக் குறைப்புகளை பேச்சுவார்த்தை நடத்த பேரம் பேசும் சிக்கலாக இந்தப் பிரச்சினையைப் பயன்படுத்தினர் என்று அறிக்கைகள் குறிப்பிட்டுள்ளன.

ஒபாமா நிர்வாகம், குடியரசுக் கட்சியின் பெரும்பான்மையான பிரதிநிதிகள் சபையின் பெரும் அழுத்தத்தின் கீழ், $900 பில்லியனுக்கும் அதிகமான செலவினக் குறைப்புகளுக்கு ஒப்புக்கொண்ட பின்னரே நெருக்கடி முடிவுக்கு வந்தது.

இந்த முறையும், GOP சட்டமியற்றுபவர்கள் தங்கள் நோக்கங்களைத் தெளிவுபடுத்தியுள்ளனர். அதிபர் பிடன் கூட்டாட்சி செலவின குறைப்புகளுக்கு ஒப்புக்கொள்ளும் வரை மீண்டும் கடன் வாங்கும் வரம்பை உயர்த்த மாட்டோம் என்று அவர்கள் உறுதியளித்துள்ளனர்.

GOP க்கு தற்போது அவையில் குறுகிய பெரும்பான்மை மட்டுமே உள்ளது, மேலும் ஜனநாயகக் கட்சியினர் தாங்கள் “எந்தவித பேச்சுவார்த்தைகளிலும்” ஈடுபட மாட்டோம் என்று கூறியுள்ளனர்.

# இருளில் மூழ்கிய பாகிஸ்தான்.. என்ன நடந்தது?



**அண்டை மாநிலமான பாகிஸ்தானில் திங்கள்கிழமை (ஜன.23) காலை நாடு தழுவிய மின்வெட்டு ஏற்பட்டது.**

ராச்சி, இஸ்லாமாபாத், லாகூர் மற்றும் பெஷாவர் உள்ளிட்ட முக்கிய நகரங்களும் இருளில் மூழ்கின.

## என்ன நடந்தது?

பாகிஸ்தானின் எரிசக்தி துறையின் தகவலின்படி அந்நாட்டில் காலை 7.34 மணிக்கு இந்த மின்வெட்டு ஏற்பட்டுள்ளது. தொழில்நுட்ப கோளாறு காரணமாக இந்த மின்சார துண்டிப்பு ஏற்பட்டதாகவும், பிரச்னையை தீர்க்க பணிகள் முழு வீச்சில் வேகமாக நடைபெற்றுவருகின்றன" எனவும் தெரியவருகிறது.

இதற்கிடையில் அந்நாட்டின் மின்சாரத் துறை அமைச்சர் குர்ரம் தஸ்தகிர் (Khurrum Dastagir) ஜியோ (Geo TV) தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டியில், "நாட்டின் தென்பகுதியில் உள்ள ஜாம்ஷோரோ மற்றும் தாது நகரங்களுக்கு இடையே அதிர்வெண் மாறுபாடு ஏற்பட்டதாக தெரிவித்தார்" என ராய்டர்ஸ் செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

மேலும் அமைச்சர் குர்ரம் தஸ்தகிர், "மின்சார விநியோகத்தில் ஏற்றஇறக்கம் ஏற்பட்டது. இதையடுத்து மின்சார விநியோகம் படிபடியாக நிறுத்தப்பட்டன" எனவும் தெரிவித்துள்ளார்.

## நிலைமை எவ்வளவு மோசமாக உள்ளது?

அமைச்சர் தஸ்தகிரின் கூற்றுப்படி, "இது ஒரு பெரிய நெருக்கடி அல்ல," எனத் தெரிவித்துள்ளார். மேலும், அடுத்த 12 மணி நேரத்திற்குள் நாடு முழுவதும் மின்சாரம் முழுமையாக விநியோகிக்கப்படும்" எனவும் தெரிவித்துள்ளார்.

முன்னதாக எரிசக்தி அமைச்சகம் நள்ளிரவில் ட்வீட் ஒன்று வெளியிட்டிருந்தது. அதில், "கடந்த ஒரு மணி நேரத்தில் வார்சாக் மற்றும் இஸ்லாமாபாத்தில் இருந்து கிரிட் நிலையங்களின் மறுசீரமைப்பு தொடங்கப்பட்டுள்ளது. பிளை கம்பெனி மற்றும் பெஷாவர் சப்ளை கம்பெனியின் குறிப்பிட்ட எண்ணிக்கையிலான கட்டங்கள் மீட்டெடுக்கப்பட்டுள்ளன" எனத் தெரிவிக்கப்



பட்டிருந்தது.

## பாதிக்கப்பட்டது யார்?

இஸ்லாமாபாத், கராச்சி, குவெட்டா, பெஷாவர் மற்றும் லாகூர் உள்ளிட்ட பாகிஸ்தானின் பெரும்பகுதிகளில் மின்தடை ஏற்பட்டதாக டான் செய்தித் தொலைக்காட்சி (DawnNewsTV) தெரிவித்துள்ளது.

இதற்கிடையில், "கராச்சியை தளமாகக் கொண்ட மின் பயன்பாட்டு நிறுவனமான கேஎலக்ட்ரிக், நாடு தழுவிய மின்தடை கராச்சியில் மின்சார விநியோகத்தை பாதித்துள்ளது, ஆனால் மறுசீரமைப்பு நடந்து வருகிறது" என கூறியுள்ளது.

## பாகிஸ்தானில் மின்சார விநியோகம் எப்படி இருக்கிறது?

குவெட்டா மின்சார விநியோக நிறுவனத்தின் செய்தித் தொடர்பாளர் முகம்மது அப்சல், "பலுசிஸ்தானில் மூன்று டிரான்ஸ்மிஷன் லைன்களில் பழுதுகள் ஏற்பட்டன. இதன் விளைவாக பலுசிஸ்தான் முழுவதும் பெரிய மின்வெட்டு ஏற்பட்டுள்ளது" எனத் தெரிவித்துள்ளார்.

மேலும், இஸ்லாமாபாத் மின்சார விநியோக நிறுவனத்தின் செய்தித் தொடர்பாளர் டான் செய்தி நிறுவனத்திடம், "தலைநகரில், 117 கிரிட் நிலையங்கள் பாதிக்கப்பட்டன" எனத் தெரிவித்துள்ளார். இந்த இடங்களில் தற்போது மறுகட்டமைப்பு பணிகள் விறுவிறுப்பாக நடைபெற்றுவருவதாகவும் அவர் தெரிவித்தார்.

பாகிஸ்தான் நீண்ட காலமாக பரவலான மின் பற்றாக்குறையை எதிர்கொள்கிறது, மேலும் மோசமான சூழ்நிலைகள் காரணமாக இந்த நெருக்கடி குறைந்தபட்சம் பல ஆண்டுகளாக நீடிக்கும்.

## மின்வெட்டு தீருமா?

2022 கோடையில் நெருக்கடி உச்சத்தை எட்டியது. அப்போது நாட்டில் மிகப்பெரிய அளவில் மின்வெட்டுகள் நடைபெற்றன. டெய்லி டைம்ஸ் ஜூன் தொடக்கத்தில் கராச்சியில் 15 மணிநேரம் வரை மின்தடை ஏற்பட்டுள்ளதாகவும், லாகூரில் கிட்டத்தட்ட 12 மணிநேரம் மின்சாரம் கிடைக்கவில்லை என்றும் தெரிவித்துள்ளது.

மேலும் பாகிஸ்தானில் மின்சாரம் மீதான முதலீடுகள் குறைந்துள்ளன. அங்குள்ள மின்சார உற்பத்தி நிலையங்களும் இறக்குமதி செய்யப்பட்ட எரிபொருளில் இயங்கி வருகின்றன.

இந்த நிலையில் தற்போது பாகிஸ்தானில் மின்சார தேவை அதிகரித்து காணப்படுகிறது. எரிசக்தி இறக்குமதி செலவுகள், எரிபொருள் விலைகளும் உயர்ந்து காணப்படுகின்றன. மறுபுறம் வலுவடையும் அமெரிக்க டாலருக்கு எதிராக பாகிஸ்தான் ரூபாய் மதிப்பும் வீழ்ச்சி அடைந்து காணப்படுகிறது.


Prime Indian Hospitals
ARUMBAKKAM, CHENNAI
Centre of Excellence for
COLOPROCTOLOGY
Speciality
Treatment for
Piles
Fissure & Fistula
in Ano
Perianal Abscess
& Pilonidal Sinus
Polyps, IBD / IBS
Cancer
Dr. R. Kannan
Chairman
For Appointment
044 - 23639999, 9884493140
www.proctocare.net
#1051, Poonamalle High Road, Arumbakkam, Chennai - 600106.
www.primeindianhospitals.com / www.chennaigastroenterologist.in
contact@primeindianhospitals.com / primeindianhospitals@gmail.com

# அமராவதி செல்ல மறுக்கும் ஜெகன்..



**ஆந்திரப் பிரதேசத்தின் தலைநக ராக அமராவதியை உருவாக்குவது தொடர்பான வழக்கு உச்ச நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது.**

இந்த நிலையில், ”விசாகப்பட்டினம் விரைவில் மாநிலத்தின் தலைநகராக மாறும்” என ஆந்திர முதல் அமைச்சர் ஜெகன் மோகன் ரெட்டி மீண்டும் வலியுறுத்தியுள்ளார்.

புதுடெல்லியில் நடைபெற்ற சர்வதேச இராஜதந்திரக் கூட்டணி கூட்டத்தில் முதலீட்டாளர்களிடம் உரையாற்றிய முதல் அமைச்சர் ஜெகன் மோகன் ரெட்டி, ‘வரும் நாள்களில் எங்கள் தலைநகராக இருக்கும் விசாகப்பட்டினத்திற்கு உங்களை அழைக்க வந்துள்ளேன்.

வரும் மாதங்களில் நானே அங்கு மாறுவேன். மார்ச் 3 மற்றும் 4 தேதிகளில் விசாகப்பட்டினத்தில் நாங்கள் நடத்தும் உலகளாவிய முதலீட்டாளர்கள் உச்சி மாநாட்டிற்கு உங்களை அழைக்கிறேன்” எனத் தெரிவித்தார்.

2019 ஆம் ஆண்டில், ஜெகன் முதலில் “பரவலாக்கப்பட்ட வளர்ச்சி” யோசனையை முன்மொழிந்தார். மாநிலத்தில் மூன்று தலைநகரங்களை நிறுவினார்.

அதன்படி முன்னாள் முதல் அமைச்சர் என். சந்திரபாபு நாயுடு உருவாக்கிய, அமராவதி - சட்டமன்றத் தலைநகராகவும், விசாகப்பட்டினம் நிர்வாக தலைநகராகவும், கர்னூல் நீதித்துறை தலைநகராகவும் இருக்கும் என்று அவர் கூறினார்.



இந்த நிலையில், மார்ச் 3, 2022 அன்று, ஆந்திரப் பிரதேச உயர் நீதிமன்றம், முந்தைய தெலுங்கு தேசக் கட்சி அரசாங்கத்தின் தலைநகர் மண்டலமேம்பாட்டு ஆணையத்தின்



(CRDA) சட்டத்தின் கீழ் உத்தேசிக்கப்பட்ட தலைநகர் அமராவதியை உருவாக்குமாறு மாநில அரசுக்கு உத்தரவிட்டது.

மேலும், தலைநகர் அமராவதியின் வளர்ச்சிக்காக நிலத்தை விட்டுக்கொடுத்த விவசாயிகள் மற்றும் ராஜ்தானி விவசாய பரிரக்ஷனா சமிதி என்ற பதாகையின் கீழ் தங்களை ஒருங்கிணைத்து, மாநில அரசின் முடிவை எதிர்த்து உயர்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தனர்.

அப்போது, விவசாயிகள் விட்டுக்கொடுத்த விவசாய நிலத்துக்குப் பதிலாக விவசாயிகளுக்கு ஒதுக்கப்பட்ட மனைகளையும் அரசு மேம்படுத்தி, மூன்று மாதங்களில் ஒப்படைக்க வேண்டும் என்றும், வளர்ந்த மனைகளைச் சுற்றி உள்கட்டமைப்பு வசதிகளை உருவாக்க வேண்டும் என்றும் உயர்நீதிமன்றம் கூறியது.

அறிவு நகரம், சுகாதார நகரம், மின்னணு நகரம், சுற்றுலா நகரம், நீதி நகரம், ஊடக நகரம், விளையாட்டு நகரம், நிதி நகரம் மற்றும் அமராவதி ஆகிய ஒன்பது தீம் நகரங்களின் வளர்ச்சி போன்ற பிற திட்டங்களும் உயர் நீதிமன்ற உத்தரவில் கூறப்பட்டுள்ளது.

ஆனால், ஜெகன் மோகன் ரெட்டி அரசு, உயர்நீதிமன்றத்தின் உத்தரவை எதிர்த்து கடந்த ஆண்டு செப்டம்பரில் உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தது.

நவம்பர் 28, 2022 அன்று, உச்ச நீதிமன்றத்தின் உத்தரவுகளுக்கு ஜனவரி 31, 2023 வரை தடை விதித்து, மத்திய அரசு, ஆந்திரப் பிரதேச அரசு மற்றும் அமராவதி ராஜ்தானி ரிது பரிரக்ஷனன் சமிதியிடம் பதில்களைக் கோரியது.

அப்போது, ஆந்திரப் பிரதேச மறுசீரமைப்புச் சட்டம், 2014 நிறைவேற்றப் படுவதற்கு முன்பாக, 2013ஆம் ஆண்டு ஆந்திரப் பிரதேசத்தைப் பிரிக்கும் விவகாரத்தில் தனது கருத்தைத் தெரிவித்ததால், தலைமை நீதிபதி யு.யு.லலித் வழக்கில் இருந்து விலகினார் என்பது நினைவு கூரத்தக்கது.

# காந்தி படுகொலை செய்யப்பட்ட பிறகு என்ன நடந்தது?

**1948 ஆம் ஆண்டு டெல்லி செங்கோட்டையில் அமைக்கப்பட்ட சிறப்பு நீதிமன்றத்தால் கோட்சேவுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது.**

பஞ்சாப் உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மேல்முறையீட்டு மனுவில், காந்தியைக் கொல்ல சதி செய்யப்பட்டதாக நீதிமன்றம் கண்டறிந்துள்ளது என்றதற்கு கோட்சே எதிர்ப்பு தெரிவித்தார். அவர் மனம் திருந்தவில்லை என்று கோட்சேவின் மேல்முறையீட்டு மனுவை விசாரித்த நீதிபதி கோஸ்லா எழுதியுள்ளார்.

75 ஆண்டுகளுக்கு முன்பு (ஜனவரி 30), மகாத்மா காந்தி டெல்லியில் உள்ள பிர்லா ஹவுஸில் பிரார்த்தனை மண்டபத்தை நோக்கி நடந்து சென்று கொண்டிருந்தபோது, 35 வயதான நாதுராம் கோட்சே அவருக்கு முன்னால் வந்து தனது பாக்கெட்டிலிருந்து ஒரு துப்பாக்கியை எடுத்து, காந்தியின் மார்பு, வயிறு மற்றும் இடுப்புப் பகுதிகளில் மூன்று முறை துப்பாக்கியால் சுட்டான். 15 நிமிடங்களில், தேசத்தந்தை மகாத்மா காந்தி இறந்தார்.


அந்த இடத்தில் இருந்த ராணுவ வீரர்கள் உடனே கோட்சேவை கைது செய்து, அவரது கைத்துப்பாக்கியை பறிமுதல் செய்தனர். கொலையாளியை போலீசார் கைது செய்யும் முன் கூட்டத்தால் தாக்கப்பட்டார். இதையடுத்து, அவர் துக்ளக் சாலையில் உள்ள காவல் நிலையத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டு வழக்குப்பதிவு செய்யப்பட்டது.

### கோட்சே மீது விசாரணை

டெல்லி செங்கோட்டையில் அமைக்கப்பட்ட சிறப்பு நீதிமன்றத்தில் 1948ம் ஆண்டு மே மாதம் விசாரணை தொடங்கியது. இந்த செங்கோட்டை நினைவுச் சின்னம் முன்பு கடைசி முகலாய பேரரசர் பகதூர் ஷா ஜாஃபர் பர்மாவிற்கு நாடு கடத்தப்பட்டு 90 ஆண்டுகளுக்கு பிறகு, இந்திய தேசிய இராணுவத்தின் உறுப்பினர்களின் இடமாக இருந்தது.







இந்த வழக்கு விசாரணை இந்திய குடிமைப் பணி நீதித்துறையின் மூத்த உறுப்பினரான சிறப்பு நீதிபதி ஆத்மா சரண் முன் நடந்தது. அப்போது பம்பாய் அரசு தலைமை வழக்கறிஞராக இருந்த சி.கே.டாப்டரி, பின்னர் இந்தியாவின் சொலிசிட்டர் ஜெனரலாகவும், பின்னர் இந்தியாவின் அட்டர்னி ஜெனரலாகவும் ஆனார்.

இந்த வழக்கில் கோட்சே உடன் நாராயண் ஆப்தே மற்றும் விநாயக் சாவர்க்கர் உள்பட மற்ற குற்றம் சாட்டப்பட்டவர்கள் தங்கள் விருப்பப்படி வழக்கறிஞரின் உதவியைப் பெற அனுமதிக்கப்பட்டனர்.

அசோக் குமார் பாண்டேவின், “அவர்கள் ஏன் காந்தியைக் கொன்றார்கள்: மறைக்கப்படாத சிந்தாந்தமும் சதியும்’ (‘Why They Killed Gandhi: Unmasking the Ideology and the Conspiracy) என்ற புத்தகத்தில், “சட்டம் அதன் கடமையை செய்தது. அதில் அவருக்கு (கோட்சே) அரசாங்க செலவில் சட்ட உதவி வழங்கப்பட்டது, அவர் சிறையில் இருந்தபோது அவரது பெரும்பாலான கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்டன. விசாரணையின் இரண்டாவது நாளில், காவலில் இருந்தபோது, அனைவரும் தன்னிடம் முறையாக நடந்துகொண்டனர் கோட்சே ஒப்புக்கொண்டார்” என்று பாண்டே எழுதியுள்ளார்.

ஜூன் மற்றும் நவம்பர் 1948க்கு இடையில், சிறப்பு நீதிமன்றம் 149 சாட்சிகளை விசாரித்தது. 404 ஆவணங்கள் மற்றும் 80 சாட்சிப் பொருள்கள் ஆதாரங்களாக அரசுச் தரப்பு முன் வைத்தது.

கோட்சே மற்றும் பிறரின் மேல்முறையீட்டு மனுக்களை விசாரித்த பஞ்சாப் உயர் நீதிமன்றத்தின் மூன்று நீதிபதிகள் கொண்ட அமர்வில் இடம் பெற்றிருந்த நீதிபதி ஜி.டி.கோஸ்லாவின் கருத்துப்படி, இந்த வழக்கு விசாரணையின் போது, அரசுத் தரப்புக்கு மிக முக்கியமான சாட்சியாக திகம்பர் பேட்ஜ் இருந்தார். “அவர் சதிகாரர்களில் ஒருவராகவும், கொலைத் திட்டத்தில் தீவிரமாகப் பங்கேற்றவராகவும் குற்றம் சாட்டப்பட்டார்” என்று நீதிபதி கோஸ்லா தனது ‘மகாத்மாவின் படுகொலை’ புத்தகத்தில் எழுதியுள்ளார். அவர் கைது செய்யப்பட்ட பிறகு, பேட்ஜ் தனது குற்றத்தை ஒப்புக்கொண்டார். அவரது கூட்டாளிகளை

குற்றஞ்சாட்ட ஒப்புக்கொண்டார் என்று நீதிபதி கோஸ்லா எழுதியுள்ளார்.

பிப்ரவரி 10, 1949 அன்று தீர்ப்பு வழங்கப்பட்டது. நீதிபதி ஆத்மா சரண், நாதுராம் கோட்சே, ஆப்தே மற்றும் 5 பேர் குற்றவாளிகள் என்று தீர்ப்பளித்தார். கோட்சே மற்றும் ஆப்தே இருவருக்கும் மரண தண்டனை விதிக்கப்பட்டது. சாவர்க்கர் விடுதலை செய்யப்பட்டார்.

இந்த உத்தரவை எதிர்த்து குற்றவாளிகள் மேல்முறையீடு செய்யலாம் என்றும் நீதிபதி அறிவித்தார். நான்கு நாட்களுக்குப் பிறகு, அவர்கள் அனைவரும் பஞ்சாப் உயர்நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்தனர். சிம்லாவில் அமைந்திருந்த அது அப்போது கிழக்கு பஞ்சாப் உயர்நீதிமன்றம் என்று அழைக்கப்பட்டது.


இதில் சுவாரஸ்யமாக, தண்டனையை எதிர்ப்பதற்கு பதிலாக, கோட்சேவின் மேல்முறையீடு, காந்தியின் கொலையில் அவர் மட்டும் ஈடுபடவில்லை என்றும், அவரைக் கொல்ல பெரிய சதி இருப்பதாகவும் நீதிமன்றத்தின் கண்டுபிடிப்புக்கு எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது.

## உயர்நீதிமன்றத்தில் மேல்முறையீடு

இந்த மேல்முறையீட்டு மனுக்களை நீதிபதி கோஸ்லா, நீதிபதி ஏஎன் பண்டாரி, நீதிபதி அச்சு ராம் ஆகியோர் அடங்கிய அமர்வு விசாரித்தது. விசாரணையின் போது, கோட்சே ஒரு வழக்கறிஞர் மூலமாக ஆஜராக மறுத்தார். தனது மேல்முறையீட்டு மனுவில் தானே வாதாட அனுமதிக்குமாறு கேட்டுக் கொண்டார். அவரது கோரிக்கையை நீதிமன்றம் ஏற்றுக்கொண்டது.

நீதிபதி கோஸ்லா நீதிமன்றத்தில் கூறுகையில்,கொலையாளி தனது குற்றத்திற்காக வருந்தவில்லை என்றும், அச்சமற்ற தேசபக்தர் மற்றும் இந்து சித்தாந்தத்தின் உணர்ச்சிமிக்க கதாநாயகனாகவும் தன்னை வெளிப்படுத்திக் கொள்ள இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டார் என்றும் கூறினார்.

“அவர் (கோட்சே) தனது கொடூரமான குற்றத்திற்காக முற்றிலும் வருத்தப்படவில்லை. அவரது நம்பிக்கைகளில் ஆழ்ந்த நம்பிக்கையின் காரணமாகவோ அல்லது கடைசியாக பகிரங்க மன்னிப்பு கேட்பதற்காகவோ



இந்த வாய்ப்பை நாடவில்லை. அவர் மறதிக்குள் மறைந்து போவதற்கு முன்பு தனது திறமைகளை வெளிப்படுத்த இந்த வாய்ப்பை நாடியுள்ளார்” என நீதிபதி கோஸ்லா எழுதியுள்ளார்.

இந்த நீதிபதிகள் அமர்வு ஜூன் 21, 1949 ல் தனது தீர்ப்பை வழங்கியது. அனைத்து குற்றச்சாட்டுகளிலிருந்தும் விடுவிக்கப்பட்ட தத்தாத்ராய பார்ச்சூர் மற்றும் ஷங்கர் கிஸ்தாய்யா ஆகியோரின் வழக்குகளைத் தவிர, கீழ் நீதிமன்றத்தின் கண்டுபிடிப்புகள் மற்றும் தண்டனைகளை இது உறுதிப்படுத்தியது.

## இறுதி மேல்முறையீடு

குற்றவாளிகள் ஆங்கிலேயர் ஆட்சியின் போது இந்தியாவின் உச்ச நீதிமன்றமாக இருந்த தனி சிறப்பு கவுன்சிலில் மேல்முறையீடு செய்ய சிறப்பு அனுமதி கோரியும் மனு தாக்கல் செய்தனர். அது 1950ல் உச்ச நீதிமன்றத்தால் மாற்றப்பட்டது. இருப்பினும், அந்த மனு நிராகரிக்கப்பட்டது.

கோட்சே மற்றும் ஆப்தே ஆகியோரின் கருணை மனுக்களை இந்திய கவர்னர் ஜெனரல் நிராகரித்ததை அடுத்து அவர்கள் தூக்கிலிடப்படுவது தவிர்க்க முடியாததாகிவிட்டது. கோட்சேவின் கருணை மனு தாக்கல் செய்யப்பட்டது அவர் அல்ல, அவரது பெற்றோர் தாக்கல் செய்தனர். இருவரும் நவம்பர் 15, 1949 அன்று அம்பாலா சிறையில் தூக்கிலிடப்பட்டனர்.


Prof.Dr.S.Natarajan.,M.S.(Ortho),
Fellowship in Arthroscopy and Joint Replacement
Life Care
DKJ Hospital
CARE... with love
VILLIVAKKAM, CHENNAI
FREE
Ortho & Spine
Medical Camp
• FREE Specialist Consultantion
• FREE Dexa Scan For Bone
• FREE Body Mass Index
• 50% Concession XRAY, Lab Investigations
• 30% Concession For Surgeries
Date & Time : 11/09/2022, 8am- 2pm (SUNDAY)
For Appointments Contact :
044 - 4357 7755, 87545 90905
www.lifecaredkjhospital.in
gisurgeonrk@gmail.com
177/ 3, Madras Thiruvallur High Road, Villivakkam, Chennai - 600049

# 'இந்தியா மீதான தாக்குதல்'; ஹிண்டன்பர்க் குற்றச்சாட்டுகளுக்கு அதானி குழுமம் பதில்



**அதானி குழுமம் ஞாயிற்றுக்கிழமை நியூயார்க்கை தளமாகக் கொண்ட ஹிண்டன்பர்க் ரிசர்ச் தனது நிறுவனங்களுக்கு எதிராக கடந்த வாரம் வைத்த குற்றச் சாட்டுகளை மறுத்து, ஒரு அறிக்கையில் அதானி நிறுவனங்கள் மற்றும் இந்தியாவின் "வளர்ச்சிக் கதை" உள்ளிட்ட "இந்தியா மீதான திட்டமிடப்பட்ட தாக்குதல்", என்று பதில் அளித்து சமன் செய்தது.**

"முறைகேடான பங்கு கையாளுதல் மற்றும் கணக்கியல் மோசடி" என்று குற்றம் சாட்டிய 106 பக்க ஹிண்டன்பர்க் ரிசர்ச் அறிக்கைக்கு அளித்த 413 பக்க பதிலில், அதானி குழுமம், "இது வெறுமனே ஒரு குறிப்பிட்ட நிறுவனத்தின் மீதான தேவையற்ற தாக்குதல் அல்ல, மாறாக இந்தியா, இந்திய நிறுவனங்களின் சுதந்திரம், ஒருமைப்பாடு மற்றும் தரம் மற்றும் இந்தியாவின் வளர்ச்சிக் கதை மற்றும் லட்சியம் ஆகியவற்றின் மீதான திட்டமிடப்பட்ட தாக்குதலாகும்," என்று கூறியது.

"நம்பகத்தன்மை அல்லது நெறிமுறைகள் இல்லாமல் ஆயிரக்கணக்கான மைல்களுக்கு அப்பால் அமர்ந்திருக்கும் ஒரு நிறுவனத்தின் அறிக்கைகள் எங்கள் முதலீட்டாளர்களுக்கு தீவிரமான மற்றும் முன்னெப்போதும் இல்லாத பாதகமான பாதிப்பை ஏற்படுத்தியிருப்பது மிகவும் கவலையளிக்கிறது" என்று அதானி குழுமம் தெரிவித்துள்ளது.

நியூயார்க்நிறுவனமானஹிண்டன்பர்க்கின் அறிக்கையானது இரண்டு வர்த்தக அமர்வு களில் அதானி குழுமம் 50 பில்லியன் அமெரிக்க டாலர்களுக்கும் அதிகமான சந்தை மதிப்பை இழக்க வழிவகுத்தது மற்றும் அதன் தலைவர் கௌதம் அதானி 20 பில்லியன் அமெரிக்க டாலர்கள் அல்லது அவரது மொத்த செல்வத்தில் ஐந்தில் ஒரு பங்கை இழந்தார்.

அதானி எண்டர்பிரைசஸ் லிமிடெட் நிறுவனத்தின் எஃப்.பி.ஓ வெளியீட்டிற்கு இரண்டு நாட்களுக்கு முன்னதாக அறிக்கை வெளியிடப்பட்ட நேரத்தைக் கேள்விக் குட்படுத்திய அதானி குழுமம், "அதானி எண்டர்பிரைசஸ் லிமிடெட் நிறுவனம் இந்தியாவில் இதுவரை இல்லாத அளவில் ஈக்விட்டி பங்குகளின் பொது வழங்கலை மேற்கொண்டு வரும் காலக்கட்டத்தில், அறிக்கை வெளியிடப்பட்டுள்ளதன் மூலம் அவர்களின் தவறான எண்ணம் தெளிவாகத் தெரிகிறது," என்று கூறியது.

ஹிண்டன்பர்க் அறிக்கை "சுயாதீனமானதோ" அல்லது "தெளிவானதோ" அல்லது "நன்றாக ஆய்வு செய்யப்பட்டதோ" அல்ல என்று அதானி குழுமம் கூறியது, அதே நேரத்தில் அதானி குழுமம் பொருந்தக்கூடிய அனைத்து சட்டங்கள் மற்றும் விதிமுறைகளுக்கு இணங்குவதை மீண்டும் உறுதிப்படுத்துகிறது என்று அதானி குழுமம் வலியுறுத்தியது.

"தேர்ந்தெடுக்கப்பட்ட தவறான தகவல்களின் தீங்கிழைக்கும் கலவையாகும் மற்றும் அடிப்படையற்ற மற்றும் மதிப் பிழந்த குற்றச்சாட்டுகள் தொடர்பான மறைக்கப் பட்ட உண்மைகள் ஒரு தவறான நோக்கத்தை இயக்கும்", என்று அதானி குழுமத்தின் அறிக்கை கூறியது.

"இந்த அறிக்கை தவறான நோக்கத்தின் அடிப்படையில் நிறைந்துள்ளது மற்றும் அனுமதிக்கப்பட்ட குறுகிய விற்பனை யாளரான ஹிண்டன்பர்க் நிறுவனத்திற்கு, எண்ணற்ற முதலீட்டாளர்களின் செலவில் தவறான வழிகளில் பெரிய நிதி ஆதாயத்தை பதிவு செய்ய, பத்திரங்களில் ஒரு தவறான சந்தையை உருவாக்க மட்டுமே நோக்கமாக உள்ளது" என்று அதானி குழுமம் கூறியது.

ஹிண்டன்பர்க் ஆராய்ச்சியின் நற்சான்றிதழ்களை கேள்விக்குள்ளாக்கிய அதானி குழுமம், "முரண்பாடாக வெளிப்படைத்தன்மை மற்றும் திறந்த செயல்பாட்டை மேற்கொள்ளும் ஒரு



நிறுவனத்திற்கு, ஹிண்டன்பர்க் அல்லது அதன் பணியாளர்கள் அல்லது அதன் முதலீட்டாளர்கள் பற்றி எதுவும் தெரியாது. இந்த அமைப்புக்கு பல தசாப்தங்கள் நீடித்த அனுபவம் இருப்பதாக கூறினாலும், 2017 இல் மட்டுமே நிறுவப்பட்டதாக அதன் இணையதளம் கூறுகிறது," என்று குற்றம்சாட்டியது.

ஜனவரி 24 அன்று ஹிண்டன்பர்க் ஆராய்ச்சி அறிக்கை வெளியானதிலிருந்து, அதானி குழுமத்தின் பங்குகள் பெரும் சரிவைக் கண்டன. கடந்த இரண்டு வர்த்தக அமர்வுகளில், புதன் மற்றும் வெள்ளிக்கிழமைகளில், பட்டியலிடப்பட்ட 10 அதானி நிறுவனங்கள் சந்தை மதிப்பில் ரூ.4.17 லட்சம் கோடியை இழந்துள்ளன.

"அறிக்கையில் கூறப்பட்டுள்ள இந்த ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளுக்கு பதிலளிக்க வேண்டிய கடமை எமக்கு இல்லையென்றாலும், நல்லாட்சி, வெளிப்படைத்தன்மை மற்றும் எங்கள் பங்குதாரர்களுக்கு வெளிப்படைத்தன்மை மற்றும் தவறான சந்தையை தவிர்க்க, அறிக்கையில் எழுப்பப்பட்டுள்ள 88 கேள்விகளுக்கு நாங்கள் எங்கள் பதில்களை வழங்குகிறோம்," என்று அதானி குழுமம் தெரிவித்துள்ளது.

ஹிண்டன்பர்க் "எந்தவொரு நற்பண்புள்ள காரணங்களுக்காகவும் அறிக்கையை வெளியிடவில்லை, ஆனால் முற்றிலும் சுயநல நோக்கங்களுக்காகவும், பொருந்தக்கூடிய பத்திரங்கள் மற்றும் அந்நியச் செலாவணி சட்டங்களை அப்பட்டமாக மீறுவதாகவும்" கூறிய அதானி குழுமம், "விஷயத்தின் உண்மை என்னவென்றால், ஹிண்டன்பர்க் ஒரு நெறிமுறையற்ற குறுகிய விற்பனையாளர். பத்திரச் சந்தை புத்தகங்களில் ஒரு குறுகிய விற்பனையாளர் பங்குகளின் விலைகள் அடுத்தடுத்த குறைப்பால் ஆதாயம் பெறுகிறார்," என்று கூறியது.

மேலும், "பொருந்தக்கூடிய அனைத்து சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகளுக்கு இணங்குகிறது, அதானி குழுமம் மிகவும் வலுவான உள் கட்டுப்பாடுகள் மற்றும் தணிக்கைக் கட்டுப்பாடுகளைக் கொண்டுள்ளது. அதானி குழுமத்தின் அனைத்து பட்டியலிடப்பட்ட நிறுவனங்களும் வலுவான நிர்வாக கட்டமைப்பைக் கொண்டுள்ளன," என்றும் அதானி குழுமம் கூறியது.



# இளங்கலை படிப்புகளில் பாலின இடைவெளி அதிகரிப்பு..

**நாடு முழுவதும் இளங்கலை படிப்புகளில் பாலின இடைவெளியை குறைக்கும் முயற்சியில் தொற்றுநோய் ஆண்டில் பின்னடைவை சந்தித்தன. 2020-21 கல்வியாண்டில் பல்வேறு இளங்கலைப் படிப்புகளில் சேரும் ஒவ்வொரு 100 ஆண்களுக்கும் பெண்களின் எண்ணிக்கை குறைந்துள்ளதாக கல்வித் துறை அமைச்சகம் வெளியிட்ட அகில இந்திய உயர்கல்வி பற்றிய ஆய்வு (AISHE) அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

2019இல் பி.காம் பாடத்தில் பாலின இடைவெளி குறைக்கப்பட்டு ஒரு வருடத்திற்குப் பிறகு, ஆண் மாணவர்களைப் போலவே அதிகமான பெண்களும் இருந்தனர். 2020-2021க்கான AISHE அறிக்கையில், இது மாறுபட்டுள்ளது. கொரோனா தொற்றால் கல்வியில் இடையூறு ஏற்பட்டது. திருமணம் போன்ற காரணங்களால் இந்த விகிதம் குறைந்தது.

2019 ஆம் ஆண்டில் பி.காம் பாடத்தில் பதிவுசெய்யப்பட்டவர்களில் 100 ஆண்களுக்கு 100 பெண்கள் விகிதம் இருந்தனர். 2020 ஆம் ஆண்டில் பெண்களின் சேர்க்கை குறைந்தது. 100 ஆண்களுக்கு 94 பெண்களாக குறைந்தது. இது 2016 கணக்கீட்டிற்கு நிகராக இருந்தது, 2016இல் 100 ஆண் மாணவர்களுக்கு 93 பெண்கள் என இருந்தனர்.

மாணவிகளின் விகிதம் மருத்துவம் உள்பட பிற இளங்கலை பாடங்களிலும் குறைந்தது. 2019-20 ஆம் ஆண்டில் எம்.பி.பி.எஸ் படிப்பில் 100 ஆண்களுக்கு 110 பெண்கள் இருந்தனர். 2020-21ம் ஆண்டில் 100 பெண்கள் என குறைந்தது. இளங்கலை பார்மஸி படிப்பில் 2019ம் ஆண்டு 93 பெண்கள், 100 ஆண்கள் என்ற விகிதத்தில் இருந்தனர். இது 2020-21ம்



**முதுகலை மட்டத்திலும், 2019-20 ஆம் ஆண்டை விட 2020-21 ஆம் ஆண்டில் வணிக நிர்வாகம், அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் வணிகத்தைத் தொடரும் பெண்களின் எண்ணிக்கை குறைந்துள்ளது.**

ஆண்டில் கடுமையாக சரிந்து 66 பெண்களாக குறைந்தது.

நர்சிங் மற்றும் ஆசிரியர் போன்ற இளங்கலைப் படிப்புகள், பாரம்பரியமாக அதிக பெண்கள் சேருவதை வழக்கமாக கொண்டிருந்தன. இருப்பினும் இதிலும் பெண்களின் எண்ணிக்கையில் குறிப்பிடத்தக்க சரிவைக் கண்டது. 2019-20 இல் நர்சிங் 385 மற்றும் கல்வியில் 215 (ஒவ்வொரு 100 ஆண்களுக்கும்) இருந்து 2020-21ம் ஆண்டில் முறையே 308 மற்றும் 185 பெண்களாக குறைந்தது.

கணினி அறிவியல், வணிக நிர்வாகம், மருந்தகம், தொழில்நுட்பம் மற்றும் சட்டம் போன்ற இளங்கலை படிப்புகளில் பாலின இடைவெளி தொடர்ந்து அதிகரித்து வருகிறது.

சமீபத்திய கணக்கெடுப்பின்படி, உயர்கல்வியில் மொத்த மாணவர் சேர்க்கை 2019 இல் 3.85 கோடியிலிருந்து 2020-21 இல் சுமார் 4.13 கோடியாக உயர்ந்துள்ளது, இது கிட்டத்தட்ட 29 லட்சம் அதிகரித்துள்ளது. மொத்தம் பதிவு செய்யப்பட்டவர்களில், 51.3% அல்லது 2.12 கோடி ஆண்கள் மற்றும் 48.7% பெண்கள்.

முதுகலை மட்டத்திலும், 2019-20 ஆம் ஆண்டை விட 2020-21 ஆம் ஆண்டில் வணிக நிர்வாகம், அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் வணிகத்தைத் தொடரும் பெண்களின் எண்ணிக்கை குறைந்துள்ளது.

முதுகலை மட்டத்தில், 100 ஆண்களுக்கு பெண்களின் எண்ணிக்கையில் எம்.காம் படிப்பில் மட்டுமே உயர்ந்துள்ளது - 2019 இல் 186 பெண்களில் இருந்து 2020-21 இல் 198 ஆக உயர்ந்துள்ளது. முதுகலை மட்டத்தில் வணிக நிர்வாகம் மற்றும் தொழில்நுட்பம் போன்ற படிப்புகள் ஆண்களே அதிகம் படிக்கின்றன.

AISHE நாடு முழுவதிலும் உள்ள 1,113 பல்கலைக்கழகங்கள், 43,796 கல்லூரிகள் மற்றும் 11,296 தனி நிறுவனங்களில் ஆய்வு செய்து அறிக்கை வெளியிட்டுள்ளது. 2020 21 ஆம் ஆண்டில், பல்கலைக்கழகங்களின் எண்ணிக்கை 70 ஆகவும், கல்லூரிகளின் எண்ணிக்கை 1,453 ஆகவும் அதிகரித்துள்ளது என ஆய்வு கூறுகிறது.



# முதலீட்டாளர்களுக்கு சிக்கல் இல்லை.. ஐ.டி துறை சவால்கள் என்ன?

**இந்தியாவின் டெக் புளூ சிப் இன்ஃபோசிஸ் டிசம்பர் 2022 உடன் முடிவடைந்த காலாண்டில் அதன் ஒருங்கிணைந்த நிகர லாபத்தில் 13.4 சதவீதம் உயர்ந்துள்ளதாக அறிவித்தது.**

*இந்த வார தொடக்கத்தில், நாட்டின் மிகப்பெரிய ஐடி நிறுவனமான டாடா கன்சல்டன்சி சர்வீசஸ் லிமிடெட் (டிசிஎஸ்) 11.02 ஐப் பதிவு செய்தது.*

*காலாண்டில் லாபத்தில் சதம் வளர்ச்சி. தொழில்நுட்ப நிறுவனங்கள், பொருளாதார மந்தநிலையின் மாறுபாடுகளைத் தாங்கி நிற்கின்றன, இது அதிக பணவீக்கம், அதிக வட்டி விகிதங்கள் மற்றும் உலகம் முழுவதும் வீழ்ச்சியடைந்த வளர்ச்சி விகிதங்களால் தூண்டப்பட்டது.*


## தொழில்நுட்பத் துறைக்கு எது சரியாகப் போகிறது?

*மூன்றாம் காலாண்டில் இன்ஃபோசிஸின் செயல்பாட்டு விளிம்புகள், செயல்பாட்டு அளவுருக்களில் பருவகால பலவீனத்தின் தாக்கத்தை ஈடுசெய்துள்ள செலவு மேம்படுத்தல் நன்மைகள் காரணமாக மீள்தன்மையுடன் இருந்தன. இந்த காலாண்டில் அட்ரிஷனும் அர்த்தமுள்ளதாக குறைந்துள்ளது மேலும் இது நிறுவனத்திற்கு சாதகமான வளர்ச்சியாகும்.*

*“நிறுவனத்தின் (இன்ஃபோசிஸ்) செயல் திறன் அதன் டிஜிட்டல் பிரிவில் வலுவான இழுவை மற்றும் செயல்பாட்டு செயல்திறனில் தொடர்ந்து கவனம் செலுத்துவதன் காரணமாக தொடர்ந்து நெகிழ்ச்சியுடன் இருக்கும் என்று நாங்கள் உணர்கிறோம்,” என்று ஷி□ஷீஜ்தீஷீஜ் இன் ஆராய்ச்சித் தலைவர் மணீஷ் சௌத்ரி கூறினார்.*

*உலகப் பொருளாதாரம் உயர் பணவீக்கம் மற்றும் வட்டி விகிதங்களால் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், தொழில்நுட்ப நிறுவனங்கள் வெளிநாட்டு சந்தைகளிலும் தங்கள் வளர்ச்சியின் வேகத்தை பராமரித்தன.*

*முக்கிய சந்தைகளில், வட அமெரிக்கா மற்றும் இங்கிலாந்து 15.4 சதவீத வளர்ச்சியுடன்*



முன்னணியில் உள்ளன, அதே நேரத்தில் கான்டினென்டல் ஐரோப்பா 9.7 சதவீத வளர்ச்சியைக் கண்டது.

வளர்ந்து வரும் சந்தைகளில், லத்தீன் அமெரிக்கா 14.6 சதவீதமும், இந்தியா 9.1 சதவீதமும், ஆசியா பசிபிக் 9.5 சதவீதமும், மத்திய கிழக்கு மற்றும் ஆப்பிரிக்கா 8.6 சதவீதமும் வளர்ச்சியடைந்துள்ளதாக டிசிஎஸ் தெரிவித்துள்ளது.

இதற்கிடையில், “”டிஜிட்டல் வணிகம் மற்றும் முக்கிய சேவைகள் ஆகிய இரண்டும் வளர்ந்து வரும் காலாண்டில் எங்கள் வருவாய் வளர்ச்சி வலுவாக இருந்தது. இது எங்களின் ஆழ்ந்த வாடிக்கையாளர் தொடர்பு, தொழில்துறையில் முன்னணியில் இருக்கும் டிஜிட்டல், கிளவுட் மற்றும் ஆட்டோமேஷன் திறன்கள் மற்றும் எங்கள் ஊழியர்களின் இடைவிடாத அர்ப்பணிப்பு ஆகியவற்றின் தெளிவான பிரதிபலிப்பாகும்” என்று இன்ஃபோசிஸின் தலைமை நிர்வாக அதிகாரியும் நிர்வாக இயக்குநருமான சலில் பரேக் கூறினார்.

## தகவல் தொழில்நுட்பத் துறையின் பார்வை என்ன?

உலகளவில், கோவிட்19 டெயில்விண்ட்கள் தொடர்ந்து குறைந்து வருவதால், ஐரோப்பாவில் எரிசக்தி விலைகள் உயர்ந்து, உலகளாவிய பொருளாதார செயல்பாடுகள் குறைவதால், நுகர்வோர் தொழில்நுட்பத்தில் அதிக நிச்சயமற்ற தன்மையை நிபுணர்கள் எதிர்பார்க்கின்றனர்.

“நுகர்வோர் ஐடி வன்பொருள், கேமிங், இகாமர்ஸ் மற்றும் டிஜிட்டல் விளம்பரம் போன்ற பகுதிகள் மீட்சிக்கு சற்று நீண்ட பாதையைக் கொண்டிருக்கக்கூடும் என்று நாங்கள் நம்புகிறோம். வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரிப்பதால் நுகர்வோர் விருப்பச் செலவுகள் பலவீனமடையும் என்றும், தொடர்ந்து அதிக பணவீக்கத்திற்கு மத்தியில் தொற்றுநோய் வீழ்ச்சியின் போது கட்டியெழுப்பப்பட்ட அதிகப்படியான குடும்ப சேமிப்புகள் என்றும் நாங்கள் எதிர்பார்க்கிறோம், ”என்று பிராங்க்ளின் ஈக்விட்டி குழுமத்தின் போர்ட்ஃபோலியோ மேலாளர் ஜொனாதன் கர்டிஸ் கூறினார்.

உண்மையில், இது 2022 இன் இரண்டாம் பாதியில் விளையாடத் தொடங்கியது, இது குறைக்கடத்தி, நுகர்வோர் தனிநபர் கணினி (பிசி), கேமிங் மற்றும் இணையத் தொழில்களில் எதிர்மறையான மதிப்பீட்டிற்கு வழிவகுத்தது.

2023 ஆம் ஆண்டிற்கான இந்திய தகவல் தொழில்நுட்பத் துறையின் பார்வை நிலையானது என்று ஃபிட்ச் ரேட்டிங்ஸ் தெரிவித்துள்ளது. “2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளில் இந்திய ஐடி சேவை நிறுவனங்களின் வருவாய் வளர்ச்சி உலகளாவிய போட்டியாளர்களை விட சற்று அதிகமாக இருக்கும் என்று நாங்கள் எதிர்பார்க்கிறோம்,

ஏனெனில் வாடிக்கையாளர்கள் பொருளாதார வீழ்ச்சியின் மத்தியில் குறைந்த விலை ஐடி விற்பனையாளர்களை விரும்புவார்கள். 20072010 ஆம் ஆண்டின் உலகளாவிய நிதி நெருக்கடியில், இந்திய ஐடி நிறுவனங்களின் அமெரிக்க டாலர் மதிப்பிலான வருவாய் 16 சதவிகிதம் சிகிநிஸி இல் விரிவடைந்தது – Accenture plc, Capgemini SE மற்றும் Atos SE போன்ற உலகளாவிய சகாக்களை விஞ்சியது. ” என்றார் ஃபிட்ச்.

## தகவல் தொழில்நுட்பத் துறைக்கு என்ன பாதிப்பு?

கடந்த நான்கு காலாண்டுகளில் அதிக பணவீக்கம் மற்றும் வட்டி விகிதங்களில்

கூர்மையான அதிகரிப்பு ஆகிய இரண்டு காரணிகள் இந்தத் துறையின் மீது நிழலை ஏற்படுத்தக்கூடும். இது மந்தநிலை பற்றிய பேச்சுகளுக்கு மத்தியில் தங்கள் மிஜி வரவு செலவுகளைக் குறைக்க நிறுவனங்களை கட்டாயப்படுத்தியுள்ளது.

உயர் பணவீக்கம் மற்றும் உயரும் வட்டி விகிதங்கள் நிறுவனங்களின் மூலதனச் செலவை அதிகரிக்கும் அதே வேளையில், அவை தனிநபர்களின் செலவழிப்பு வருமானத்தை உண்கின்றன மற்றும் பலவீனமான மேக்ரோ பொருளாதாரக் கண்ணோட்டத்திற்கு மத்தியில் அவர்களின் செலவினங்களைக் குறைக்க அவர்களை கட்டாயப்படுத்துகின்றன.

இது தொழில்நுட்ப நிறுவனங்களின் கண்ணோட்டத்தை நேரடியாகப் பாதிக்கிறது - அது அவர்களின் தயாரிப்புகள், சேவைகள் அல்லது விளம்பர வருவாய்கள் சம்பந்தமாக இருந்தாலும் - அதன் மூலம் அவர்களின் பங்கு விலைகளை பாதிக்கிறது. இந்திய ஐடி மேஜர்களைப் பொறுத்தவரை, அமெரிக்கா மற்றும் ஐரோப்பாவில் உள்ள சாதகமற்ற மேக்ரோ பொருளாதார சூழ்நிலை, ஆர்டர் ஓட்டங்கள், வணிக வளர்ச்சி, வருவாய் மற்றும் பங்கு விலைகளை குறைக்கும்.

## பங்குச் சந்தைகளில் தொழில்நுட்ப நிறுவனங்கள் எவ்வாறு செயல்படுகின்றன?

“வரலாற்று சராசரிகளுடன் ஒப்பிடும்போது மதிப்பீடு இன்னும் கவர்ச்சிகரமானதாகத் தெரிகிறது, மேலும் வரம்பிற்குட்பட்ட எதிர்மறையான அபாயங்கள் முன்னோக்கிச் செல்வதாக நாங்கள் நம்புகிறோம்,” என்று ஒரு தரகு நிறுவனத்தின் ஆய்வாளர் கூறினார்.

பங்குச் சந்தையின் செயல்திறன், ஐடி நிறுவனங்கள், அமெரிக்கா மற்றும் ஐரோப்பாவின் மந்தநிலை கவலைகள் மற்றும் இந்திய ஐடி நிறுவனங்களில் அதன் தாக்கம் குறித்து சந்தைகள் கொண்டிருக்கும் கவலைகளை தெளிவாக பிரதிபலிக்கிறது

ஏப்ரல் 1, 2022 முதல் ஜனவரி 12, 2023 வரையிலான காலகட்டத்தில், பிஎஸ்இயில் சென்செக்ஸ் 1.14 சதவீதம் உயர்ந்துள்ள நிலையில், பிஎஸ்இயில் ஐடி குறியீடு 21.28 சதவீதம் குறைந்துள்ளது.

முன்னணி ஐடி நிறுவனங்களான டிசிஎஸ் (18 சதவீதம்), இன்ஃபோசிஸ் (24 சதவீதம்) மற்றும் எச்சிஎல் டெக்னாலஜிஸ் (21 சதவீதம்) ஆகியவை ஏற்கனவே 52 வார உயர்மட்டத்தில் இருந்து குறைந்துள்ளன.

உண்மையில், மியூச்சுவல் ஃபண்ட் மற்றும் வெளிநாட்டு போர்ட்ஃபோலியோ முதலீட்டாளர்களின் ஐடி நிறுவனங்களின் பங்குகளில் கூர்மையான சரிவு ஏற்பட்டுள்ளது. இருப்பினும், டிசிஎஸ் மற்றும் இன்ஃபோசிஸ் போன்ற ஐடி நிறுவனங்களும் பங்குதாரர்களுக்கு நல்ல விலையில் திரும்பப் பெறுவதாக அறிவித்துள்ளன.

ஐடி மற்றும் தொழில்நுட்ப நிறுவனங்கள் கோவிட் காலங்களில் அனைத்துமே டிஜிட்டலாக மாறியதாலும், அவற்றின் வளர்ச்சியில் நம்பிக்கை ஏற்பட்டதாலும் மதிப்பீடுகளில் கூர்மையான எழுச்சி காணப்பட்டது. பொருளாதார மந்தநிலை குறித்த வளர்ந்து வரும் கவலைகளுக்கு மத்தியில், அமெரிக்காவின் முன்னணி தொழில்நுட்ப நிறுவனங்களின் பங்குகள் கூட மீண்டும் அந்த உயர்வை எட்டவில்லை.

அமெரிக்க தொழில்நுட்ப ஜாம்பவான்கள் போராடினால், அமெரிக்கா மற்றும் பிற வளரும் பொருளாதாரங்களில் இருந்து வணிகம் மற்றும் வருவாயை நம்பியிருக்கும் இந்திய தகவல் தொழில்நுட்பத் துறை பாதிக்கப்படாமல் போவது சாத்தியமில்லை.

எவ்வாறாயினும், அமெரிக்கா மற்றும் ஐரோப்பாவின் வளர்ச்சிக் கவலைகள் காரணமாக ஐடி நிறுவனங்களின் விலைகள் சரிவைக் கண்டுள்ளதால், பணவீக்கத்தில் தணிவு மற்றும் வட்டி விகிதங்களில் ஸ்திரத்தன்மை ஆகியவை இந்த நிறுவனங்களின் பங்கு விலைகளில் மேல்நோக்கி மாற்றத்தை ஏற்படுத்தும் என்று நிபுணர்கள் கருதுகின்றனர்.

எனவே, நடுத்தர முதல் நீண்ட காலத்திற்கு, முன்னணி ஐடி மேஜர்களின் வீழ்ச்சியில் முதலீடு செய்வது மோசமான யோசனையாக இருக்காது” என்று ஒரு முன்னணி மியூச்சுவல் ஃபண்டின் நிதி மேலாளர் கூறினார்.

ஆளுநர் தேனீர் விருந்து

# முதல்வர் ஸ்டாலின் பங்கேற்பு திமுக தோழமை கட்சிகள் புறக்கணிப்பு...!

## நடந்தது என்ன..?

**75 ஆம் குடியரசு விழாவை முன் னிட்டு சென்னை கடற்கரை சாலையில் உழைப்பாளர் சிலையின் முன்பாக தேசிய கொடியை ஏற்றிவைத்து அலங்கார ஊர்திகளை பார்வை யிட்ட ஆளுநர் வழக்கம் போல் ஆளுநர் மாளிகையில் முக்கிய பிரமுகர்களுக்கு தேனீர் விருந்து அளிப்பது நடைமுறையாக இருந்து வருகிறது.**

கடந்த சட்டமன்ற கூட்டத்தொடர் முடிவுற்ற நிலையில் சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், அரசியல் கட்சி பிரமுகர்களுக்கும் இதே போல் ஆளுநர் தேனீர் விருந்து அளிப்பது வாடிக்கையான ஒன்று. சட்டமன்றத்தில் ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றிய பின் ஆளுநர் மாளிகையில் நடைபெற்ற தேனீர் விருந்தை பங்கேற்காமல் புறக்கணித்த திமுக மற்றும் அதன் தோழமை கட்சிகள் குடியரசு தின நிகழ்ச்சி அன்று நடைபெற்ற தேனீர்விருந்தில் திமுக தோழமை கட்சிகள் மட்டும் தேனீர் விருந்தை புறக்கணித்து விட்டது. திமுக அமைச்சர்களும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களும் ஆளுநர் மாளிகையில் நடைபெற்ற தேனீர் விருந்தில் பங்கேற்று ஆளுநரை கௌரவப்படுத்தியது வரவேற்க தக்கது என்றாலும் ஆளுநருக்கும் திமுகவுக்கும் இருந்துவந்த மோதல் போக்கிற்கு இந்த தேனீர் விருந்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் பங்கேற்றது சமரச முயற்சியா? அல்லது சமாதான உடன்பாடா? என்ற கேள்வியை அரசியல் கட்சியினர் குறிப்பாக எதிர் கட்சி யினர் கேட்க தொடங்கிவிட்டார்கள்.

தேனீர் விருந்தின் பின்னணி நடப்பது என்ன? நடக்கப் போவது என்ன? என்பதுடன் ஆளுநரை மாற்ற வேண்டும் என்ற திமுகவின் முறையீடும் குடியரசு தலைவர் மாளிகையில் வழங்கப்பட்ட புகாரும் நிலுவையில் உள்ள நிலையில் இத்தகைய சந்திப்பு என்பது பல கோணங்களில் சந்தேகத்தை எழுப்புவதுடன் ஆளுநருக்கும் முதல்வருக்கும் சமசரசம் ஏற்படுள்ளது என்ற செய்தியை பொதுமக்களிடம் கொண்டு சேர்த்துள்ளது. தோழமை கட்சிகள் பங்கேற்காத விருந்தில் தோழமைக்கு தலைமையேற்று வழிநடத்தும் திமுக பங்கேற்று இருப்பது எதிர்காலத்தில் கூட்டணி விஷயத்தில் திமுக முடிவில் புதிய மாற்றம் ஏற்படுமா? புதிய கூட்டணி ஏற்படுமா? அல்லது 2024 நாடாளுமன்ற தேர்தல் வரை திமுக தலைமையில் தற்போதுள்ள கூட்டணிகள் தொடருமா? என்ற கேள்வியையும் ஆளுநர் மாளிகை தேநீர் விருந்தின் மூலம் சந்தேகங்களை எழுப்புகிறது. ஒரு வகையில் பார்த்தால் தமிழ்நாட்டின் நலன் கருதி மத்திய அரசோடு சுமூக உறவை மேம்படுத்துவதற்கும் இந்த ஆளுநர் முதல்வர் சந்திப்பு தேனீர் விருந்து அமையலாம் என்கிறது டெல்லி வட்டார தகவல்.



# இறுதிக்கட்ட படப்பிடிப்பில் சந்திரமுகி 2

**நீண்ட இடைவெளிக்கு பிறகு தமிழ் சினிமாவில் நடித்து வரும் கங்கனா ரனாவத், சந்திரமுகி 2 படத்தின் க்ளைமேக்ஸ் பாடல் காட்சிக்கான ஒத்திகையை தொடங்கியுள்ளார்.**

2008ம் ஆண்டு வெளியான தாம் தூம் படத்தின் மூலம் தமிழில் அறிமுகமானவர் கங்கனா ரனாவத். தொடந்து நீண்ட இடைவெளிக்கு பிறகு தலைவி படத்தின் மூலம் தமிழில் ரீஎன்ட்ரி கொடுத்த அவர், தற்போது பி.வாசு இயக்கத்தில், ராகவா லாரன்ஸ் நடித்து வரும் சந்திரமுகி 2 படத்தில் முக்கிய கேரக்டரில் நடித்து வருகிறார்.

இந்த படத்தின் இறுதிக்கட்ட படிப்பிடிப்பு விறுவிறுப்பாக நடைபெற்று வரும் நிலையில், கங்கனா சமீபத்தில் வெளியிட்ட ஒரு புகைப்படத்தில், “சந்திரமுகி 2 படத்தின் க்ளைமாக்ஸ் பாடலுக்கான ஒத்திகையை கலா மாஸ்டர் ஜியுடன் தொடங்கியதாக தெரிவித்துள்ளார். பாடலை கோல்டன் குளோப் வின்னர் ஸ்ரீ எம்.எம். கீரவாணி ஜி இசையமைத்துள்ளார், புகழ்பெற்ற ஸ்ரீ பி. வாசு ஜி இயக்கியுள்ளார் என்று குறிப்பிட்டுள்ளார்.

கடந்த 2005ம் ஆண்டு ரஜினிகாந்த் பி.வாசு கூட்டணியில் வெளியான சந்திரமுகி படம் பெரிய வசூல் சாதனை படைத்தது. இந்த படத்தில் ஜோதிகாவின் நடிப்பு பலரின் பாராட்டுக்களை பெற்றது. இந்த படத்தின் 2ம் பாகமாக தற்போது சந்திரமுகி 2 தயாராகி







வருகிறது. அழகு மற்றும் நடனத் திறமைக்கு பெயர் பெற்ற கங்கனா இந்த படத்தில் அரசனின் அவையில் நடனக் கலைஞர் கேரக்டரில் நடிக்கிறார்.

ட்விட்டரைத் தவிர, கங்கனா தனது இன்ஸ்டாகிராமிலும் தனது பாடல் ஒத்திகை தொடர்பான பதிவுகளை வெளியிட்டுள்ளார். இந்த படம் கங்கனாவின் கடைசி ஹிந்தி படத்தை விட மிகவும் சவாலான கேரக்டரில் நடிப்பதாக குறிப்பிட்டுள்ளார். முன்னாள் பிரதமர் இந்திரா காந்தியின் கதாபாத்திரத்தில் கங்கனா நடித்திருந்தார்.

சில நாட்களுக்கு முன்பு எமர்ஜென்சி படப்பிடிப்பை முடித்த கங்கனா இந்த படத்தின் படப்பிடிப்பின் போது தான் அனுபவித்த கஷ்டங்கள் பற்றிய விரிவான பதிவை வெளியிட்டிருந்தார். “எனது சொத்துக்கள் அனைத்தையும் அடமானம் வைப்பது முதல் எனக்குச் சொந்தமான ஒவ்வொரு பொருளையும் முதல் ஷெட்யூலின் போது டெங்கு நோயால் கண்டறியப்பட்டது மற்றும் ஆபத்தான முறையில் குறைந்த இரத்த அணுக்களின் எண்ணிக்கை இருந்தபோதிலும் அதைப் படமாக்கியது வரை, ஒரு தனிநபராக எனது கதாபாத்திரம். கடுமையாக சோதிக்கப்பட்டது. என் உணர்வுகளைப் பற்றி நான் மிகவும் வெளிப்படையாக பேசியிருந்தேன்.

ஆனால் நான் இதையெல்லாம் பகிரவில்லை, ஏனென்றால் தேவையில்லாமல் கவலைப்படுபவர்கள் மற்றும் நான் வீழ்ச்சியடைவதைப் பார்க்க ஆசைப்படுபவர்கள் என்னை கஷ்டப்படுத்த எல்லாவற்றையும் செய்கிறார்கள். என் வலியின் இன்பத்தை அவர்களுக்கு கொடுக்க நான் விரும்பவில்லை என்று பதிவிட்டுள்ளார்.



**ஆஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் தொடர் மெல்போர்ன் நகரில் நடந்து வருகிறது. இந்நிலையில், ஆண்கள் ஒற்றையர் இறுதிப்போட்டியில் நோவக் ஜோகோவிச் (செர்பியா) சிட்சிபாஸ் (கிரீஸ்) பலப்பரீட்சை நடத்தினர்.**

*தொடக்கம் முதலே பரபரப்பாக அரங்கேறிய இந்த ஆட்டத்தில் ஆரம்பம் முதலே ஆதிக்கம் செலுத்தி ஜோகோவிச் சிறப்பாக விளையாடினார். இதனால் அவர் 63, 76 , 76 என்ற நேர் செட் கணக்கில் சிட்சிபாஸை வீழ்த்தினார்.*

*இந்த அபார வெற்றியின் மூலம் ஜோகோவிச் தனது 10வது ஆஸ்திரேலிய ஓபன் சாம்பியன் பட்டம் வென்றார். இது ஜோகோவிச் வென்றுள்ள 22வது கிராண்ட்ஸ்லாம் பட்டமாகும். இந்த வெற்றியின் மூலம், ஜோகோவிச் ஏடிபி தரவரிசையில் நம்பர் 1 இடத்திற்கு மீண்டும் திரும்பியுள்ளார். மேலும், ஸ்பெயின் வீரர் ரபெல் நடாலின் (22 கிராண்ட்ஸ்லாம்) சாதனையை ஜோகோவிச் முறியடுத்துள்ளார்.*

*ஆஸ்திரேலியாவில் ஜோகோவிச்சின் 10வது கோப்பை வென்று அவர் ஏற்கனவே வைத்திருந்த சாதனையை முறியடித்துள்ளார். அவரது 22 பெரிய சாம்பியன்ஷிப்புகள், விம்பிள்டனில் இருந்து 7 , யு.எஸ். ஓபனில் இருந்து 3 மற்றும் பிரெஞ்ச் ஓபனில் இருந்து 2 , டென்னிஸ் வரலாற்றில் என அசத்தல் சாதனை படைத்துள்ளார்.*

*கடந்த ஆண்டு நடந்த ஆஸ்திரேலிய ஓபன் தொடரில் ஜோகோவிச் தடுப்பூசி போட்டுக் கொள்ளாததால் அந்த நாட்டிலிருந்து வெளியேற்றப்பட்டார். ஆஸ்திரேலிய ஓபனில் பங்கேற்க அனுமதிக்கப்படாத ஒரு வருடத்திற்கு பிறகு, 35 வயதான அவர் நம்பமுடியாத கம்பேக் கொடுத்து மிரட்டியுள்ளார்.*


*முன்னதாக, முக்கிய இறுதிப் போட்டிகளில் சிட்சிபாஸ் 02 என்று தோல்வி அடைந்துள்ளார். 2021 பிரெஞ்சு ஓபனில் ஜோகோவிச்சிடம் தோற்றார் என்பது குறிப்பிடத்தக்கது.*



# நடாலின் சாதனையை முறியடித்த ஜோகோவிச்!




# கள ஆய்வில் முதலமைச்சர்!



**முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் உங்களில் ஒருவன் என்று, கேள்வி பதில் வடிவில் வீடியோ வெளியிட்டுள்ளார். அதில், களத்தில் ஆய்வில் முதலமைச்சர் திட்டத்தின்படி மாவட்டம் தோறும் சுற்றுப் பயணம் செய்ய உள்ளதாகவும் முதலமைச்சருக்கு சனி, ஞாயிறு ஆஃபீஸ் நேரம் கிடையாது என்று தெரிவித்துள்ளார்.**

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் உங்களில் ஒருவன் என்ற முழக்கத்தின்படி, கேள்வி பதில் வடிவில் வெளியிட்டுள்ள வீடியோவில் கூறியிருப்பதாவது:

**கேள்வி: ஞாயிற்றுக்கிழமைகூட ஆய்வுப் பணிகளை மேற்கொள்கிறீர்களே?**

மு.க. ஸ்டாலின்: முதலமைச்சருக்கு சனிக்கிழமை, ஞாயிற்றுக்கிழமை அலுவலக நேரம் எல்லாம் கிடையாது. சென்னையில் கன மழை பெய்தபோது மக்கள் எந்த பாதிப்பும் இல்லாமல் நிம்மதியாக இருந்தார்கள் என்றால், அதற்கு நம்ம அரசு முன்கூட்டியே எடுத்த தீவிர நடவடிக்கைகள்தான் காரணம். அதில் இன்னும் சில வேலைகள் மீதி இருக்கிறது என்று அப்போதே கூறினேன். அந்த மழைநீர் வடிகால் பணிகளை நேரில் ஆய்வு செய்தேன். மழையால் பாதிக்கப்பட்ட சாலைகளை சீரமைக்கிற பணி இப்போது தீவிரமாக நடந்துகொண்டிருப்பதைப் பார்த்தேன். கிண்டியில் கட்டப்பட்டுவரும் உயர்தர பல்நோக்கு மருத்துவமனை கட்டுமானப் பணிகளைப் பார்த்தேன்.

முதலமைச்சர் என்கிற முறையில் நானே நேரில் ஆய்வுகளை மேற்கொள்கிறபோது, அதிகாரிகள் ஊக்கத்தையும் உற்சாகத்தையும்

பெறுவார்கள். அதனால், திட்டங்களை நாம் எதிர்பார்ப்பதைவிட வேகமாக நிறைவேற்றி முடிக்கலாம். அதனால்தான், நான் கள ஆய்வுக்கு முக்கியத்துவம் தருகிறேன்.

**கேள்வி: இப்போது கள ஆய்வில் முதலமைச்சர் என்று ஒரு திட்டத்தை அறிவித்திருக்கிறீர்களே, இதனுடைய செயல்முறை எப்படி இருக்கும்?**

மு.க. ஸ்டாலின்: களப்பணி என்பது எனக்கு புதிது அல்ல. களத்தில் இருந்து வந்தவன் நான். களப்பணி ஆற்றி முன்னுக்குவந்தவன் நான். நான் சென்னையின் மேயராக இருந்தபோது மாநகரத்தின் மேம்பாட்டிற்காக பல திட்டங்களைத் தீட்டி செயல்படுத்தியுள்ளேன். குறிப்பாக சென்னை மாநகரத்தின் போக்குவரத்து நெரிசலைக் குறைக்கும் வகையில், 9 மேம்பாலங்களைக் கட்டினோம். ஒதுக்கப்பட்ட நிதியில் 30 விழுக்காடு மிச்சப்படுத்தினோம். குறிப்பிட்டக் காலத்திற்கு முன்னதாகவே அதை கட்டி முடித்தோம்.

அதே மாதிரி நான், துணை முதலமைச்சராக இருந்தபோது, உள்ளாட்சித்துறை சார்பாக ராமநாதபுரம் கூட்டுக் குடிநீர் திட்டத்தைக் குறிப்பிட்ட காலத்திற்கு முன்னதாகவே முடித்து, கலைஞரின் பாராட்டைப் பெற்றோம். அந்த திட்டத்தால் காலங்காலமாக தண்ணீர் கிடைக்காமல் வறண்டு கிடந்த ராமநாதபுரம் பூமி இன்று தண்ணீர் பஞ்சம் இல்லாத பகுதியாக மாறியிருக்கிறது. இப்படி சொல்லிக்கொண்டே போகலாம்.



தலைமைச் செயலகத்தில் திட்டங்களை உருவாக்குகிறோம். சட்டமன்றத்தில் அறிவிக்கிறோம். நிதி ஒதுக்கீடு செய்கிறோம். இந்த திட்டங்கள் எல்லாம் எவ்வளவு வேகமாக செயல்படுத்தப்பட்டிருக்கிறது என்று கோட்டையில் எனது அறையில் டேஷ்போர்டில் நாள்தோறும் பார்த்துக்கொண்டிருக்கிறேன். அதோடு, இந்த திட்டங்களின் செயல்பாட்டை நேரில் பார்த்து, முடுக்கி விடுவதற்காக அனைத்து மாவட்டங்களுக்கும் செல்ல இருக்கிறேன். முதலாவதாக பிப்ரவரி 1ம் தேதி வேலூர், ராணிப்பேட்டை, திருப்பத்தூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வரும் அரசுத் திட்டங்களை விரிவாக ஆய்வு செய்யப் போகிறேன். குடிநீர், சுகாதாரம் உள்ளிட்ட அடிப்படை வசதிகளுக்கான மக்கள் நலத் திட்டங்கள் இந்த ஆய்வில் முக்கிய அம்சங்களாக இருக்கும். சம்பந்தப்பட்ட அமைச்சர்களும் உயர் அதிகாரிகளும் ஆய்வுகளை மேற்கொள்வார்கள். துறை செயலாளர்கள், மாவட்ட ஆட்சியர்கள் அனைத்து அதிகாரிகளுடனும் கள ஆய்வில் கிடைத்த தகவல்களின் அடிப்படையில் திட்ட செயல்பாடுகளைப் பற்றி விவாதித்து அடுத்த கட்ட நடவடிக்கைகளுக்கான முடிவுகளை எடுக்கத் திட்டமிட்டுள்ளோம்.

என்னைப் பொறுத்தவரையில் முதலமைச்சர் தொடங்கி கடைநிலை அரசு ஊழியர் வரைக்கும் ஒரே நோக்கத்துடன் செயல்பட்டால் தமிழ்நாடு தலைசிறந்த மாநிலமாக மாறும். அதற்கான செயல்திட்டம் தான். கள ஆய்வில் முதலமைச்சர் என்கிற இந்த திட்டம்" என்று கூறியுள்ளார்.

# ட்விட்டர் கணக்கு இடைநீக்கம் குறித்து புதிய கொள்கை என்ன?

**சட்டவிரோத செயல்பாடு, தீங்கு விளைவித்தல் அல்லது வன்முறை அச்சுறுத்தல், பெரிய அளவிலான ஸ்பேம், தளத்தை தவறாகக் கையாளுதல் நடைபெற்றால் ட்விட்டர் கணக்குகளை மீட்டெடுக்காது என்று ட்விட்டர் நிறுவனம் தெரிவித்துள்ளது.**




அல்லது கணக்கை மீட்டெடுப்பதற்கான சமீபத்திய முறையீடு எதுவும் இல்லையென்றால் கணக்கை மீட்டெடுக்காது என்று தெரிவித்துள்ளது.

பிப்ரவரி 1ம் தேதி முதல், ட்விட்டர் கணக்கு முடக்கப்பட்டதற்கு மேல்முறையீடு செய்ய பயனர்களை அனுமதிக்கிறது. சமூக ஊடக தளத்தில் இடைநீக்கம் செய்யப்பட்ட கணக்குகளை மீட்டெடுப்பதற்கான புதிய அளவுகோலின் கீழ் மதிப்பீடு செய்யப்படும் என்று அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது. தொடர்ந்து விதிகளை மீறும் கணக்குகளுக்கு எதிராக குறைந்த கடுமையான நடவடிக்கை எடுப்பதாகவும், அதன் கொள்கைகளின் கடுமையான விதிகளை மீறினால் அல்லது மீண்டும் மீறப்பட்டால் கணக்கு இடைநீக்கம் செய்வதாக ட்விட்டர் தளம் கூறியுள்ளது.

ட்விட்டர் கணக்கு இடைநீக்கம் குறித்த ட்விட்டர் நிறுவனத்தின் புதிய கொள்கை கடந்த ஆண்டு டிசம்பரில், ட்விட்டர் விதிகளை மீறியதற்காக நிரந்தர இடைநீக்கம் சரியான நடவடிக்கை என்று பல கொள்கைகளை அடையாளம் கண்டுள்ளதாக அந்நிறுவனம் கூறியது. ட்விட்டர் கொள்கைகளை மீறியதற்காக முடக்கப்பட்ட கணக்குகளை மீண்டும் மீட்டெடுக்கத் தொடங்கியுள்ளது.

சட்டவிரோத செயல்பாடு, தீங்கு விளைவித்தல் அல்லது வன்முறை அச்சுறுத்தல், பெரிய அளவிலான ஸ்பேம், தளத்தை தவறாகக் கையாளுதல் நடைபெற்றால் ட்விட்டர் கணக்குகளை மீட்டெடுக்காது என்று ட்விட்டர் நிறுவனம் தெரிவித்துள்ளது. அல்லது கணக்கை மீட்டெடுப்பதற்கான சமீபத்திய முறையீடு எதுவும் இல்லையென்றால் கணக்கை மீட்டெடுக்காது என்று தெரிவித்துள்ளது.

“தொடர்ந்து கொள்கையை மீறும் ட்வீட்களை அணுகுவதைக் கட்டுப்படுத்துவது அல்லது கணக்கைத் தொடர்ந்து பயன்படுத்துவதற்கு முன், ட்வீட்களை அகற்றும்படி கேட்டுக் கொள்வது போன்ற குறைந்த கடுமையான நடவடிக்கைகளை எடுப்போம். எங்கள் கொள்கைகளை கடுமையாக அல்லது தொடர்ந்து மீறினால் கணக்கு முடக்கப்படும்” என்று ட்விட்டர் நிறுவனம் தெரிவித்துள்ளது.

ட்விட்டரில் கடுமையான விதிமீறல்களில் பின்வருவன அடங்கும். சட்டவிரோத உள்ளடக்கம் அல்லது சட்டவிரோத செயல்பாட்டில் ஈடுபடுதல், வன்முறை அல்லது தீங்கு விளைவித்தல் அல்லது அச்சுறுத்துதல், அந்தரங்க உரிமை மீறல், ட்விட்டர் தளத்தை தவறாகக் கையாளுதல் அல்லது ஸ்பேம் மற்றும் பயனர்களை இலக்கு வைத்து துன்புறுத்துவதில் ஈடுபடுதல் ஆகியவை அடங்கும்.

எலோன் மஸ்க்கின் தலைமையின் கீழ் ட்விட்டர் கணக்கு முடக்கம் மற்றும் மீட்டெடுப்பு

கடந்த அக்டோபரில் எலோன் மஸ்க் ட்விட்டர் நிறுவனத்துக்கு பொறுப்பேற்றதில் இருந்து, ட்விட்டர் கணக்கு முடக்கம் (இடை நிறுத்தம்) மற்றும் மீட்டெடுப்பது ஆகியவற்றின் அடிப்படையில் ட்விட்டர் மென்மையான போக்கைக் கொண்டுள்ளது. நவம்பரில், எலான் மஸ்க் நடத்திய கருத்துக் கணிப்பின் அடிப்படையில் டொனால்ட் ட்ரம்பின் கணக்கை ட்விட்டர் தளம் மீண்டும் பயன்பாட்டுக்கு மீட்டுக் கொடுத்தது. சமூக ஊடகத் தளத்தில் மிகக் குறைந்த பெரும்பான்மை பயனர்கள் முன்னாள் அமெரிக்க ஜனாதிபதியின் ட்விட்டர் கணக்கு மீதான தடையை நீக்குவதற்கு ஒரு வருடத்திற்கு முன்பு வாக்களித்தனர்.

ட்விட்டர் நிறுவனம் ஒரு பயனர் கருத்துக்கணிப்பு மூலம் ட்ரம்ப் கணக்கை ட்விட்டரில் மீண்டும் செயல்படுத்தியது. ஆனால், ட்விட்டர் நிறுவனம் ஒரு உள்ளடக்க மதிப்பாய்வு கவுன்சிலை உருவாக்கும் என்றும் அந்த கவுன்சில் கூடுவதற்கு முன்பு பெரிய உள்ளடக்க முடிவுகள் அல்லது ட்விட்டர் கணக்கு மீட்டெடுப்பது எதுவும் நடக்காது என்றும் எலான் மஸ்க் முன்னர் வலியுறுத்திய போதிலும் இந்த நடவடிக்கை வந்துள்ளது. ஆனால், இதுவரை, கவுன்சில் அமைக்கப்பட்டதா என்பது தெரியவில்லை.

அக்டோபரில் எலான் மஸ்க் ட்விட்டரைக் கையகப்படுத்திய நேரத்தில், யூத எதிர்ப்புக் கருத்துக்களை வெளியிட்டதற்காக ட்விட்டர் தளத்தில் இருந்து தடைசெய்யப்பட்ட ராப்பர் கன்யே வெஸ்டும் தனது கணக்கை மீட்டெடுத்தார். இருப்பினும், டிசம்பரில், வன்முறையைத் தூண்டுவதைத் தடைசெய்யும் தளத்தின் விதிகளை மீறியதற்காக அவரது கணக்கு மீண்டும் முடக்கப்பட்டது.

கடந்த டிசம்பரில் ட்விட்டர், அமெரிக்காவில் உள்ள முக்கிய பத்திரிகைகளான நியூயார்க் டைம்ஸ், வாஷிங்டன் போஸ்ட் மற்றும் சி.என்.என் போன்றவற்றின் கணக்குகளை கோடீஸ்வரர்களின் விமானம் பற்றிய பொதுத் தரவுகளை வெளியிடுவதற்கு தடை செய்தது. இந்த தடை விதிக்கப்பட்ட சில மணிநேரங்களில், எலான் மஸ்க் ஒரு ட்விட்டர் வாக்கெடுப்பை நடத்தினார். அவர் பத்திரிகைகளின் கணக்குகளை மீட்டெடுக்க வேண்டுமா என்று கேட்டார். வாக்கெடுப்பில் 59 சதவீத பயனர்கள் மீட்டெடுப்பதற்கு ஆதரவாக வாக்களித்த பிறகு அவற்றின் கணக்குகள் மீட்டெடுக்கப்பட்டது.

# பா.ஜ.க.வில் இருந்து 5 பேர் நீக்கம்..

## அண்ணாமலை அதிரடி நடவடிக்கை!



**தமிழ்நாடு பாஜக மாநிலத் தலைவர் கு. அண்ணாமலை வெளியிட்டுள்ள அறிக்கையில், “சென்னை மேற்கு மாவட்டத்தில் ஜன.29ஆம் தேதி மாவட்ட செயற்குழு கூட்டம் நடைபெற்றது.**

அப்போது கட்சிக்கு களங்கம் விளைவிக்கும் வகையில் ஈடுபட்ட, மாவட்ட துணை தலைவர் பிரகாஷ், நெசவாளர் பிரிவு மாநில செயலாளர் மிண்ட் ரமேஷ், மாநில பொதுக்குழு உறுப்பினர் சசிதரன், பொருளாதார பிரிவு மாவட்டத் தலைவர் புருஷோத்தமன், மாநில செயற்குழு உறுப்பினர் சென்னை சிவா ஆகியோர் கட்சியில் இருந்து தற்காலிகமாக நீக்கப்படுகிறார்கள்” என அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் மேற்கூறிய 5 பேருடன் கட்சித் தொண்டர்கள், நிர்வாகிகள் எந்த வித தொடர்பும் வைத்துக் கொள்ள கூடாது எனவும் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாடு பாரதிய ஜனதா கட்சியில் இருந்து முக்கிய நிர்வாகிகள் 5 பேர் நீக்கப்பட்ட சம்பவம் அரசியல் வட்டாரத்தில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# வருமான வரி தள்ளுபடி வரம்பு ரூ.5 லட்சத்தில் இருந்து ரூ.7 லட்சமாக உயர்வு




**நிதியாண்டுக்கான பட்ஜெட்டை மக்களவையில் மத்திய நிதியமைச்சா் நிா்மலா சீதாராமன் தாக்கல் செய்தாா். அடுத்த ஆண்டு மக்களவைத் தோ்தல் நடைபெற உள்ள நிலையில், பிரதமா் மோடி தலைமையில் தாக்கல் செய்யப்படும் கடைசி பட்ஜெட் இதுவாகும்.**

நிர்மலா சீதாராமன் தாக்கல் செய்யும் 5 வது பட்ஜெட் இது. இந்த பட்ஜெட்டும் காகிதமில்லாமல் டிஜிட்டல் பட்ஜெட்டாக தாக்கல் செய்யப்பட்டது.

வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ள கர்நாடகாவுக்கு ரூ.5,300 கோடி நிதியுதவி வழங்க மத்திய அரசு முடிவு செய்துள்ளதாக நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் பட்ஜெட் உரையில் தெரிவித்துள்ளார்.


202324ம் ஆண்டுக்கான மத்திய பட்ஜெட் இன்று தாக்கல் செய்யப்பட்டது. நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத்தொடர் நேற்று (ஜனவரி 31) ஜனாதிபதி திரௌபதி முர்மு உரையுடன் தொடங்கியது. அதனைத் தொடர்ந்து இன்று மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் 202324ம் ஆண்டுக்கான பட்ஜெட்டை தாக்கல் செய்தார்.

தொடர்ந்து 2வது முறையாக வெற்றி பெற்ற பாஜக அரசின் கடைசி பட்ஜெட்டான இது நாட்டு மக்கள் மத்தியிலல் பெரிய எதிர்பார்ப்பை ஏற்படுத்தியது. இந்த எதிர்பார்ப்புக்கு மத்தியில் பட்ஜெட் உரையை வாசித்த நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன், மூலதன முதலீட்டு செலவு 33 சதவீதம் அதிகரித்து ரூ10 லட்சம் கோடியாக உயர்த்தப்படும்.

குழந்தைகள் மற்றும் இளைஞர்கள் பயன்பெறும் வகையில் டிஜிட்டல் நூலகம் அமைக்கப்படும். பிரதமரின் ஆவாஸ் யோஜனா திட்டத்திற்கான செலவு, 66 சதவீதம் கூடுதலாக, ரூ79000 கோடியாக உயர்த்தப்படும். கிராமங்களில் வேளான் ஸ்டார்ட்அப் நிறுவனங்கள் தொடங்க ஊக்குவிக்கப்படும்.

157 புதிய செவிலியர் கல்லூரிகள் தொடங்கப்படும். கடுமையான வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ள கர்நாடகத்தின் மத்திய பகுதிக்கு நிதியுதவி அளிக்கும் வகையில் ரூ5300 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்று நிர்மலா சீதாராமன் தனது பட்ஜெட் உரையில் தெரிவித்துள்ளார். கர்நாடகாவில் விரைவில் சட்டசபை தேர்தல் நடைபெற உள்ள நிலையில், மத்திய அரசின் இந்த நிதியுதவி அறிவிப்பு பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது

# ஈரோடு கிழக்கு இடைத்தேர்தல் : இ.பி.எஸ் தரப்பு வேட்பாளராக கே.எஸ் தென்னரசு அறிவிப்பு



**ஈரோடு கிழக்கு தொகுதி இடைத் தேர்தலில் அதிமுக எடப்பாடி பழனிச்சாமி அணியின் வேட்பாளராக கே.எஸ்.தென்னரசு அறிவிக்கப் பட்டுள்ளார்.**

ஈரோடு கிழக்கு தொகுதியில் எம்எல்ஏவாக இருந்த ஈவெரா திருமகன் சமீபத்தில் மரணமடைந்த நிலையில், காலியாக உள்ள அந்த தொகுதிக்கு வரும் பிப்ரவரி 27ந் தேதி இடைத்தேர்தல் நடைபெற உள்ளது. இதனால் கடந்த இரண்டு வார காலமாக தமிழக அரசியல் கட்சிகள் இந்த தேர்தலுக்கான பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதில் ஆளுகட்சி சார்பில் காங்கிரஸ் போட்டியிடும் நிலையில், மறைந்த ஈவெரா திருமகன் தந்தை ஈ.வி.கே.எஸ்.இளங்கோவன் போட்டியிடுகிறார். அதேபோல் அதிமுக சார்பில் யார் போட்டியிடுவர் என்ற எதிர்பார்ப்பு நிலவியது. இதில் அதிமுக போட்டியிடுமா அல்லது கூட்டணி கட்சியான பாஜகவுக்கு இந்த தொகுதியை விட்டுக்கொடுக்குமா என்ற எதிர்பார்ப்பு ஒரு பக்கம் இருந்தது.

அதே சமயம் தற்போது ஓ.பி.எஸ், இ.பி.எஸ் என அதிமுக 2 அணிகளாக பிரிந்துள்ள நிலையில், இ.பி.எஸ் தரப்பில் வேட்பாளர் அறிவிக்கப்பட்டால் நாங்களும் வேட்பாளரை நிறுத்துவோம் என்று ஓ.பி.எஸ் தரப்பு அறிவித்தது. இதனால் பெரிய குழப்பம் ஏற்பட்ட நிலையில், பாஜக இந்த தேர்தலில் போட்டியிடுகிறதா என்ற கேள்வியும் இருந்தது.

இதனிடையே ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலில் அதிமுக இபிஎஸ் அணி சார்பில் கே.எஸ்.தென்னரசு அறிவிக்கப்பட்டுள்ளார். ஏற்கனவே கடந்த 2001 மற்றும் 2016ம் ஆண்டு என இரண்டு முறை சட்டமன்ற உறுப்பினராக வெற்றி பெற்றுள்ள கே.எஸ்.தென்னரசு தற்போது ஈரோடு மாநகர் மாவட்ட எம்.ஜி.ஆர் மன்ற செயலாளராக உள்ளார்.

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தல் அறிவிக்கப்பட்டதில் இருந்து அதிமுகவின் நிலைபாடு என்ன என்பது குறித்து பெரிய எதிர்பார்ப்பு நிலவிய நிலையில், அதிமுக இபிஎஸ் தரப்பு தற்போது தனது வேட்பாளரை அறிவித்துள்ளது. இந்த வேட்பாளரை பாஜக ஆதரிக்குமா? ஓபிஎஸ் தரப்பு அடுத்து என்ன செய்யப்போகிறது? கே.எஸ்.தென்னரசு இரட்டை இலை சின்னத்தில் போட்டியிடுவாரா என்ற அடுக்கடுக்கான கேள்விகள் எழுந்துள்ளது.

# வன்னியர் VIP திருமண தகவல் மையம்




**பதிவுக் கட்டணம் ரூ.3000 வங்கியில் செலுத்தலாம்**

## அக்னி மலர்கள்

விஐபி சந்தா ரூ.2000
நிறுவனர் சந்தா ரூ.5000

**விளம்பர கட்டண விபரம்**

| | | |
|---|---|---|
| வெளிப்புற அட்டை | (பல வண்ணங்களில்) | ரூ.50,000 |
| உட்புற அட்டை | (பல வண்ணங்களில்) | ரூ.25,000 |
| உட்புற அட்டை | (இரு வண்ணங்களில்) | ரூ.15,000 |
| உட்புற அட்டை | (ஒரு வண்ணத்தில்) | ரூ.10,000 |
| உட்பக்கங்கள் | முழுபக்கம் (கருப்பு–வெள்ளை) | ரூ.5,000 |
| உட்பக்கங்கள் | அரைபக்கம் (கருப்பு–வெள்ளை) | ரூ.3,000 |
| உட்பக்கங்கள் | கால் பக்கம் (கருப்பு–வெள்ளை) | ரூ.1,500 |

*சந்தாத் தொகை மற்றும் விளம்பரங்கள் அனுப்ப வேண்டிய முகவரி*

*அக்னி மலர்கள் (மாத இதழ்)*
*எண்.5, முத்துக்கிருஷ்ணன் தெரு*
*(முதல் மாடி)*
*பாண்டிபஜார், தியாகராயநகர்*
*சென்னை - 600 017.*
*தொலைபேசி - 044 28153055, 044 28154055*
*மின்னஞ்சல் :* agnimalarkalmonthly@gmail.com

Subcription Bank Address:

NAME : **AGNIMALARKAL**
A/C NO: **0345002100270040**
BANK NAME : **PUNJAB NATIONAL BANK**
IFS NO : **PUNB0034500**
BRANCH : **T.NAGAR**

Contact : 9962121452, 044-28154055, 044-28153055

**விளம்பரம் செய்து வியாபாரத்தை உயர்த்துவோம்!**
**குறைந்த செலவில் வரவைப் பெருக்குவோம்!**

**AGNI MALARKAL** TAMIL MONTHLY OWNED & PUBLISHED BY R.PANEERSELVAM, NO.5, MUTHUKRISHNAN STREET, PONDY BAZAR, T.NAGAR, CHENNAI -600 017 AND PRINTED BY R.PANEERSELVAM, MEERA OFFSET PRINTERS, NO.104, V.R.PILLAI STREET, TRIPLICANE, CHENNAI-600005 EDITOR: **R. PANNEERSELVAM.**



DNC Groups
SINCE 1979
WINNER FOR
"MOST TRENDY SILK SAREE"
TIMES BUSINESS AWARDS
Sri Mahalakshmi Silk
#14/49, D.N.C. CHIT FUNDS BUILDING, NORTH BOAG ROAD,
T.NAGAR CHENNAI - 17 ( Behind T.Nagar AGS Theatre )
044 42133044
CAR PARKING AVAILABLE
CHIT SCHEME AVAILABLE

RNI.No.TNTAM/2013/53616, Postal Regn No.TN/CH (C)/597/2022-2024 - WPP No. TN/PMG(CCR) WPP-669/2022-2024 AGNI MALARKAL TAMIL MONTHLY, Date of Publishing 1st week of Every Month.

